www.tamilarangam.net

THAYAGAM

# தாயகம்

5 . 8 . 94

75¢

உண்மை:6
தேடல்:5

## பலாலி முகாம் மீது புலிகள் தாக்குதல்

ஹெலிகொப்டர் சேதமாக்கப்பட்டது

தேர்தலைக் குழப்பும் முயற்சி

### பிலிப்பைன்ஸில் மிண்டனுவோ தீவிரவாதிகளுக்கு புலிகள் பயிற்சி!

### சீன ஆயுதம் வாங்க பிலிப்பைன்ஸ் தளம்!

மணிலா பத்திரிகை செய்தி

### எதிர்க்கட்சி ஆதரவாளர் கொலையில் அமைச்சர் அதிகாரி கைது

### சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம்

**உண்மையான செய்தியை மக்களுக்கு கொடுக்க விரும்பும் புலிகளின் குரல்**

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்

SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

www.tamilarangam.net


# தரத்தின் சின்னம்

## நிரு பிராண்ட்®

## *Niru Brand*®

**நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்**
*Niru Brand*® **தயாரிப்புகளே.**

## போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்

நிரு பிராண்ட் தயாரிப்புகளின் தரம்
பாவித்தவர்களுக்கு மட்டுமே புரியும்.

**உங்கள் கைகளில் கிடைப்பது தரமான**
**நிரு பிராண்ட் தயாரிப்புகளா?**
**என்பதை உறுதிப்படுத்துங்கள்**

*Niru Enterprises Inc,*

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா
இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு
எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

## எதிர்க்கட்சி ஆதரவாளர் கொலையில் அமைச்சர் கைது

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் கொலை சம்பந்தமாக தேடப்பட்டு சரணடைந்த அமைச்சர் ஒருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். அனுராதபுரத்தில் சுதந்திரக் கட்சி ஆதரவாளர் கொல்லப்பட்டது தொடர்பாக தபால் தந்தி அமைச்சர் ஏ.எம்.எஸ்.அதிகாரியை பிடிக்கும்படி பொலிசாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து அவர் சரணடைந்திருந்தார். கொல்லப்பட்ட பியசேனவின் கன்னத்தில் அமைச்சர் அறைந்ததாகவும் ஆனால் கொலைக்கும் அமைச்சருக்கும் சம்பந்தம் இல்லை என்பதால் அவர் ஐயாயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டதாக மாஜிஸ்திரேட் சிறிசுனந்த ஹேரத் றெய்ட்டர் நிருபருக்குத் தெரிவித்திருக்கிறார். ஆகஸ்ட் பத்தாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி அமைச்சருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

விவசாயியான பியசேன என்ற 38 வயது சுதந்திரக் கட்சி ஆதரவாளரை அமைச்சரும் அவரது இருபது ஆதரவாளர்களும் தடிகள் கொண்டு தாக்கியதுடன் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல விடாமல் ஒன்றரை மணி நேரம் தடுத்திருந்தனர். பின்னர் பொலிசாரிடம் கொண்டு செல்லப்பட்ட பியசேன அங்கு மரணமானார்.

இன்னொரு எதிர்க்கட்சி ஆதரவாளர் கொல்லப்பட்டது தொடர்பாக இதே மாஜிஸ்திரேட்டினால் மாகாணசபை அமைச்சர் ஒருவரின் மகன் சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

இதுவரையும் 947 முறைப்பாடுகள் தேர்தல் பற்றி பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளன. எட்டு எதிர்க்கட்சி ஆதரவாளர்களும் ஒரு ஐ.தே.கட்சி ஆதரவாளரும் உட்பட 11 பேர் இதுவரை தேர்தல் வன்முறைகளில் கொல்லப்பட்டுள்ளனர்.

சிலாபத்தில் லுணுவிலவில் ஐ.தே.கட்சியினர் பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் வீடுகளை எரித்துச்

4 ம் பக்கம் பார்க்க..

## பலாலி முகாம் மீது புலிகள் தாக்குதல்

பலாலி முகாம் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் விமானப்படையினர் ஒருவரும் ஆறு புலிகளும் கொல்லப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். புலிகளின் தற்கொலைப்படை அணி ஒன்று செவ்வாய்க்கிழமை பலாலி முகாம் மீது நடத்திய இந்த தாக்குதலில் ஒரு பெல் 212 ரக ஹெலிகொப்டர் சேதத்துக்குள்ளாக்கப்பட்டது. சுமார் இருபது புலிகள் வரை விமானங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் இடத்தின் மீது சிறு ஆயுதங்கள், றொக்கட்கள், மோட்டார்கள் கொண்டு தாக்கினர். இதில் இரண்டு விமானப்படையினர் காயங்களுக்குள்ளாயினர். தாக்குதல் நடத்தியவர்கள் கடல் மூலமாக வந்ததாகவும் கும்மிருட்டில் அவர்களைப் பார்க்க முடியவில்லை என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

### ஹெலிகொப்டர் சேதப்படுத்தப்பட்டது

நடத்தப்பட்ட தாக்குதலை இராணுவம் முறியடித்ததுடன் காயமடைந்த இருவரைக் கைப்பற்றி, இறந்த ஆறு பேரின் உடல்களையும் ஆயுதங்கள், சைலன்ஸர், இரவில் பார்க்கும் கண்ணாடி, ரேடியோ, வெடிமருந்துகள் என்பவற்றையும் மீட்டுள்ளது என்று அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார். அந்த முகாமில் இருந்த தாக்குதல் விமானங்கள் மூன்று உடனடியாக வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டன. காயமடைந்த இருவரும் இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தான் இந்த முகாமில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அறிந்து கொள்ள சிரேட்ட இராணுவ அதிகாரிகள் விஜயம் செய்திருந்தனர். இந்த விமானத்தளம் மீது தாக்குதல் ஒன்று நடத்தப்படலாம் என்று எதிர்பார்த்திருந்ததாக இராணுவ அதிகாரிகள் கூறினர். இந்த தாக்குதல் தேர்தலைக் குழப்பும் புலிகளின் நோக்குடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## எதிர்க்கட்சிக் கூட்டத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம்

கண்டியில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டம் ஒன்றின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் எண்மர் காயமடைந்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை ஹசகல பகுதியில் நடைபெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டத்தில் சந்திரிகாவின் வருகையை எதிர்பார்த்து திரண்டிருந்த இருபதாயிரம் பேர் கொண்ட கூட்டத்தின் மீது ஐ.தே. கட்சியினர் கல்லெறிந்தனர். இதில் ஒருவர் கடுங்காயங்களுக்குள்ளானார். இதற்குள் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதன் பின்னர்

4 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'உண்மையான செய்தியை மக்களுக்கு கொடுக்க விரும்பும்' புலிகளின் வானொலி

## றெய்ட்டர் நிருபர் தகவல்

புலிகளின் வானொலிச் சேவை பற்றி றெய்ட்டர் நிருபர் செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வசதியான வீடு ஒன்றில் தர்மலிங்கம் சிந்துஜா ஒலிவாங்கியின் முன்னால் அமர்ந்து செய்தி வாசித்துக் கொண்டிருக்கிறார். இந்த செய்தி அறிக்கை இலங்கை அரசின் மீதான குற்றப் பத்திரிகையாகும். கிழக்கில் படையினரால் அறுபதாயிரம் வீடுகள் அழிக்கப்பட்டதாக சிந்துஜா சொல்கிறார். இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. காரணம் புலிகளின் வானொலி இலங்கை அரசை எந்தக் காரணத்திற்காகவும் பாராட்டுவதில்லை.

கொரில்லா வாழ்க்கை முறைக்குள்ளும் விமானக் குண்டுவீச்சுக்களுக்குள்ளும் புலிகள் ஒழுங்கான அமைப்புள்ள வானொலி நிலையம் ஒன்றை நடத்துகின்றனர். இந்த வருட இறுதியில் தொலைக்காட்சி சேவை ஒன்றை நடத்தவும் உத்தேசித்துள்ளனர். 'நாங்கள் மக்களுக்கு உண்மையான செய்தியைக் கொடுக்க விரும்புகிறோம்' என்கிறார் நிலையத்தின் இயக்குனரான ஜவான். இவர் இராணுவத்துடனான மோதலில் கால் ஒன்றை இழந்தவர்.

புலிகளின் குரல் வானொலி 86ல் ஆரம்பிக்கப்பட்டது. இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் போது நிறுத்தப்பட்டது. பின்னர் 90ல் மீண்டும் ஆரம்பமானது.

இந்த வானொலியின் சக்தி வாய்ந்த ஒலிபரப்பி வடக்கில் உள்ள காடுகளில் இருப்பதாக நம்பப்படுகிறது. இராணுவ உளவு முறைகளால் பிடிக்கப்படலாம் என்பதற்காக இது இடத்திற்கு இடம் அடிக்கடி மாற்றப்படுகிறது. புலிகளும் அது எங்கே இருக்கிறது என்பதைக் கூறுகிறார்கள் இல்லை. பண்பலை வரிசையில் நடைபெறும் ஒலிபரப்புகளின் அலைவரிசை குழப்பங்கள் காரணமாக அடிக்கடி மாற்றப்படுகிறது.

இந்த நிலையம் குளிரூட்டப்பட்டது. குளிரூட்டும் வசதி யாழ்ப்பாணத்தில் அரிதான விடயம். யாழ்ப்பாண நகருக்கு அருகில் உள்ள வீடொன்றில் இது இயங்குகிறது. இதில் முழுமையான ஒலிப்பதிவுக் கூடமும் ஒலி வெளியே செல்லாதபடி தடித்த கதவுகளும் உள்ளன.

இந்த வீட்டின் நிலக்கீழ் அறையில் கட்டுப்பாட்டறை உள்ளது. இது றெய்ட்டர் நிருபருக்கு விசேடமாகக் காண்பிக்கப்பட்டது. ஆங்கில இசைத்தட்டுக்கள் அலுமாரியில் காணப்பட்டன. இது விருந்தினருக்கும் அங்கிருப்பவர்களுக்கும் இது ஒலிபரப்பு நிலையம் தான் என்பதை நினைவூட்டுவதற்காக இருக்கலாம்.

தமிழ் விடுதலைக் கீதங்கள் ஒலிபெருக்கிகளில் அலறுகின்றன. மேசையில் மின்சார கிட்டார் ஒன்று காணப்பட்டது. ஒவ்வொரு நாளும் இரு தடவைகள் ஒரு மணி நேரம் ஒலிபரப்பப்படுகிறது. காலையில் 'தியாகிகள் பாடல்', ஐந்து நிமிடச் செய்திகள், யாழ்ப்பாண பத்திரிகைச் செய்திகள், பிரபல பாடல்கள் என்பன ஒலிபரப்பாகின்றன.

தங்கள் வானொலிக்கு ஒரு லட்சம் நேயர்கள் உள்ளனர் என்கிறார் ஜவான். இந்த ஒலிபரப்பை குடாநாட்டிலும் வடக்கின் வேறு பகுதிகளிலும் இந்தியாவிலும் கேட்கலாம். வானொலியின் வெளிநாட்டுச் செய்திகள் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் போன்றே கொழும்பு ரேடியோ, பி.பி.சி, ரேடியோ வெரித்தாஸ், இந்திய வானொலி மூலம் கிடைக்கின்றன.

குடாநாட்டில் தங்களுக்கு 150 நிருபர்கள் உள்ளதாகவும் புலிகளின் தொடர்பு கருவிகள் மூலம் செய்திகள் அனுப்பப்படுவதாகவும் கூறுகிறார் ஜவான். நிலையத்தில் ஐந்து வானொலி, தொலைக்காட்சியாளர்கள் கடமையாற்றுகின்றனர்.

இதைவிட புலிகள் மாதாந்தம் ஒரு மணி நேர வீடியோ சஞ்சிகை வெளியிடுகிறார்கள். இது யாழ்ப்பாண தியேட்டர்களிலும் வீடியோக் கடைகளிலும் கிடைக்கிறது. வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகிறது.

வெளிநாட்டில் உள்ளவர்களிடம் கிடைக்கும் பணமே இந்த ரேடியோ போன்ற திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. மீதிப் பணம் புலிகளால் அறவிடப்படும் உள்ளூர் வரிகள் மூலம் கிடைக்கிறது.

# வாக்குரிமை தந்தவர்களுக்கு வாக்களித்து நன்றியைக் காட்ட தொண்டா கோரிக்கை

ஐ.தே.கட்சியே மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை தந்தது, அந்த கட்சியின் தலைமையில் தான் சிறுபான்மை மக்கள் சுபிட்சமாக வாழலாம், ஐ.தே.கட்சியை வெற்றி பெறச் செய்வது எங்கள் கடமை என்று தொண்டமான் தேர்தல் பிரசாரங்களில் தெரிவித்துள்ளார். முன்பு எமது வாக்குரிமை பறிக்கப்பட்ட போது தற்போது எம்மிடம் வாக்கு கேட்டு வருபவர்கள் எமக்கு ஆதரவாக எதுவும் பேசவில்லை, நாம் ஐக்கியத்துடன் செயற்பட்டு வாக்குரிமையைப் பறித்த அதே அரசிடம் மீண்டும் வாக்குரிமை பெற்றோம், ஐ.தே. கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்ட பத்து தேர்தல்களில் ஐ.தே.கட்சியே வென்றுள்ளது. ஐ.தே.கட்சியை வெல்லச் செய்ய வேண்டியது எங்கள் கடமை, எமக்கு வாக்குரிமை தந்தவர்களுக்கு வாக்கைச் செலுத்தி எங்கள் நன்றியுணர்வைக் காட்ட வேண்டும் என்று தொண்டமான் பிரசாரக் கூட்டமொன்றில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

சமீப காலங்களிற்கு முன்னால் ஜனாதிபதியுடன் ஏற்பட்ட கருத்து மோதல் காரணமாக சுதந்திரக் கடசியை ஆதரிக்கக் கூடும் என்று தொண்டமான் தெரிவிந்திருந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திரிகாவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த போலிப் பத்திரிகை

பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையில் சந்திரிகா பற்றி அவதூறு செய்யும் கேலிச்சித்திரங்களை பிரசுரித்து போலியாக பத்திரிகை தயாரிக்க ஐ. தே.கட்சி எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டிருக்கிறது. கொழும்பில் உள்ள அச்சகம் ஒன்றில் அந்த பத்திரிகை வெளியிடுவது போன்று போலியாக லட்சக்கணக்கில் இந்தப் பத்திரிகையை வெளியிட்டு நாடெங்கும் வினியோகித்து குழப்பத்தை உண்டுபண்ணுவதே இதன் நோக்கமாக இருந்தது. சுமார் மூன்று லட்சம் பிரதிகள் இவ்வாறு அச்சிடப்பட்டிருந்தன. தற்போது அச்சகம் சீல் வைக்கப்பட்டதுடன் அங்கு பணியாற்றியவர்கள் விசாரணைக்குள்ளாகியுள்ளனர்.

# பிரதமர் பதவி பற்றி சந்திரிகா, சிறிமா மோதல்

சுதந்திரக் கட்சி வெற்றி பெறும் பட்சத்தில் யார் பிரதமர் ஆவது என்பதில் சுதந்திரக் கட்சிக்குள் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றால் ஜனாதிபதி சிறிமாவோவையே பிரதமர் பதவியை ஏற்கும்படி அழைக்கலாம் என்றும் சிலநேரங்களில் ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசாங்கம் அமைக்கலாம் என்றும் சந்திரிகாவின் ஆதரவாளர்கள் கருதுகின்றனர். சிறிமாவோ வைத்தியசாலையில் இருந்து திரும்பியதும் அனுரா அவரைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடியதே இந்த ஊகங்களுக்கு காரணம். இதையடுத்து சந்திரிகாவின் ஆதரவாளர்களும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்களான கே.பி.சில்வா, பேனாட் சொய்சா போன்றோரும் சிறிமாவைச் சந்தித்து சந்திரிகாவையே பிரதமராக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். ஆனால் தான் பிரதமராகி மந்திரிசபையை அமைத்த பின்னர் சந்திரிகாவிடம் ஆட்சியைக் கையளிப்பதாக சிறிமா பிடிவாதமாக கூறிக் கொண்டார். சிறிமாவின் உடல்நிலை பிரதமர் பதவிக்கான சுமைகளை சுமக்க அனுமதிக்காது என்றும் ஜனாதிபதி தேர்தலில் சிறிமாவே போட்டியிடுவதால் சந்திரிகாவை நியமிப்பது நல்லது என்றும் மற்றவர்கள் வற்புறுத்தியதை அடுத்து சிறிமாவோ இதற்கு சம்மதித்தார். இதன் பின்னர் ஜனாதிபதிக்கு இது குறித்து அறிவிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன. ஆனால் அரசியலமைப்புபடி சிறிமாவே கட்சியின் தலைவராக இருப்பதால் அவரே பிரதமராக முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தேர்தலில் சுதந்திரக் கட்சி வென்றால் சிறிமாவே ஆட்சியமைக்க அழைக்கப் படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிமாவின் மூத்தபுதல்வியான சுனித்திரா, மகன் அனுரா ஆகியோரின் ஆலோசனையின்படியே சிறிமாவோ பிரதமர் பதவியை தான் வைத்திருக்க வேண்டும் என்று கருதுவதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

# யானைச் சின்ன ஐ.தே.க கூட்டத்தை யானை குழப்பியது

ஐ.தே.கட்சியின் சின்னம் யானை என்பதாலோ என்னவோ, ஐ.தே. கட்சி கூட்டத்திற்கு யானையே வந்து விட்டது. அனுராதபுரத்தில் பழுத்தாவையில் நடைபெற்ற கூட்டத்தின் போது, ஐந்து யானைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வந்து சேர்ந்தன. கூட்டத்தில் ஏற்பட்ட சத்தம் காரணமாக கவரப்பட்டே இவை வந்திருந்தன. யானையின் ஆதரவாளர்களான ஐ.தே. கட்சியினர் யானையைக் கண்டதும் ஓட்டம் பிடித்தனர். யானைகள் மேடையைப் பிய்த்து கதிரைகளை உடைத்தன. யாரும் காயமடையவில்லை.

# தொழிலாளர், டாக்டர்கள் வேலைநிறுத்தம் பின்னணியில் பொதுஜன முன்னணி என அரசு குற்றச்சாட்டு

பியகமவில் உள்ள சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் பின்னால் பொதுஜன ஐக்கிய முன்னணி உள்ளது என்று அரசு குற்றம் சாட்டியுள்ளது. அத்துடன் கொழும்பில் உள்ள ஐந்து வைத்திய சாலைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் போக்குவரத்து, வாழ்க்கைச் செலவுப் படிகள் தர வேண்டும் என்று கோரி வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர். புகையிரத சேவைத் தொழிலாளரும் சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்கின்றனர்.

வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளருக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி உதவி செய்வதாகவும் அக்கட்சியின் வேட்பாளர்கள் வேலைநிறுத்தக்காரர்களுடன் காணப் படுவதாகவும் கலாநிதி விக்கிரம வீரசூரிய தெரிவித்திருக்கிறார்.

பியகமவில் உள்ள எட்டு கொரிய விளையாட்டுப் பொருள் உற்பத்தி நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன. ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்து நிர்வாகத்தினரை உள்ளே வைத்து மூடினர். பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தே நிர்வாகத்தினரை மீட்டனர்.

17 அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றிய டாக்டர்கள் 1500 பேர் கலந்து கொண்ட வேலைநிறுத்தம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது. அவர்களுக்கான படிகள் கொடுப்பதற்கு அரசு சம்மதித்துள்ளது. இந்த வேலைநிறுத்தத்தின் போதும் அவசர சிகிச்சைகளை இந்த டாக்டர்கள் மேற்கொண்டவண்ணமே இருந்தனர். ஜனாதிபதியும் டாக்டர்கள் சங்கமும் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் கொடுப்பனவுகளைக் கொடுக்க ஜனாதிபதி சம்மதித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேர்தலைக் கண்காணிக்க உள்நாட்டு அமைப்புகள்

இந்த தேர்தலில் வன்முறைகள் அதிகரித்து இதுவரையும் பதினொரு பேர் கொல்லப்பட்டுள்ளனர். இது குறித்து ஆச்சரியம் தெரிவிக்கப் பட்டுள்ளது. தேர்தல் வன்முறை களில் சாவடிகளைக் கைப்பற்றி வாக்குகள் திணிக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக தற்போது தேர்தலை மேற்பார்வை செய்வதற்கு பல அமைப்புகள் முன்வந்துள்ளன.

இப்போது சுதந்திரமான நியாயமான தேர்தலுக்கான அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. 23 மனித உரிமை அமைப்புகள் இணைந்து உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு தேர்தலை நியாயமான முறையில் நடத்துவதற்கு வசதியாக கண்காணிப்பு வேலைகளில் ஈடுபட வுள்ளது. தேர்தல் வன்முறைகள் முன்னெப்போதுமில்லாத அளவில் நடைபெறுகின்றன, மேற்பார்வை க்கான தேவை அவசியமாயுள்ளது என்கிறார் இதன் பேச்சாளரான சாள்ஸ் அபேசேகர. 'எங்களது நோக்கம் மும்முனைப்பட்டது, தேர்தலுக்கு முன்னைய, தேர்தல் அன்றைய, தேர்தலுக்கு பின்னான நிலைகளை அவதானிப்பது' என்கிறார் அவர்.

வாஷிங்டனில் நிலை கொண்டுள்ள சர்வதேச சமாதானப்படை என்ற அமைப்பும் சர்வதேச அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் அமைப்பும் இந்த அமைப்புடன் இணைந்து செயற்படுகின்றன. இலங்கையில் அரசியல், சமூக நெருக்கடிகளை மனதில் கொண்டு இலங்கைக்கான சர்வதேச அரச சார்பற்ற தொண்டர் நிறுவனம் அம்ஸ்டர்டாமில் ஆரம்பிக்கப்பட்டதாக அதன் இயக்குனர் பிரயன் வூல்ப் தெரிவிக்கிறார். நாட்டில் சமூக நீதியையும் மனித உரிமையையும் நிலைநாட்ட அரசியல்வாதிகளை வற்புறுத்துவதே தமது நோக்கம் என்கிறார் அவர்.

சுதந்திரமான நியாயமான தேர்தலுக்கான அமைப்பு இந்த தேர்தலைக் கண்காணிக்க பதினையாயிரம் டொலர்கள் ஒதுக்கியுள்ளது. வடக்கு கிழக்கு தவிர்ந்த மற்றப் பகுதிகளில் தேர்தலைக் கண்காணிப்பதற்கான அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பு தீவுப் பகுதிகளில் கூட தேர்தலைக் கண்காணிக்கலாம் என பிரயன் வூல்ப் எதிர்பார்க்கிறார்.

ஆனால் சர்வதேச சமாதான அணி நேரடியாக தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடாது. 'மக்கள் பயமின்றி வாக்குச்சாவடிக்கு செல்ல உதவுவதும் தேவைப்படும் இடங்களில் வழிகாட்டுவதுமே தமது நோக்கம்' என்கிறது அந்த அமைப்பு.

இந்த அமைப்புகளை விட இளைப்பாறிய தளபதிகள், இராணுவ பொலிஸ் அதிகாரிகள் கொண்ட அமைப்பு, சர்வோதயம், சுதந்திரமான பாராளுமன்றத் தேர்தலுக்கான மக்களின் செயற்பாட்டு அமைப்பு போன்ற அமைப்புகளும் கண்காணிப்பில் ஈடுபட உள்ளன.

கொமன்வெல்த் செயலகம், சர்வதேச ஜூரிகள் குழு, ஆசிய சட்ட நிறுவனம், ஐ.நாவின் அடிப்படை உரிமைகள் அமைப்பு, சார்க் அமைப்பு ஆகியவற்றின் உதவியையும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா நாடியுள்ளார்.

# தேர்தல் முடிய நாட்டை விட்டு ஓட முயற்சி

தேர்தலில் தோல்வியடைக் கூடும் என்ற அச்சம் ஐ.தே.கட்சியினர் பலருக்கு ஏற்பட்டுள்ளதால் பலர் வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விசாக்களை பெற்றுக் கொள்ள முயற்சிப்பதுடன் தேர்தல் காலத்தில் சகல வெளிநாட்டு விமானப் பயண ஆசனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிறிசேன கூரேயும் குடும்பத்தினரும் ஜப்பான் சென்றுள்ளனர். சிறிசேன கூரே தேர்தலுக்கு முதல் மீண்டும் இலங்கை வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால் வெளிநாட்டுப் பயணங்கள் ரத்துச் செய்யப்படலாம் என்ற அச்சத்தில் வர்த்தகர்களும் மாணவர்களும் பயணம் செய்வார்கள் என்றும் ஆயினும் அரசியல்வாதிகளும் பெருமளவில் ஆசனங்கள் பதிவு செய்துள்ளார்கள் என்றும் விமானப் போக்குவரத்து வட்டாரங்கள் தெரிவித்தன. பிரிட்டிஷ் விமான நிறுவனத்தின் சகல ஐரோப்பிய, அமெரிக்க பயணங்களும் முழுமையாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஆயினும் ஆகஸ்ட் மாதங்களில் அதிக பயணம் ஏற்படுவது வழமை என்றும் கூறப்படுகிறது.

# குவைத்தில் மதம் மாறும் தமிழ்ப் பெண்கள்

குவைத்தில் 1988 முதல் பத்தாயிரம் பேர் இஸ்லாம் மதத்திற்கு மாறியுள்ளனர். இதில் 65 வீதத்தினர் பெண்கள். இவர்களில் தமிழ்ப் பெண்களும் அடங்குவர். குவைத்தில் பணிப்பெண்களாக பணிபுரிந்து மதம் மாறியவர்களுக்காக தமிழ், சிங்களம் போன்றவற்றில் மசூதி வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. இவர்கள் மதம் மாறும் போது மூன்று தடவைகள் அழுத்தம் காரணமாக மதம் மாறுகிறார்களா என்று கேட்கப்படுகிறார்கள். இதற்கு அவர்கள் மறுத்தால் மதம் மாற்றப்படுவதில்லை என்று சிரேட்ட மத அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## துப்பாக்கிப்பிரயோகம்.

சில நிமிடங்களில் சந்திரிகா ஹெலிகொப்டரில் வந்து உரையாற்றி விட்டு இன்னொரு இடத்திற்கு உரையாற்ற சென்று விட்டார்.

இதுவரையும் சுமார் 11 பேர் வரை தேர்தல் வன்முறையில் இறந்திருக்கிறார்கள்.

## அமைச்சர் கைது..

சேதமாக்கியதுடன் பலர் காயமடைந்தனர். ஒருவர் எரிகாயங்களினால் மரணமானார். இது பற்றிய விசாரணைகளை இரகசியப் பொலிசார் மேற்கொண்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மிண்டனுவோ கொரில்லாக்களுக்கு புலிகள் பயிற்சி

## மணிலா பத்திரகை செய்தி

### புலிகள் ஆயுதம் கடத்தும் தளமாக பிலிப்பைன்ஸ்

சீனுவிலிருந்து பெறப்படும் ஆயுதங்களைக் கடத்துவதற்கு புலிகள் பிலிப்பைன்ஸை ஒரு தளமாகப் பயன்படுத்துகிறார்கள் என்று பிலிப்பைன்ஸ் டெய்லி என்குயைரர் தெரிவித்துள்ளது. அத்துடன் மோரோ தேசிய விடுதலை முன்னணி, மோரோ இஸ்லாமிய முன்னணி ஆகிய மின்டனுவோவைச் சேர்ந்த பிரிவினைவாதக் குழுக்களுக்கும் புலிகள் பயிற்சி அளிப்பதாக அகுயினுல்டோ முகாமிலிருந்து கிடைக்கும் உளவு அறிக்கைகள் கூறுகின்றன என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்கு ஆட் கடத்தல் செய்யும் இருவர் கைது செய்யப்பட்டு அவர்கள் விசாரணை செய்யப்பட்ட போதே இந்த ஆயுதக் கடத்தல் பற்றிய தகவல்கள் இராணுவ உளவு பிரிவுக்கு கிடைத்தது. மின்டனுவோவின் கரையோரப் பகுதிகளை பிலிப்பைன்ஸ் கடற்படையினர் ரோந்து செய்யாததால் அப்பகுதியில் அதிக சக்தி வாய்ந்த ஆயுதங்கள் புலிகளால் கடத்தப்படுவதை தடுக்க முடியாதுள்ளது.

கனடாவிற்கு செல்லும் தமிழர்களை கொண்டு செல்வதற்கான தரிப்பிடமாக பிலிப்பைன்ஸைப் பயன்படுத்தும் அமைப்பு ஒன்றையே இந்த இரண்டு பேரும் சேர்ந்தவர்கள். கள்ள டொலர் நோட்டு அச்சிடுதல், பாஸ்போட், விசா போன்றவற்றை இலங்கையர்களுக்கு 300 டொலர்களுக்கு விற்றல் போன்றன மூலம் இந்த அமைப்பு பணம் சேகரிப்பதாக கூறப்படுகிறது. பம்பங்கா மாகாணத்தில் உள்ள ஏன்ஜலஸ் நகரில் பாதுகாப்பான வீடொன்றை இந்த அமைப்பினர் பயன்படுத்துவதாகவும் பாட்டான், ஸம்பால்ஸ் பகுதிகளுக்கு செல்லும் கப்பல் ஒன்றை பயன்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

பிலிப்பைன்ஸின் தென் பகுதியில் உள்ள கடற்கரையோரம் மூலமாக சீனுவுக்குள் நுழைந்து ஆயுதங்கள் வாங்குவதாகவும் சில நேரங்களில் ஆயுதங்கள் மலேசியாவின் சபா மாநிலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மின்டனுவோவுக்கு கொண்டு வரப்படுவதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மணிலாவிலிருந்து வெளிவரும் பிலிப்பைன்ஸ் டெயிலி என்குயைரர் பத்திரிகையின் ஜூலை 30ம் திகதி பதிப்பில் இச்செய்தி வெளிவந்துள்ளது.

# வன்முறையைக் கைவிட கட்சிகளிடம் கோரிக்கை

தேர்தல் காலங்களில் வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்று சகல கட்சிகளும் கேட்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படைகளின் தளபதிகளும் கட்சிகளின் செயலாளர்களும் கலந்து கொண்ட மாநாடு ஒன்றில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டன் வணசிங்க வன்முறையில் இறங்க வேண்டாம் என்று கட்சிகளைக் கேட்டுள்ளார். அத்துடன் பகிரங்கமாக வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்று கட்சிக்காரர்களைக் கேட்டு அறிக்கை வெளியிட வேண்டும் என்றும் தேர்தல் எந்த வன்முறையும் இன்றி நடைபெறுவதை உறுதி செய்யும்படியும் கேட்டுக் கொண்டார்.

இதுவரையும் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் எண்மரும் ஐ.தே.க ஆதரவாளர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர். இதை விட 1131 முறைப்பாடுகள் பொலிசாரிடம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குருநாகலை மாவட்டத்தில் எதிர்க்கட்சி ஆதரவாளர் ஒருவர் கொல்லப்பட்டது தொடர்பாக ஐ.தே. கட்சியின் மாகாண சபை உறுப்பினர் ஒருவரும் வேறு இருவரும் கைது செய்யப்பட்டனர். தேர்தலுக்காக அறுபதாயிரம் பொலிசார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# தேர்தலுக்கு வெளிநாட்டு பார்வையாளர்கள்

எதிர்வரும் தேர்தலில் 43 வெளிநாட்டு பார்வையாளர்கள் கண்காணிப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். இச்செய்தியை சகல கட்சிகளுக்கும் நடத்திய மாநாட்டில் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்திருக்கிறார். அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்தியா, பங்களாதேஷ், மலேசியா, பாகிஸ்தான், கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சட்டத்தரணிகள், இளைப்பாறிய நீதியரசர்கள், அறிஞர்கள் ஆகியோர் இந்த தேர்தலைக் கண்காணிப்பதற்காக அடுத்த வாரம் இலங்கை வருகிறார்கள்.

இவர்களை விட 22 உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புகளைச் சேர்ந்த பத்தாயிரம் பேரும் தேர்தலைக் கண்காணிக்கவுள்ளார்கள்.

# புதுடெல்லியில் பூகம்பம்

புதுடெல்லியில் இடம் பெற்ற பூகம்பம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் கடந்த வியாழக்கிழமை கடும் மழையிலும் வீடுகளை விட்டு வெளியே நிற்க நேரிட்டது. பாரிய பாதிப்புகள் இல்லாவிட்டாலும் மக்கள் பெரும் பயம் கொண்டிருந்தனர். பலர் குண்டு வெடித்தது என்றும் விமானம் வெடித்தது என்றும் பேசிக் கொண்ட போதிலும் உண்மையில் பூகம்பமே நிகழ்ந்தது. பழைய டில்லிப் பகுதியில் இரு வீடுகள் இடிந்து விழுந்தன. இந்தப் பகுதியில் உள்ள வீடுகள் சுமார் நாற்பது வருடங்களுக்கு முந்தியன. பல செக்கன்களுக்கு நீடித்த இந்த பூகம்பம் சிறிய அளவிலானது. இதன் மையப்பகுதி விமானநிலையத்திற்கு அருகிலாகும். சர்வதேச விமானநிலையத்திற்கு அருகில் எனினும் விமானப் போக்குவரத்தில் தடங்கல் ஏற்படவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிழல் நிஜமாகியது

மூர்த்தி

ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதியினைய கலைகளில்
உள்ளம் ஈடுபட்டென்று நடப்பவர்
பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவார்
அவர் நாடும் பொருள்கள்
அனைத்தையும்
சில நாளிலெய்தப் பெறுகுவார்

என்று அன்று நம்பிக்கையுடன் பாடினுர் பாரதியார். ஆனுல் இன்று ஆடுதல், பாடுதல், சித்திரம் கவி யாதியினைய கலைகள் எல்லாமே வியாபாரிகளின் கைகளுள் சிக்கிப்போய், அவர் 'நாடுகின்ற பொருள்கள்' அனைத்தையும் சில நாளிலெய்தப் பெறுவதைக் கண்கூடாகக் காண்கின்றபோது பிறர் 'ஈனநிலை கண்டு துள்ளுவதும்' கூட ஒரு வகை வியாபாரமாகவே மாறி விட்டதோ என்ற சந்தேகம்தான் அடிக்கடி வருகிறது. மனிதாபிமானத்தையும், மானுடத்தின் விழுமியங்களையும் மறந்து போய், வக்கிர ரசனைகளுக்கு வடிகால் அமைத்துக் கொடுத்துவிட்டு பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவது போல நடிக்கும் பொய் நிறைந்த கயமைத்தனம் எமது உயிர்நாடியான அரசியலிலிருந்து அன்ருட வாழ்வின் பொழுதுபோக்கு சாதனங்கள்வரை பரவி வாழந்து கொண்டிருக்கிறது. பிரச்சனைகளுக்கு கொலை அல்லது தற்கொலைதான் தீர்வு என்னும் அளவிற்கு புத்தி அடைவு வைக்கப்பட்டு, பலவகைக் 'கத்தி'களால் எமது அங்கங்களே வெட்டி எறியப்பட்டு, விளைவுகள் சக்தி வாய்ந்த வீரமரணங்களாகப் புகழாரம் சூடப்படுகின்றன. இவ்வகைக் கொலைக்கலைகளையும், கலைக்கொலைகளையும் தூண்டுபவர்களிடம் பாரதி பாஷையில் ஒன்று கேட்க வேண்டும். "நின்னை சில வரங்கள் கேட்பேன்.. மதிதன்னை தெளிவு செய்து என்றும் சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்...!"

பாரதியின் வாழ்க்கை அவரது கவிதைகளைப் போன்றது. பிறர் ஈனநிலை கண்டு சொந்த வாழ்விலும் துள்ளியவர் பாரதியார்! அதனுல்தான் ஆடுதல், பாடுதல், சித்திரம், கவியாதியினைய கலைகளில் உளம் ஈடுபட்டு நடப்பதைத் தனது ஆயுதமாக வரித்துக் கொண்டவராக அவர் இருந்திருக்க வேண்டும். ஒரு சாதாரணனுக்கு இருக்கக் கூடிய பலவீனங்களுடன் தான் வாழ்ந்த காலத்திற்கு ஒவ்வாத அசாதாரண புரட்சி நினைப்பில் வாழ்ந்தும் காட்டியவர் பாரதியார். அவரது குணுதிசயத்தைக் கவனித்தால் அதியற்புதமாக இருக்கும். அதைக் கவிதையாக ரசிப்பதைவிட, கதையாகப் படிப்பதைவிட, திரையில் காட்டினுல் படித்தவர், பாமரர் உட்படப் பல்லாயிரக் கணக்கானேரை அவ்வற்புதம் தொடுமே..! இந்த மணியை கட்டக்கூடிய சரியான வல்லமையுள்ள கலைஞன் யார்? வேறு யார்...

"பாரதியாரின் வாழ்க்கையை திரைப்படமாக எடுக்கப் போவதாகவும் அதில் பாரதியாராக நடிக்கப் போவதாகயும் முன்பு சொல்லியிருந்தீர்களே.. என்ன வாயிற்று?" என ஆர்வத்துடன் கமல்ஹாசனிடம் கேட்டேன். இதைக் கேட்கக் காரணமிருந்தது. பாரதியாரை கப்பலோட்டிய தமிழனில் நடிகர் சுப்பையா இலட்சிய உருவமாக நடித்துக் காட்டியிருந்தார். பாலச்சந்தர் பாரதி நூற்ருண்டில் அவரை படமாக்கப் போவதாக பரபரப்பூட்டிவிட்டு மறந்து போனுர்! இவர்கள் சொல்லாத ஒரு கருத்தை அதன்பின் ஒருமுறை 'எழுத்தாளர்' கமலஹாசன் மட்டுமே பாரதி சினிமாவைப் பற்றி சிந்திக்கும் போது தனக்கு தோன்றும் சங்கடங்களாக ஏதோ ஒரு சஞ்சிகையில் குறிப்பிட்டிருந்தார். பாரதியாரை மீளக் காட்டும்போது பாரதியாரே மறைக்காத, பாரதியாருக்கு இருந்த பலவீனங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களை நாமாக மறைத்து விட்டு புனிதமான ஒரு கதை சொல்வதென்பது அந்த பாரதியாருக்கு சத்தியமானதாக இருப்பதாக இல்லை. போலித் தனங்களை உடைத்தெறிய நினைத்த புரட்சிக்கவிஞனை போலியாகக் காட்ட முடியாது. உதாரணத்திற்கு பாரதியார் கஞ்சாவின் ரசிகனுகவும் இருந்ததை யதார்த்தமாக திரையில் காட்டினுல் மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்ற குழப்பம் அன்று 'எழுத்தாளர் கமல்ஹாசனுக்கு இருந்தது. ஆனுல் இப்போதுதான்" தமிழ் ரசிகர்களின் ரசனை மாறி வருகிறதே... எனவே இப்போது பாரதி சினிமாவை 'எழுத்தாள நடிக இயக்குன படாதிபதி' கமல்ஹாசன் முயற்சித்தால் என்ன? "ம்.. ஆனு இன்னும் சந்தர்ப்பம் சரியா அமையல்ல.." என்றது பதில்.

அப்படி அவர் சொன்னுலும்கூட, பாரதியாரின் வாழ்க்கையில் சகலரும் பார்க்க விரும்பும் பகுதியையும், பார்க்க விரும்பாத பகுதியையும் ஜனரஞ்சக விகிதத்தில் கலந்து செலுலொய்டில் பதிக்கத்தக்க ஆளுமை இன்றைய நிலையில் கமல்ஹாசனிடம் மட்டும்தான் இருக்கிறது எனக் கருதுவதில் தவறிருக்காது. இரு துருவங்களை இணைப்பதுபோல, சோகமான கதைக்குள்கூட நகைச்சுவையை இணைத்து படத்தின் சோகமான கதையமைப்பு கெடாதவகையில் (உதாரணத்திற்கு ரொம் ஹாங்ஸ் நடித்து தற்போது வெற்றிகரமாக வட அமரிக்கா வெங்கும் ஓடிக்கொண்டிருக்கும் 'போரஸ்ட் கம்ப்' என்ற ஹொலிவூட் படத்தைபோல) காட்ட முடியும் என்ற சூத்திரம் தமிழ்ப்படங்களில் இன்னும் பிரயோகிக்கப்படவில்லை.

"ஆஸ்கார் விருது கிடைத்த ஷிண்ட்லர்ஸ் லிஸ்டில் எந்த அளவிற்கு ஷிண்ட்லரிடம் நகைச்சுவை உணர்வும் இருப்பதாகவும் காட்டினுர்களோ, அதே போலவே பாரதியாரையும் காட்ட உங்களால் முடியுமே.."

"ஷிண்ட்லர்ஸ் லிஸ்டில் நகைச்சுவையைத் தேடித்தான் பார்க்க வேண்டும்..!" எனத் திருப்பினுர் கமல்.

"அப்படியில்லையே சார்... ஷிண்ட்லர் கரெக்டருக்கு அற்புதமான நகைச்சுவை உணர்வு இருப்பதாகத்தானே படத்தில் காட்டியிருக்கிறுர்கள். முன்பு காந்தி படத்தில் காந்தி போல." (ஷிண்ட்லரை நகைச்சுவை உணர்வு கொண்ட மனிதாபிமானியாக மட்டுமல்ல, வுமனைஸராகவும் காட்டத் தீர்மானித்து ஷிண்ட்லருடன் பழகிய பலருடைய விருப்பத்திற்கு மாருக வேண்டுமென்றே திரைக்கதையை அப்படி அமைத்ததாக தொலைக் காட்சிப் பேட்டி ஒன்றில் ஸ்ரீவன் ஸ்பீல்பேர்க் சொல்லியிருந்தார்.) இப்படியாகவும், வேறு சிலவும் பேசிய பின் கனடாவிற்கு வந்து கலைநிகழ்ச்சிகள் நடத்துங்களேன் என சந்தடிசாக்கில் அழைப்பும் விடுத்துக் கொண்டேன். கமலுடன் பேசியது உண்மையில் மகிழ்ச்சியாக இருந்தது.

அடுத்து இளையராசாவுக்கு டாக்டர் பட்டமளிப்பு விழா.

மேடையில் இளையராஜா, எஸ்.பி.பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஏற்கனவே இருக்க கடைசியாக கமல்ஹாசனும் வந்த போது மீண்டும் மண்டபம் பரபரப்பாயிற்று. (அந்த மேடையருகே 'ரஜனி ரசிகரான' பேராசிரியர் ஜோர்ஜ் ஹார்ட்டை கமலஹாசனுக்கு அறிமுகம் செய்து வைத்ததில் எனக்கும் குட்டிப் பெருமை. பதினைந்து விஞடிப் புகழ்?)

மேடையில் யூ.எஸ். செனட்டர் வில் பிராண்ட்லி, சோவியத் யூனியன் இல்லாத புதிய உலகத்தில் அமரிக்காவின் தலைமைக்கு ஏற்பட்டுள்ள சர்வதேச முக்கியத்துவம் பற்றியும், அதற்குள்ள பொறுப்புகள் பற்றியும், அமரிக்காவை தன் நாடாக ஏற்று வாழும் பிற நாட்டவர்களின் வாழ்க்கைமுறை மதிக்கப் படவேண்டிய அவசியத்தையும் சொல்லி உரை நிகழ்த்தினுர். அதன்பின் கமல்ஹாசன் இளையராஜாவை செனட்டருக்கும், சபையினருக்கும் தனது மந்தஹாச குரலில் ஆங்கிலத்தில் பேசி அறிமுகம் செய்து வைத்து புகழ்மாலை சூட்டினுர். அதன் பின்பு எஸ்.பி.பி தனது பங்கிற்கு இன்னும் இளையராஜாவை புகழ்ந்து தள்ளினுர். தானும் இளையராஜாவும் ஆரம்ப காலத்தில் ஒன்ருக வாழ்ந்ததையும் வாடா போடா என்று பேசிக் கொண்டதையும் ஞாபகப்படுத்தி இளையராஜாவை வாழ்த்தினுர். பிறகு செனட்டர் பில் பிராண்ட்லி இளையராஜாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கப் பட்டதற்கான உறுதிப்படுத்தலை வழங்க மண்டபம் மின்னியது. உணர்ச்சி வசப்பட்ட டாக்டர் இளையராஜா தமிழில் பேசினுர். "நான் பேசுகின்ற மொழி உலகம் முழுவதும் எந்த உயிரும் அறியும் மொழி. அதுதான் இசை!" என்று தழுதழுத்து ஆரம்பித்த இளையராஜா "உலகிலுள்ள எல்லோருக்கும் உயிர் ஒன்றுதான். அது போல பலவேறு இசை மேதைகளுக்கும் முகங்கள் தான் வேறே தவிர அவர்கள் பாடும் அடிப்படை நாதம் ஒன்றே" என்று கூறி கீழைத்தேய, மேலைத்தேய இசைவடிவங் களுக்குள்ளேயுள்ள ஒருமைப் பாட்டை பாடியும் காட்டினுர். பேசி முடிந்ததும் அமர்ந்தவர் மீண்டும் எழுந்து வந்து கமலையும் எஸ்.பி.பியையும் புகழ்ந்தார். "கமல்ஹாசன் தமிழ் நாட்டிற்கு கிடைத்த அரிய வரப்பிரசாதம்.. கமல் இல்லாத சினிமா சரித்திரம் எழுத முடியாது" என்ருர். "உள்ளத்தில் ஒன்றுவைத்து வெளியே வேறுபேசத் தெரியாத கள்ளமற்ற முகம் எஸ்.பி. பிக்கு.." என்று உணர்ச்சி வசப்பட்டுவிட்டு "நன்றிடா..." என அன்பாக எஸ்.பி.பிக்கு நன்றியும் சொல்லி திரும்பி வந்து அமர்ந்தார்.

அதன் பின்பு "மாஸ்ட்ரோ இளையராஜா இசை வழங்க எஸ்.பி. பி, கமல், ஷைலஜா கலந்து கொள்ளும் இசைநிகழ்ச்சி" நடக்கும் என்று விளம்பரத்திலிருந்ததே...! ஆஹா... மாஸ்ட்ரோ இளையராஜா "தேவன் திருச்சபை மலர்களே..", "நான் பேசவந்தேன்.. சொல்லத்தான் ஓர் வார்த்தையில்லை" என்றெல்லாம் தனது பழைய பாடல்களையும், கூடவே தனது புதிய சிம்பொனியிலிருந்து இசைக்கோவைகளையும் மேடையில் வாசிப்பித்துக் காட்டுவார். கமல்ஹாச பாகதவர் "தாலாட்டுதே வானம்.." என்று பழைய பாடலொன்றை தானே பாடி விட்டு பிறகு எஸ்.பி.பியுடன் சேர்ந்து "ரம்பம்பம் ஆரம்பம்.." என்ற பாட்டிற்கு ஆட ஆரம்பம்பிப்பார் என்றெல்லாம் மனதில் ஒரு கற்பனையான கற்பனை இருந்து அலை பாய்ந்தது.

ஹையோ... மீண்டும் ஒருமுறை ஏமாற்றம்.

பட்டம் வழங்கல் முடிந்ததும் கமல் மேடையை விட்டு அழைத்துச் செல்லப்பட்டார். இளையராஜாவும் எஸ்.பி.பியினரின் இசைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# GOOD BYE BALDNESS



இந்த சிவப்பு நிறக் கிழங்கு இரத்த ஓட்டத்தை கூட்டுவதன் மூலம் மயிர் கொட்டுவதைக் குறைத்து புதிய மயிர் வளர்வதற்கு உதவுகிறது.


தலைமயிர் உதிர்வது பரம்பரையானது அல்ல. ஆண்களின் உடலில் தெஸ்தஸ்தரோன் அதிகமாகச் சுரப்பதால் இரத்த ஓட்டம் குறைகிறது. பெண்களில் அழுத்தம் காரணமாக இரத்த ஓட்டம் குறைகிறது. இருபது வருட ஆராய்ச்சியின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டு ஐயாயிரம் பேருக்கு மேல் பரீட்சிக்கப்பட்டது இந்த குமிழ்.

**முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி**

**ஒரு சிறு குமிழ் உங்கள் கேசத்தை வளரச் செய்கிறது**


239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS






**VITAMOL** சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.



### NERVOGEN NERVE FOOD

உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.


அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.
Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada





### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix போன்றனவும் கிடைக்கும்.





### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால்குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறிஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

www.tamilarangam.net

குழுவினர் பின்னணி வாசிக்க "தென்பாண்டிச் சீமையிலே.." எனப் பாடிவிட்டு உடனே நடையைக் கட்டினார். இது சரியோ..? இது முறையோ..?? தர்மம்தானோ???

அமெரிக்க கூட்டுத் தமிழ்ச் சங்கமோ அல்லது தமிழ்நாடு அறக் கட்டளையோ விளையாட்டுத்தனமான அமைப்புகள் அல்ல. இவ்வமைப்பு களின் தமிழ்ப்பற்றையோ, அதற்காக அவர்கள் செய்யும் நல்ல முயற்சிகள் பற்றியோ யாரும் சந்தேகிக்கவில்லை. ஆனால் அதற்காக இம்முறை இவ்வமைப்புகள் சில பிழையான முன்னெடுப்புகளை செய்திருக் கின்றன என்றே இப்போது அதிருப்தி தோன்றுகிறது. இவ்வ மைப்புகள் தமது நிதி இலாபத்தை கணக்கிலெடுக்கும்போது கூடவே பார்வையாளர்களாக வந்த ரசிகர்களுக்கு பூரண திருப்தி கிடைத்ததா என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டும். இளையராஜாவும், கமல்ஹாசனும் விளம்பரப்படுத்தப் பட்டே இந்நிகழ்ச்சிக்கு வெற்றிகர மாகப் பணம் சேகரிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒருவகையில் பார்த்தால் ஏமாற்று என்ற தெரிந்து கொண்டே கமல்ஹாசன் ஷோ, இளையராஜா இசை விளம்பரங்கள் செய்யப்பட்டி ருக்கின்றன. இது ஆரோக்கிய மானதல்ல. தவறானதாகும்.

வந்த பார்வையாளரை மனம் கோண விடாது பாவம் எஸ்.பி. பிதான் கடுமையாகக் கஷ்டப் பட்டார். எஸ்.பி.பியும், ஷைலஜா வும், பல்லவியும் மட்டுமே பின்பு இசை நிகழ்ச்சியைக் கொண்டு நடத்தினார்கள். நள்ளிரவு வரை எஸ். பி.பி மூச்சுவிடாது பாடி, பேசி இசை நிகழ்ச்சியை சுவாரஸ்யமாகக் கொண்டு போனார். அவர் பாடிய பாடல்கள் அனைத்துமே கிறங்க வைத்தன. 'ஓ.. பட்டர்பிளை..' 'சிப்பியிருக்குது..' 'மண்ணிலிந்தக் காதல்..' 'ஆயர்பாடிமாளிகையில்..' 'மாடத்திலே..' 'ஒட்டகத்தைக் கட்டிக்கோ..' இப்படியாகப் பல பாடல்கள்! எஸ்.பி.பி முதன்முதலில் ஹோட்டல் ரம்பா படத்திற்காகத் தான் பாடினாராம். ஆனால் படம் வெளிவரவில்லையாம். பிறகுதான் "இயற்கையென்னும்.." பாடலைப் பாடி அதன் பின்பு வாத்தியாருக்காக ஆயிரம் நிலவே வா பாடலைப் பாடியிருக்கிறார். இதை அவரே சொன்னார். கமல்ஹாசனை, கண்ண தாசனை, எம்.எஸ்.வியை, இளைய ராஜாவை, தேவாவை, ரஹ் மானை, இளையராஜாவின் மகன் கார்த்திக் கை, தனக்கு மேடையில் பின்னணி வாசிக்கும் இசைக்கலைஞர் களை, கொம்பாக்ட் டிஸ்க் வெளியிடும் நியூயோர்க் பார்த்தசாரதியை... எல்லோரையுமே மனம் திறந்து மேடையில் வைத்து பாராட்டிக் கொண்டிருந்தார். உண்மையில் இந்த நிகழ்ச்சிக்குத் திரண்டு வந்திருந்த தமிழ் திரைப்பட ரசிகர்களைத் திருப்திப்படுத்தியது எஸ்.பி.பியும், எஸ்.பி.பியின் தங்கை ஷைலஜாவும், எஸ்.பி.பியின் மகள் பல்லவியும்தான். துரதிஷ்டவசமாக நடிகரும் பாடகருமான கமல்ஹாசனோ, இசையமைப்பாளர் இளையராஜாவோ அல்ல.

நிகழ்ச்சிகள் முடிந்தன! இந்நிகழ்ச்சி மறக்க முடியாததாகிக் கொண்டது. தேமதுரத் தமிழோசை உலகம் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பாடுபடும் உலகத்துத் தமிழர்களையும், கூடவே ஈழத்திலிருந்து அகதியாக ஓடியபின் மது, ரத்தத் தமிழோசை உலகம் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று பாடுபடும் புலி ஆதரவாளர்களான நியூயோர்க் கிலுள்ள உலகத்தமிழர்கள் சிலரை யும் சந்தித்தாயிற்று. இந்நிகழ்ச்சியில் சந்தித்த 'மறக்க முடியாத முகங்களை' நிச்சயமாக மீண்டும் சந்தித்தே தீருவது என உறுதியாக நம்பிக் கொண்டு கனடா திரும்பினேன். (குறிப்பாக 'கமல்.!')

கனடாவில் தாயகத்திற்காக பாடுபடும் எங்களைப் பற்றியும் அவர்கள் 'முறையாக' இன்னும் அறியவேண்டுமல்லவா..!

Are you ready...?

Books,
Flyers,
Business Cards,
Wedding Cards

**Blue Line Printing**

கண்ணைக் கவரும் வண்ணங்களில்
தரமான அச்சுவேலைகளுக்கு..

| | | |
|---|---|---|
| 1000 | Flyers | $21 |
| | Envelopes | $35 |
| | Business Cards | $30 |
| | Letterheads | $25 |

Tel:299 5979
Fax:299 8171

335 Nugget Ave, Unit 6
(McGowan/Sheppard)
Scarborough



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதவி இறக்கப்பட்ட பாலசிங்கம்

## சண்டே ரைம்ஸ் தகவல்

### மாத்தயா விவகாரத்தில் மயிரிழையில் தப்பினார்

சென்ற வருடம் மாத்தயா கைது செய்யப்பட்டபோது பாலசிங்கம் மயிரிழையில் தப்பிக் கொண்டதாக சண்டே ரைம்ஸ் தெரிவித்திருக்கிறது. இதற்கு பிரபாகரனினது குடும்பத்தில் பாலசிங்கத்தின் மனைவிக்கு இருக்கும் தொடர்பே காரணம் என்றும் கூறப்படுகிறது.

இயக்கத்தில் தனக்கோ, தன் மனைவிக்கோ யாரையாவது பிடிக்காது போனால் அவர்கள் பற்றி மறைமுகமாக குறிப்பிடத் தொடங்குவர். இது வெறுப்பை ஏற்படுத்தும் நோக்குடன் தொடங்கப் படும். பின்னர் தனியாகவோ, சேர்ந்தோ கணவனும் மனைவியுமாக விசுவாசமின்மை, வெறுப்பு என்பவற்றைக் காரணம் காட்டி வெளியேற்ற வேண்டிய நிலைமைக்கு இருவரும் உருவாக்குவர்.

தங்களது பதவிக்கு ஆபத்து என்று யாரையாவது இவர்கள் இருவரும் கருதும் பட்சத்தில் இது நடைபெறும். தற்போது மாத்தயாவின் பிரச்சனையிலும் இவர் அகப்பட்டுக் கொள்ளாமல் மயிரிழையில் தப்பிக் கொண்டார். இது அவரை நன்றாகப் பாதித்திருக்கிறது. ஆயினும் தற்போது இயக்கத்தில் அவர் பலமிழந்துள்ள தாகவே கூறப்படுகிறது. இவர் தற்போது பேச்சாளர் என்ற பதவியிலிருந்து குறைக்கப்பட்டு மொழிபெயர்ப் பாளராகவே உள்ளார். 'எனது வாழ்வின் பெரிய ஒரு நெருக்கடி யிலிருந்து தப்பிக் கொண்டுள்ளேன்' என்று பாலசிங்கம் தன் நண்பர் ஒருவருக்கு தெரிவித்திருக்கிறார். பாலசிங்கம் தற்போது முன்பு போல பிரபாகரனுடன் நெருக்கமாவதற்கு முயற்சிக்கிறார்.

93இன் இறுதிவரை பேச்சாளர், ஆலோசகர் போன்ற பதவிகளில் இருந்த பாலசிங்கம் தற்போது அந்த பதவிகள் பறிக்கப்பட்டிருக்கிறார். ஆலோசகர் என்ற பதவி நீக்கப்பட்டுள்ளதுடன் பேச்சாளர் அந்தஸ்து தமிழ் செல்வத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பாலசிங்கம் நேரடியாக வெளிநாட்டு, உள்நாட்டு பத்திரிகையாளருடன் தொடர்பு கொள்வதும் பேட்டி கொடுப்பதும் தடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்செல்வம் பாலசிங்கத்திலும் பாதி வயதுள்ளவர் எனினும் தமிழீழ அரசியல் பிரிவுக்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்பு சாதனங்களுடன் தொடர்பு கொள்ளவும் நியமிக்கப்பட்டுள்ளார். பாலசிங்கம் வெறும் மொழிபெயர்ப்பாளராகவே உள்ளார்.

எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பைச் சேர்ந்த தனது நண்பரான டாக்டர் ஒருவருக்கு 'இது தற்காலிகமான தடை என்றே நாம் நினைக்கிறோம். எங்கள் மீது சந்தேகம் இருக்கிறது என்று தெரியும். ஆனால் விரைவில் இதை வெற்றி கொள்வோம்' என்று கூறியிருக்கிறார்.

மறுபக்கம் பார்க்க..

நகரின் மத்தியில் தனித்துவமான ஓர் உணவுச் சேவை

**UNIQUE CATERERS**

Caterers of Sri Lankan, West Indian, Chinese and Canadian Cuisine

31 PASSMORE AVE, UNIT 16
SCARBOROUGH, ONT M1V 4T8
TEL:(416) 292 3535

Food Prepared By Qualified Chefs

Experienced in All Kind of Foods

Trade & Vendor Inquires Welcome

Give Us A Call
We Will Look After All Your Party
& Other Unique Needs

Contact:
Herlyn Selvanayagam
416-299-3203
Merlyn Selvanayagam
416-498-7481

திருமண வைபவங்கள், பிறந்த நாள் விழாக்கள் போன்ற அனைத்து வைபவங்களுக்கும் சகல விதமான உணவு வகைகளும் முழுச் சேவையுடன் தரத்துடன் வழங்குகிறார்கள

**Other Services:**
Party Hall Arrangement
Linen, Flower Arrangements
Cutlery, Warmers
D.J Service, Bartenders
Uniform staff, Decorations

**Our Specialities:**

**Sri Lankan Style:**
Rice Curries (Veg & Non Veg)
All kinds of Buriyani, Fried Rice
Kothu Rotti, String hoppers

**West Indian Style:**
All kinds of Fried Rice
Roti & Curry, Dhal Puri

**Also Canadian & Chinese dishes**
Deserts: Your Choice
We also equipped to supply
10-1000 pieces of Short eats
(Appetizers) patties, Rolls, Cutlets etc



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெறிக்குட்டிக்கு வந்த கஷ்டகாலம்

## பென் சூரியனின் குட்டிக்கதைகள்

இந்த வீக் எண்டுக்கு மணியாய் ஒரு சமையல் போடுவம் எண்டு தான்தோன்றீஸ்வரர் ரேடிங் கம்பனியில் மீன் வாங்கப் போனால்.. அங்க மீன் கடையில் கிழவர் ஒருவர் மீன் வெட்டிக் கொண்டிருந்தார். தெரிஞ்ச முகம்.. வந்த இளம் பெண்கள் எல்லாம் அங்கிள் பாத்து வெட்டுங்கோ என்று சொல்ல, இளவட்டங்கள் அப்பு, வடிவா கழுவுங்கோ என்று கொண்டிருந்தனர். கிழவர் சலிக்காமல் வெட்டிக் கொண்டிருந்தவர் திரும்பினால்.. எங்கட வெறிக்குட்டி வேலுப்பிள்ளை வாத்தியார். ஒரு காலத்தில் எனக்கும் ஜெயந்தீஸனுக்கும் சிம்ம சொப்பனமாகி கலங்கடித்த வாத்தியாருக்கு இந்தக் கதியா? 'என்ன சேர், எப்ப வந்தனீங்கள்?' என்று ஆச்சரியம் தாளாமல் கூப்பிட, கிழவரும் சூழ நின்ற பெண்களும் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தனர். 'தம்பி ஆரெண்டு தெரியேலை?' என்று வெறிக்குட்டி இழுக்க.. நான் தான் சேர், சூரியன் என்றேன். கிழவனுக்கு ஞாபகம் வரேலை. அதுதான் சேர், கோதாரி விழுவான் சூரியன்.. என்றதும் அட, பொடியா, எப்பவடா நீ வந்தனி? என்று கத்தியை வீசி விட்டு வந்து மீன் வெட்டிய கையால் என் கன்னத்தை தடவி விட்டது மனிசன். அந்தக் காலத்தில் உந்தக் கையால் எத்தனை அடி அடித்திருக்கும்?

சேமநட்டங்களை விசாரித்து விட்டு 'எங்கயடா அந்த குறுக்காலை போவான்?' என்றதும் 'அவன் ஜெயந்தீஸனோ, சேர், அவன் இப்ப பிரான்சில'.. அந்த நேரத்தில மனிசனுக்கு நான் கோதாரி விழுவான், என் மச்சான் ஜெயந்தீஸன் குறுக்காலை போவான்.. இந்தப் பெயர்களால் தான் கூப்பிடும் எங்களை.

பெண்கள் குசுகுசுத்துக் கொண்டனர். 'எடியே, இவரைப் பிடிச்சா ஜெயந்தீஸன்ரை அட்ரஸ் வாங்கலாமடி' என்றனர். நான் கேட்காது நின்றேன். அட, நீங்கள் தாயகத்திலை எழுதுறீங்களாமடா.. என்றதும் 'ஓம், சேர், நீங்கள் அந்த நேரம் அடிச்சடிச்சு தமிழ் படிப்பிச்சதாலை, உங்களை மறக்காமல் இண்டைக்கும் தமிழ் எழுதுறம் சேர்' என்றேன். இதற்குள் மீன் வாங்கி முடிந்த பெண்கள் நைசாக நட்பு நாடிச் சிரிக்க.. அவன்ரை போனை வெட்டிப் போட்டாங்கள் எண்டு எரிச்சலுடன் அனுப்பி வைத்தேன். புறுபுறுத்தபடியே அவர்கள் மாறினர்.

தம்பி, உங்க பெடியளோட பெரிய கஷ்டமடா?

ஏன் சேர்?

இந்த பெம்பிளைப் பிள்ளையள் அங்கிள் அங்கிள் எண்டு கூப்பிடுறது உவங்களுக்கு பிடிக்கிறேலை, அதுகள் நிக்கத் தக்கதாய் வந்து அப்பு எண்டிருங்கள்.. ஏன் தாங்களும் அங்கிள் எண்டால் என்னவாம்?

அறா.. ஊந்தது போ!

ஏன் சேர் வெல்பெயரோட மீன் வெட்டிறியள் போல..

எங்கயடா வெல்பெயர், நான் வீட்டை நிக்கக் கூடாதெண்டெல்லே இங்க வந்து வேலை செய்யிறன். மகன் ஸ்பொன்சர் பண்ணி இங்க வந்தனான். அங்க பென்சனை எடுத்துக் கொண்டு ராசா மாதிரி சீவிக்க, உந்த அறுவான் மூத்தவன் இங்க வா எண்டான். நான் வந்து பாத்தாப் பிறகு தானே தெரியுது கனடாவின்ரை நாத்தம்.

ஏன் சேர், மீன் வெட்டிறது கஷ்டமாயிருக்கோ?

அந்த நாத்தம் இல்லையடா, எங்கட பிள்ளையளின்ரை நாத்தம். வீட்டை நிண்டா அவள் மருமோள் நான் ஏதோ தண்டச்சோறு மாதிரி புறுபுறுக்கிறாள். அவன் வேலையால வந்தவுடன அவள் போய் ஓதுறது.. அவன் அவளைப் போட்டு அடி அடியெண்டு அடிக்க.. எனக்கு கண் கொண்டு பாக்கேலாமல் போச்சு. நான் வெளிக்கிட்டுப் போய் வயது வந்த ஆக்களின்ரை இடத்தில இடம் எடுத்துக் கொண்டு இருக்கிறன். ஸ்பொன்சர் பண்ணினபடியால வெல்பெயரும் எடுக்கேலாது. மகன் பார்க்கேலை எண்டு சொன்னால்.. அவளின்ரை ஆக்களைக் கூப்பிடேலாதாம் எண்டு மண்டாடிக் கேட்டான். நான் வெக்கத்தை விட்டு மீன் வெட்டிறன். பொழுதும் போகுது. உழைப்பும் ஆகுது.

அப்ப ஊருக்குப் போங்கோவன் சேர்!

அங்க போய் என்னடா செய்யிறது? எனக்கும் வயது போட்டுது. நானும் குடிச்சுப் போட்டு புரளி பண்ணினால் ஒருத்தனும் சேர்க்க மாட்டான். இங்க சாக வேணும் எண்டு விதி. அப்படிச் செத்துப் போனாலும் நீயும் என்ரை பிள்ளை மாதிரித் தானே, நீ என்னை எரிக்க மாட்டியே?

எனக்கு கண் கலங்கியது. என்ன வாழ்க்கை இது? என்னவாய் வாழ்ந்த மனிசன்.. இன்றைக்கு இப்படி?

என் யோசனையைக் கலைத்தார் வெறிக்குட்டி.. தம்பி, செங்கண்ணி வந்திருக்கடா இண்டைக்கு பிறெஷா. குழம்பு வைக்க அந்த மாதிரி இருக்கும். வாங்கிக் கொண்டு போ..

கவலையை மறந்த வெறிக்குட்டி வியாபாரத்தில் இறங்கினார். வெளியில் நின்ற இன்னொரு கிழவர் 'என்ன ஓய், ஒரு பொயிலைத் துண்டு எடும்' என்று வெறிக்குட்டியை விளிக்க, 'பங்க கிடக்கு அந்தப் பைக்குள்ளை' என்று காட்டினார். 'என்ன ஓய், பின்னேரம் என்ன மாதிரி, சப்பட்டை விசேசம் ஏதும் இருக்கோ?' கிழவர்கள் தங்கள் பரிபாஷை பேசிக் கொண்டனர்.

சேர், நான் வாறன் சேர், சனிக்கிழமை வேலை முடிய நில்லுங்கோ, நான் வந்து கூட்டிக் கொண்டு போறன்..

அட பொடியா, நெடுக சேர் எண்டு சொல்லாதை. பாக்கிறவன் தப்பா நினைப்பான். அங்க வாத்தி வேலை

12ம் பக்கம் பார்க்க..

## பாலசிங்கம்...

தினேஷ் என்ற பெயரில் முன்பு வவுனியாவில் அரசியல் பிரிவுக்கு பொறுப்பாகவும் யாழ்ப்பாணத்தில் இராணுவப் பிரிவிலும் இயங்கிய தமிழ்ச்செல்வம் இளைஞராயினும் அனுபவம் உள்ளவர். இவருக்கு உதவியாக கரிகாலன் உள்ளார். இது குறித்து பாலசிங்கம் அதிருப்தி கொண்டிருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

தமிழ்செல்வம் இல்லாத போது பாலசிங்கம் பேட்டி கொடுத்தாலும், அங்கு கரிகாலன் இருந்ததுடன் தான் சொல்கின்ற ஒவ்வொரு பதிலையும் கரிகாலனிடம் கேட்டு உறுதி செய்து கொண்டே பாலசிங்கம் நிருபர்களுக்கு தெரிவித்தார்.

இவ்வாறு சண்டே ரைம்ஸில் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## ஜெயந்தீசன் குட்டிக்கதைகள்

# அக்கா



## கியூறியஸ் பட மர்மம்

(கிருஷ்ணன் லீலைகள் செய்வதில் வல்லவன். லீலாவினோதன். தடாகத்தில் பெண்கள் நிர்வாணகமாகக் குளித்துக் கொண்டிருந்த போது அவர்களது சேலைகளையும் பிறசியர்களையும் தூக்கிக் கொண்டு போய் ஒழித்தவன். இவன் இப்போது கனடாவில் மறுஅவதாரம் எடுத்துள்ளான். எனது பிரீதிக்குரியவனும் கூட. இவனது லீலாவினோதங்களில் ஒன்றை மையமாக வைத்து எழுதப்பட்டது இந்தக் குட்டிக்கதை)

கனடாவில் வாழும் கிருஷ்ணபரமாத்மா எனக்கு ஓர் படத்தை அனுப்பியிருந்தான். கையால் கீறப்பட்ட நெற்றியில் திலகமிடும் ஓர் பெண்ணின் படம். கீழே பின்வரும் ஓர் குறிப்பு இருந்தது. 'உங்கள் ஒன்று விட்ட மச்சான் பென் கூரியனின் அண்ணன் கியூறியஸ் தனது அறு(சு)வையில் இந்தப் படத்தை பிரசுரித்துள்ளான். இந்தப் படத்தில் ஓர் மர்மம் இருக்கிறது. கண்டு பிடியுங்கள்'

படத்தை முதலில் பார்த்தேன். மர்மம் பிடிபடவில்லை. பார் பார் என்று பார்த்தேன். கண்கள் களைப்புற்றன. பெண்கள் மர்மமானவர்கள் என்றால் பெண்களின் படங்களும் மர்மமாகவே இருக்க வேண்டுமா? பல தினங்களாகியும் எனக்கு மர்மம் பிடிபடவில்லை. எனக்கு இந்த மர்மம் பிடிபடாது என ஒரு முடிவை எடுத்து விட்டு கமலம் அக்கா வீட்டிற்கு ஓடிப் போனேன்.

கமலம் அக்கா கெட்டிக்காரி. மறைபொருள், மறையாத பொருள் எல்லாம் கலந்து பேசுவதில் புகழ் பெற்றவர். இரண்டு நேரம் பீரோக் கிளீனிங் வேலை செய்பவர்.

என்னைக் கண்டதும் கையை நீட்டினா.. ஏதோ நான் படம் தர வந்திருப்பதை தனது ஞானதிருஷ்டியால் விளங்கித் தான் படத்தைப் பெற கையை நீட்டுகிறா போலும் என நினைத்துக் கொண்டே படத்தை அவவின் கையில் வைத்தேன்.

கொடுத்த படத்தை என் கையிலேயே திரும்பித் தந்து விட்டு 'மறந்திட்டியோடா?' என்று கேட்டா. 'அக்கா, நான் கட்டிளங்காளை. இந்த வயதிலை எனக்கு மறதி வருமோ?' எனக் கேட்டேன்.

'டேய், ரெண்டு மாதத்துக்கு முந்தி வந்து, அக்கா நாளைக்கு பாங்கில செக் மாறும், 200 பிராங் தாங்கோ, நாளண்டைக்கு தந்திடுவன் எண்டு சொல்லியிட்டு, காசோட போனனீ.. ஒரு ரெலிபோன் எண்டாலும் அடிச்சியோடா? இப்ப காசை வை' எண்டு துள்ளிக் குதிச்சா.

அக்கா சொன்னது உண்மை தான். "J'ai oublie" (மறந்து விட்டேன் எனப் பிரெஞ்சில் விட்டேன்) "Il ne faut pas oublier" (மறக்கக் கூடாது என அவவும் பிரெஞ்சில் விட்டவுடன் இரண்டு மாதத்திற்குள் அக்கா பாசை படித்ததை அறிந்தேன்) "Akka, Vous parlez tres bien le Francais" என அவ மிகவும் அற்புதமாகவே பிரெஞ்சு பேசுவதாக சொன்னவுடன், எனது வாழ்த்தில் மனம் குளிர்ந்து 200 பிராங்கை மறந்து 'டேய்,என்னடா உந்தப் படம்?' என்றபடி எனது கையிலிருந்த படத்தைப் பாய்ந்து பறித்துக் கொண்டா.

படத்தின் கதையைச் சொல்லி, அதற்குள் உள்ள மர்மத்தை துப்பறிந்து சொல்லுமாறு கேட்டேன். பார்த்தா.. பார்த்தா.. அவவுக்கும் பிடிபடவில்லை. 'படத்தை என்னட்ட தந்திட்டுப் போ. நாளைக்கு ரெலிபோன் பண்ணு. மர்மத்தை சொல்லிறன்' என்றவுடன் 200பிராங் அவவின் நினைவில்வர முன் நைசாக மாறினேன்.

அடுத்த நாள் அக்காவுக்கு நான் போன் பண்ணினேன்.

'அக்கா கண்டுபிடிச்சிட்டியளே?'

'டேய், நான் கண்டுபிடிக்கேலை. அவர் தானடா கண்டுபிடிச்சது. படத்தை தந்தது ஆ ரெண்டு இரவு முழுக்க அவர் என்னைப் படாத பாடு படுத்திப் போட்டார். லலலி தந்ததெண்டு சொல்லி சமாளிச்சுப் போட்டன். உனக்கு ஏனடா இந்த வம்பு வேலை?'

'அக்கா, இது எனது வம்பு வேலையில்லை. கிருஷ்ணுவின் லீலாவினோதங்களில் ஒன்று மட்டுமே' எனச் சொல்லி, அவர் யார் அந்த கிருஷ்ணு என்று கேட்க முன், போன் தொடர்பைக் கட் பண்ணிக் கொண்டேன்.

## வெறிக்குட்டிக்கு..

செய்தன். அது அந்தக் காலம். இப்ப மீன் வெட்டிறன். செய்யும் தொழிலே தெய்வம்.

என்ன மாதிரி சேர், இப்பவும் ஏதும் பாவிக்கிறனியளோ?

வெறிக்குட்டி அதே வெகுளித்தனத்துடன் 'தம்பி நான் வலன்ரைன் குடிக்கிறேலை, ரீச்சர் தான் குடிக்கிறனன்' என்று வேலையைக் கவனிக்க, கனத்த மனதையும் மீறி சிரிப்புடன் வெளியில் வந்தேன்.

## வியாபாரத்திலும்..

அகப்பையில் .

இவர்கள் முதலில் தெரிந்து வைக்க வேண்டியது என்னவெனில் வியாபார முன்னேற்ற மென்பது எதிர்காலத்தை நம்பியதே.. அதற்கான பாதையை அமைக்க வேண்டியது வியாபரிகளே.

இக்கட்டுரையின் நோக்கம் எல்லா வியாபாரிகளும் ஏமாற்றுக்காரர்கள் எனச் சொல்ல வருவதல்ல, நியாயமான நேர்மையான தமிழ் வியாபாரிகளும் இல்லாமல் இல்லை அவர்கள் எண்ணிக்கையில் மிகக்குறைவு என்பதையும் அதே நேரம் நுகர்வோரும் அவதானமாய் இருக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம். வியாபாரம் பண்ணுங்கள்! வரவேற்கிறோம் அதை நேர்மையாய் நியாயமாய் பண்ணுங்கள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# Scarborough Dental Office

## Dr.Athi K.Somasundaram

டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

**பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,**
**கனடா தேசிய பல்வைத்திய சபை**




- Cosmetic Dentistry
- Crown & Bridges
- Gum Treatment
- Root canals
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படும்

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**

**2155 Lawrence Ave East, Suite 10**
**(At Birchmount), Scarborough**
**•Wheel Chair Access**
**•Free Parking**

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப் பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல் செய்து கொள்ளுங்கள்)
★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை

**Monday-Saturday**
**9 AM-9 PM**
**Sundays**
**12 Noon-5 PM**
**Sunday by appointment only**
**24 Hrs Emergency Service**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தற்போதைய பொருளதார மந்த நிலைக்குள் வேலைவாய்ப்பு பெறுவதை இலகுவாக்க, ட்ரக் வண்டிச் சாரதிப் பத்திரத்தைப் பெறுங்கள்.

# SAFETY TRUCK DRIVER TRAINER

**CLASS A, D,Z சாரதிப் பத்திரங்களுக்கான பயிற்சிகள்**



★ பதினைந்து வருட அனுபவம் வாய்ந்த *Ontario Safety League* சாரதி பயிற்சிப் பத்திரம், *Air Brake Endorsement Instructor* சான்றிதழ் பெற்ற பயிற்சியாளர்

★ தனித்தனி நேரடிப் பயிற்சி

★ தொழில் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகள், உதவி வழங்கப்படும்

**தமிழ் மொழி மூலம் முழுப்பயிற்சிகளும் வழங்கப்படும்.**

**தொடர்புகளுக்கு:**
**யோகன் சொக்கலிங்கம்**
**(905) 793 9546**

# NATIONWIDE CONSULTANTS

AUT O INSURANCE
ACCIDENT CASES
REJECTED CASES
LOW PAYMENT
MUL TI CAR DISCOUNT
INSURANCE FOR
YOUNG DRIVERS
All TRAFFIC TICKETS

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளுக்கும், வாகன போக்குவரத்து சட்ட மீறல் டிக்கட்டுக்களுக்கும் எங்களை நாடுங்கள்

விசாக்கள் பெறுவதில் சிரமமா? குறிப்பாக இந்திய விசா பெறுவதில் தாமதமா? அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதா? சகல குடிவரவு விசாரணை தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**Visitor Visas**
**Refugee Claims**
**Rejected Cases**
**Business Visa**
**Assisted Classes**

**CALL**
**SHAN**
**321 1311**
**740-SHAN**
**BY APPOINTMENTS ONLY**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**வைசாகன்**

# வியாபாரத்திலும் தர்மம் உண்டு!

## தமிழரைச் சுத்தும் தமிழர்

இங்கு கனடாவில் எவரும் தம் விருப்பத்துக்கு, திறமைக்கு தகுந்தபடி எதையும் மேற்கொண்டு உழைத்துச் சம்பாதிக்க வசதிகள், வாய்ப்புகள் ஊக்கமளிப்புகள் உண்டு (ஆள் கடத்தலும் மருந்து கடத்தலும் சட்டவிரோதமானவை என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்)

இலங்கைத் தமிழர் வந்துசேரும் வேகத்துடனேயே கிசுகிசு வென்று பல துறைகளிலும் காலூன்றி உள்ளனர். இது பிற இனத்தவரிடையே பொறுமையையும் ஆச்சரியத்தையும் ஒரு வகையில் எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது என எமக்குள்ளே பரவலாய் பேசிக் கொள்கிறோம் சரி அதை விடுங்கள்.

நாம் திடமாகத் தான் காலூன்றியுள்ளோமா? இதற்கு பதிலைக் கூடத் திடமாகச் சொல்ல எம்மால் முடியாமல் இருக்கிறது.

நாம் காலூன்றியது என்னவோ எவ்வகையில் பார்த்தாலும் வியாபாரத் தளம் மிக மிகத் குறுகிய தளந்தான் என்பதை நாம் இன்னும் அனுமானிக்கவே முடியாமல் உள்ளது

சற்று யோசித்துப் பாருங்கள். எமது வியாபார முயற்சிகள் பலவும் எமது தமிழரை மட்டும் நம்பித்தான் உள்ளது.– இன்னொரு வகையில சொல்லப்போனால் அர்ச்சனைத் துண்டு முதல் கொம்பியூட்டர் ஈருக இலாபம் என இன்புற்று சேகரிப்பவை தமிழர் தமிழரில் இருந்து உறுஞ்சியவையே.

நுகர்வோரும் பலனடைகிறார்கள் தான் என சொல்லிக் கொள்ள முயன்றாலும், நடைமுறை இதை உறுதி செய்வதாய் இல்லை.

எம்மவர்கள் மேற்கொள்ளும் பல முயற்சிகள் கூடிய வகையில் ஏமாற்றுகளாய்த்தான் உள்ளது.– வியாபாரம் என்றால் ஏமாற்றுதல்– ஏமாறுதல் உள்ளடங்கியது தான் என சீரணிக்க முயன்றாலும் சில சமயம் "இது தான் தமிழரிட்டை போகக் கூடாது" எனச் சொலலவும் வைக்கிறது.

அரை குறையாய் தெரிந்து கொண்டு பலர் பல துறைகளிலும் கால் பதித்துள்ளது ஆரோக்கியமானது என எண்ணத் தக்கதல்ல. அதே போல "ஏதோ அந்த நேரத்தில் மட்டும் பிடுங்கிறதை பிடுங்கினால் சரி" என்பது போல் சில தொழில்கள் புரிதலும் ஆரோக்கியமானதல்ல– நீங்கள் ஏமாற்றியது தமிழர் என்பதற்காக அல்ல, நாளைய உங்கள் வியாபாரம் அதே தமிழரை மட்டும் நம்பியது தான் என்பதை மறந்துவிடாதீர்.

சிரமதானமாய் செய்யத் தேவையில்லை. அதை எதிர்பார்க்கவும் கூடாதுதான். ஆனால் செய்வதை தொழில் சுத்தமாய் செய்யுங்கள் அதாவது பூரணமாய் தெரிந்து வைத்துக் கொண்டு அத் தொழிலில் இறங்குங்கள். அல்லது அதில் ஈடுபட முயலாதீர்.

எனக்கேற்பட்ட அனுபவத்தை இங்கு சொல்கிறேன்.

உதிரிப் பாகங்கள் எல்லாம் புதிதாக அதுவும் தரமானவை போட்டதாய் பணம் வாங்கினர். சில நாட்களின் பின் வேறோர் இடம் சென்று அதே பழுதை திருத்த முற்பட்டபோது ஏற்கனவே புதியது எதுவும் போட்டதற்கான அறிகுறி இல்லவே இல்லை. ஏற்கனவே இருந்ததை தேய்த்தோ ஒட்டியோ, அலுவல் பண்ணியிருந்தனர் தமிழர்.

அதேபோல என் நண்பர் ஒருவருக்கு புதிய பாகம் போட்டதாய் பணம் சுளையாய் வாங்கியிருந்தனர் இன்னொரு சந்தர்ப்பத்தில் அது உள்ளதையே ஒட்டி பூச்சுப் பூசி மெழுகி இருந்தது தெரிய வந்ததாம். இதுவும் ஒரு தமிழர் கைங்கரியம்.

ஒரு முறை சில்லறைக் கடையொன்றில் சில பொருட்கள் வர்ங்கிய போது எதிர்பார்த்த உண்மையான தொகையிலும் மிகக் கூடுதலாய் (இருமடங்கு) இருந்தது வீட்டுக்கு வந்து பார்த்ததுந்தான் தெரிந்தது. வாங்காத ஏதோ ஒன்றுக்கு விலையிட்டிருந்தனர். இது தற்செயலான தவறு என அவர்கள் சொல்லலாம் . இதை கதைவாக்கில் இன்னும் சிலருக்கு சொன்ன போது அவர்கட்கும் ஓரிரு முறையல்ல, சிலருக்கு பல முறை நிகழ்ந்ததை அறிந்து கொண்டேன். தற்செயலான தவறுகள் பலருக்கும் அதுவும் பலமுறை நடக்குமா என்ன?

இன்னொரு முறை பாகங்கள் எல்லாம் பொருத்தி விற்பனை செய்யப்பட்ட உபகரணம் சரியாய் வேலை செய்யவில்லை. இதை விற்றவரிடம் அறிவித்த போது அது தங்களின் தவருய் இருக்காது என அத் தமிழரால் சொல்லப்பட்டது. திருத்த இன்னொருவரை நாடியபோது அந்த உபகரணத்திற்குரிய பாகங்கள் சரியாய் பொருத்தப்படவும் இல்லை, இருக்க வேண்டிய சில பாகங்களும் இருக்கவில்லை என்பது கண்டறிந்து சொல்லப்பட்டது.

எந்த வியாபாரத்திலும் நுகர்வோர் தாம் வாங்கும் பொருளையோ வேலையையோ சரிபார்த்துக் கொள்ளவும் வேண்டும் தான்.

ஆனால் நுகர்வோர் தமிழர் தானே, ஏமாற்ற மாட்டார் என்ற நம்பிக்கையிலும், சிலர் சரிபார்க்கவே தெரியாத் தன்மையாலும் சிலர் தமிழர் தம்மை ஒரு மாதிரியாய் நினைப்பார் என்ற வெட்கத்திலும் சரி பார்ப்பதில்லை. இந்தப் பலவீனங்களை ஊகித்து அல்லது சாதகமாய் பாவித்து அல்லது அத்தகையதை தம் அதிர்ஷ்டமாய் கருதிக்கூட சுருட்டிக் கெட்டித்தனமெனக் கருதும் இத்தகைய வியாபாரம் நிரந்தரமானதா என்பதை இவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிலரிடம் இத் தவறுகள் சிலரால் சுட்டிக்காட்டப்பட்ட போதும் அது இந்தக் காதில் நுழைந்து அந்தக் காதால் வெளியேற்றப்பட்டும் விட்டது போல "சுத்துதல்" தொடர்ந்தும் நடக்கிறது.

இன்னொரு முறை செய்யப் பட்ட வேலையின் தவறுகளைச் சுட்டிக்காட்டிய போது சொல்லப் பட்ட பதில் "தந்த காசுக்கு இவ்வளவுதான் செய்ய முடியும்". எப்படியிருக்கிறது? தரப்பட்ட காசுக்குத் தகுந்தபடி சட்டில் உள்ளது தரம் மாறுமா என்ன? சட்டியில் உள்ளது தானே

12ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீடியோவுக்குள் வரவேண்டிய விவகாரங்கள்

அருண்

ஒரு வீடியோ கமரா வாங்கியாச்சா, இனியென்ன பிறந்தநாளா, ருது சாந்தியா திருமண விழாவா, நாடுங்கள் என ஒரு விளம்பரம்! அப்பாடா! (மேற்படி விசயம் கியூறியசிடம் கடன் வாங்கப்படுகிறது)

வீடியோப் படப்பிடிப்பாளர்கள் மூலைக்கு மூலை இருக்கிறார்கள் என அடித்துச் சொல்லலாம். ஆனால் இவர்கள் எடுப்பதெல்லாம் சிரமப்பட்டே பார்க்க வேண்டி யிருக்கிறது. கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு தான் அதில் தென்படுவதை ஊகிக்க வேண்டியிருக்கிறது (கியூறியஸ் மீண்டும் நினைவு கொள்ளப்படுகிறார்)

இது மட்டுமல்ல நிகழ்ச்சிகளை பார்ப்பதே பல சமயம் அலுப்படிக்கிறது. கமரா அசையாமல் நிற்க சம்பவங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன படப்பிடிப்பாளர் கமராவை இயக்கிவிட்டு வேறு ஒரு நிகழ்ச்சிக்கு போயிருப்பாரோ என எண்ணத் தோன்றுகிறது.

நடனமாடுபவர்களின் வயிறு மட்டும் பல நிமிடம் திரையில் நிற்கிறது. வயிற்றால் தான் அபிநயிப்பவர்கள் என படப்பிடிப்பாளர் நம்புகிறாரோ என்னவோ? நாடகத்தில் ஒரு முக்கியமான சம்பவமோ உரையாடலோ நடைபெறும்போது மேடையில் இருக்கும் மேசை கதிரைகள் திரையில் நிற்கும் அல்லது பார்வையாளர்கள் காட்டப்படுபவர். அந்தக் காட்சியின் தாக்கம் புரிந்து கொள்ளப்படும் விதத்தை காட்டுகிறேன் என தொகுப்பாளர் பெருமிதப்படலாம்.

இவை எல்லாம் ஏன் நடக்கிறன? அதனை சாதித்தவர்கள் சொல்லப் போவதில்லை? ஏனென்றால் பதில் அவர்களிடம் இல்லை. அவை தம் திறமைகள் என நம்புவர்கள் அவர்கள். உண்மையில் ஒரு வீடியோப் படப்பிடிப்பும் தொகுப்பும் இலகுவானதல்ல. இருந்தும் பல படப்பிடிப்பாளர்களால் இலகுவானதாய் கருதப்பட்டுக் கொண்டிருப்பதையே அவர்கள் வெளிவிடும் தொகுப்பு பறைசாற்றுகிறது.

ஒரு வீடியோத் தொகுப்பில் படப்பிடிப்பாளர் ரசனை மட்டும் முக்கியமானதல்ல, அது சென்றடையும் பிறரின் ரசனையின் ஒன்றுகூடிய விளைவாகத்தான் இருக்க வேண்டும்.

ஒரு நிகழ்ச்சியை படமாக்க முதல் அந்நிகழ்ச்சி நடத்துவோருடன் ஒரு கலந்துரையாடல் அவசியம். இதை எத்தனைபேர் செய்கின்றனர்.

ஒரு நிகழ்ச்சியின் ஒழுங்கு அது நிகழ முன்பே படப்பிடிப்பாளரால் அறிந்து வைத்துக் கொள்ளப் படவேண்டும். அவ்வாறெனில் தான் அதை எப்படி எப்படி எடுக்கலாம், எதை எதை எடுக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும் என முன்கூட்டியே அப்படப்பிடிப்பாளர் தீர்மானித்துக் கொண்டு அதன்படி இலகுவாக தயாரானபடிக்கு எடுத்து முடிக்கலாம். அதற்கு நிகழ்ச்சி நடத்துவோருடனான கலந்துரையாடல் அவசியம்.

நிகழ்ச்சி நடத்துவோர் விருப்பமும் ஈடேறும் வகையில் படமெடுத்து அதனைத் தொகுக்க முடியும். சிலர் கூடுதலாய் நெருக்கமான காட்சிகளையே விரும்புவர். சிலர் மிக வேகமாய் காட்சி நகர்வதை விரும்புவர். சிலர் மிக நிதானமாய் தாம் உடுத்திருக்கும் உடைகள் அலங்காரங்கள் எல்லாம் துல்லியமாக பிறருக்கு காட்டப்படுவதை விரும்புவர். சிலர் இவர்கள் இவர்கள் கூடுதலாய் காட்டப்பட வேண்டும் என விரும்புவர். சிலர் தம்வீட்டு உபகரணங்கள் காட்டப்பட வேண்டுமென விரும்புவர் படப்பிடிப்பாளரின் ரசனை இவற்றில் இருந்து வேறுபட்டால் கூட நிகழ்ச்சியாளருக்கு இசைவாய் நடக்க வேண்டியிருக்கும். இக்கலந்துரையாடலில் பெற்ற தகவலில் இருந்து எப்படி இசைய நடக்கலாம் என ஒரு முடிவுக்கு வரலாம். இவ்வாறெனில் தான் அதே ஆட்களால் மீண்டும் அடுத்த நிகழ்ச்சிக்கு அழைக்கப்படுவீர்கள்.

இதைவிட தனிப்பட்ட முறையில் ஒரு நிகழ்ச்சி பற்றிய அடிப்படை அறிவு படப்பிடிப்பாளருக்கு அவசியம். இந்துத் திருமணமென்றால் அங்கு இன்ன இன்ன ஒழுங்கில் நடக்கும் எனத் தெரிந்திருக்க வேண்டும். அவ்வாறெனில் தான் எந்த நிகழ்ச்சியையும் தவறவிடாமல் படமெடுக்கலாம். அவ்வாறு செய்யின் ''தம்பி என்ன மோதிரம் மாத்திறதை காணவில்லை'' என கேள்விக்கு இடம் நேராது.

ஒரு நாட்டிய நிகழ்ச்சி எனில் அந் நிகழ்ச்சியில் எத்தனை பேர் பங்கேற்கிறார்கள், என்ன மாதிரியான நடன அமைப்பு என முன் கூட்டியே தெரிந்து வைத்திருந்தால் இரண்டு அல்லது மூன்று கமரா இயக்குனர்கள் உதவியுடனாவது முழுநிகழ்ச்சியையும் தரமாய் படமாக்கலாம்.

அந்த நிகழச்சிக்கு உள்ள கசற்றின் நாடா போதாது என்பதை அறிந்து அந்நிகழ்ச்சி தொடங்கு முதலே வேறொன்றில் படமாக்குவதற்கான ஆயத்தங்களைச் செய்யலாம்.

பல வீடியோப் பிரதிகளைப் பார்த்திருக்கிறேன். நிகழ்ச்சிகள் ஒரே கோணத்தில் இருந்து மட்டுமே படமாக்கப்படுவதை அவதானிக்க முடிந்தது. தொகுக்கும் போது பல கோணங்களிலும் இருந்து அடுத்த காட்சிகளை மாறி மாறித் தொகுத்தால் அத் தொகுப்பை பார்ப்போருக்கு அது ஒரு சுவாரஷியத்தை ஏற்படுத்தும். ஒரு நிகழ்ச்சியில் சம்பந்தப்படாதவர்களுக்குகூட அத் தொகுப்பை பார்க்கும் ஆவல் ஏற்படும்.

ஆனால் எவரும் இதைச் செய்வதில்லை. எடுத்ததில் அப்படியே பாடல்களை இணைத்து உடனே பணத்தைப் பெறுவதிலேயே உன்னிப்பாயுள்ளனர்.

வெவ்வேறு கோணங்களில் இருந்து படமாக்க பல கமராக்கள் தேவை எனச் சொல்லாமல் ஒருவரே பல பாகங்களுக்கும் நகர்ந்து இதைச் செய்யலாம். அதற்கான ஒழுங்கை முன் கூட்டியே தீர்மானத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரகாரம் ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் மேடை நிகழ்ச்சிகளுக்கு இப்படி நகர்ந்து படமாக்கும் சௌகரியம் இருக்காது. இவ்வேளையில் மூன்று பேராவது கமராக்களை கையாள வேண்டிவரும். இவர் இவர் இன்ன இன்னதை படமாக்க வேண்டுமென்று முன்கூட்டியே ஒரு ஆலோசனையின் பெயரில் திட்டமிட்டால் தொகுப்பில் கச்சிதமாக அமையும்.

வெவ்வேறு கோணங்களில் காட்சிகளை ஏடுக்கும் முறையை ஓரிருவர் மேற்கொள்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது, ஆனால் இவர்கள் வேறு இடங்களில் கோட்டை விட்டு விடுகின்றனர்.

இவர்களில் சிலர் எழுத்தோட்டம் அதாவது ''ரைற்றில்'' இல் மட்டும் தம் பூரண திறமையைக் காட்டினால் மட்டும் போதும், அதன் மூலம் பிறரைக் கவர முடியும் என்னுவது போல் நடந்து கொள்கின்றனர் இவர்கள் தாம் எடுக்கும் படங்களில் ஒளி பற்றி சிந்திப்பதாய் தெரியவில்லை. நகர்ந்து நகர்ந்து எடுக்கும் போது ஒரு பக்குவம் தேவை. கமரா ஆடாமல் சீராய் இயங்கி நகரவேண்டும். இதற்கு அவர்கள் கமராவின் உச்சியில் பொருத்தப்பட்ட சிறு வெளிச்சக் குமிழ் உடன் மட்டும் கமராவை காவிச் செல்வது இலகு என அவர்கள் எண்ணுவதில் தவறில்லைத்தான். ஆனால் அந்த வெளிச்சம் மட்டும் தாராளம் என நினைப்பதுதான் தவறு.

சிலர் ஒருபக்கம் மட்டும் மிகப்பிரகாசமான வெளிச்சத்தை நிறுத்தி வைத்துவிட்டு படம் பிடிக்கின்றனர். இதனால் மறுபக்கம் நிழல் விழுவதை கண்டு கொள்வதாய்த் தெரியவில்லை. நிழல் விழும் பகுதியில் பிரகாசமான ஒளி இருப்பின் நிழல் விழாது. மேலும் நிகழ்ச்சி நடைபெறவுள்ள இடத்தை நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு பல மணி முன்போ முதல் நாளோ சென்று அதன் அமைப்பை கொள்ளவை அவதானித்தால் தான் அங்கு தேவையான வெளிச்ச அளவை தீர்மானிக்க முடியும். ஏற்ற வெளிச்சத்தை ஒழுங்கு செய்ய முடியும்.

ஆனால் எல்லாம் அங்கே போய் வெல்லலாம் எனச் சென்று மின்கடத்தி (வயர்) யும் போதாமல் எங்கெங்கே மின் மூலைகள் உண்டென்றும் விளங்காமல் மின் கறந்து கொள்ள அங்குமிங்கும் ஓடி இடறுப்படவேண்டி வரும்.

படத்தொகுப்பின் போது காட்சிகளை கண்ட இடங்களில் எல்லாம் சுழன்று வருவது போலவும் தரித்துக் காண்பித்தும், வரைபடம் போல் ஆக்கியும் நவீன தொழில் நுணுக்கங்களை கண்டபடி காண்பிப்பதும் காணக் கூடியதா யுள்ளது. இவை பிரத்தியேகமாக ஊன்றி கவனிக்கப் பண்ணத்தகு தருணங்களில் பாவிக்கலாம். ஆனால் மிக முக்கிய கட்டங்களில் குறிப்பாக தாலி கட்டுதல், மாலை மாற்றுதல் போன்ற இடங்களில் காட்டி அச்சந்தர்ப்பத்தின் முக்கியத் துவத்தைக் கெடுக்காதீர்.

பாடல் இணைக்கும் போது காட்சிக்குத் தகுந்த பாடல்களை தெரிவு செய்யுங்கள். அதை விட் பாடல் நாடா ஒன்றை எடுத்து எழுந்தமானமாக இணைக்காதீர். ஒரு முறை கல்யாணத் தொகுப்பொன்றில் ''புதுப்புது அர்த்தங்களில்'' வரும் ''கல்யாண மாலை கொண்டாடும் பெண்ணே'' எனும் பாடல் இடம் பெற்றது. ஆனால் அப்பாடலின் இறுதிப் பந்தி (காரணம்) மண முறிவு கொண்ட ஆணின் வெப்பியாரமாய் அமைகிறது. இப்பாடல் அத் தொகுப்பை முறை கேடாக்கி விட்டது. ஏனோ தானோ என பாடல்களை பதியாமல் கருத்தை உணர்ந்து சேர்க்க வேண்டும் அல்லது பொதுப்படையான டுயட் பாடல்களை சேர்க்கலாம்.

இவ்வளவுதான் என எண்ணாதீர். இன்னும் நுணுக்கங்கள் உண்டு. ஆனால் இவ் அடிப்படை ஓரளவு போதும்.

தற்போது கை அடக்கமான கமரா வைத்திருந்து தம் பிள்ளைகளின் பிறந்தநாளையும் கொண்டாட்டங் களையும் படமாக்கியுள்ளோருக்கும் ஏன் அவற்றை ரசிக்கப் போறவர்க்கும் இது உதவினால் இதை வாசித்ததில் நன்மையே.

# அம்மணமான தேசம்

மண்ணே மண்ணே!!
என்று உன்னை விளிப்பதற்கு
உன்னிடத்தில் இப்போ
என்னதான் அப்படியிருக்கிறது

தேசம் முழுவதுமே
எரிந்த சுடுகாடாய்
புதைந்த இடுகாடாய்
ஒட்டிய வயிறும்
குழிவிழுந்த கண்களும்
கன்னம் தீஞ்சு
எண்ணம் தீஞ்சு
நெஞ்சு அவிந்து
நினைவெல்லாம் மரத்து
பயித்திய மக்களாய்

ஏ! தேசமே
புக்காரா, பங்கர்
செல், பாஸ் என்னும்
கலை சொற்களை
தந்தால் மட்டும் போதுமா?

ஏ பரதேசமே!
உன் மக்கள்
அன்னபரதேசம்
போனது உண்மைதான்
ஆனால் உன்னை
பிச்சைக்காரி ஆக்கியது
அன்ன பரதேசம் போனவர்கள்
அல்ல!
ஆம்,
உனக்கு விளங்கும் என்று
நினைக்கிறேன்
பழம் பெருமை கதைப்பதற்கும்
ஒரு தகுதி வேணும்
ஆம்! நீ கதைக்கலாம்
நீ வளங் கொழிக்க வாழ்ந்தாய்
மக்கள் மனம் மகிழ வாழ்ந்தாய்
எல்லாம் உண்மைதான்
சீதேவி உன்னுடன்
சரசமாடி சல்லாபித்தது
எனக்கு மட்டுமல்ல
உன்னைத் தெரிந்தவர்களுக்கும்
தெரியும்
சிலர் சொல்லுவார்கள்
செல்வம், செல்வோம் செல்வோம்
என்னுமாம்
தரித்திரம் தரித்திரோம் தரித்திரோம்
என்னுமாம்
ஐயோ என் தேசமே
அந்தச் சொல்லும்
உனக்குப் பலித்து விட்டதே!

உலர்ந்த கண்களின்
ஊடே கிட்டாத
நெடும் பயணத்தை ரசிக்கும்
முரல் கருவாடு போல்
போன மக்கள்
செல்வோம் செல்வோம்!!
தரித்திரோம்! தரித்திரோம்!!
என்கின்றனரே.

32ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெற்றிப்பொட்டும் திதிச்சோறும்



**பாலசுந்தரன்**

நாள் ஒரு இடம்பொழுது ஒரு இடமாக விருந்துகள் கிடைத்தன. கனடாவுக்கு வந்து சில வாரங்களாகியும் விருந்துகள் குறையவில்லை. இங்கு வந்து இத்தனை நாட்களாகியும் வேலை கிடைக்காதது ஒரு காரணம். விருந்து தருபவர்களும் பொதுவாக "வெல்பெயர்" இல் உள்ளவர்கள்.

இங்கு வந்த பின் பழசையெல்லாம் மறந்துவிட்டேன், அல்லது மறக்கவிரும்புகிறேன், 'சுக்கு' என்ற என் நாமம் திக்கு எட்டும் பரவுவதாக புளகாங்கிதம் அடைந்தவன். சுக்கு என்பது எனது இயக்க பெயர் அது ஒரு மிடுக்கான காலம் அப்போது அது சுகம்.

எனக்கென்று ஒரு மண்ணிற CD400. வேண்டுகோளுக்கு இணங்க பெற்றுக்கொள்ளப்பட்டது. முன்வருவோர்தான் தலைவணங்கினுர்கள் என்றில்லை. பின் உள்ளோரும் தான் வணங்கினுர்கள். ஒரு நாள் எனது CD 400 இல் உலா வந்தபோது தெருவில் அட்டகாசம் பண்ணிய சில இளைஞர்கள் தம்மை அடக்கி அடங்கி ஒடுங்கி நின்றனர். நான் கடந்து போனபின் ஒருவர் பின்னே நையாண்டி பண்ணினுர். மோட்டார்சைக்கிளின் கண்ணுடியில் பார்த்து விட்டேன். உடனே திருப்பினேன். எனது CD400 அந்த திருப்பமும், அவருக்கான தண்டனையும்தான் இன்று பின்னே உள்ளவரையும் நடுங்க வைக்கிறது.

இப்போ நான் கனடாவில். எல்லாம் ஒரு காலம். இங்கு எல்லாரும் ஒன்ரும். எமக்கு அங்கு கிடைத்த மரியாதைகளுடன் இங்கு உள்ள இராணுவத்திற்கான மரியாதையை ஒப்பிடவே முடியாது. இங்கு மரியாதை தூசு. அவர்கள் வெறும் பிரசைகள் தான். அங்கு அப்படியல்ல கடவுளுக்கும் மேலான பயபக்தி. அவை கிடைக்கப் பெற்றன என்பதைவிட எடுத்துக் கொள்ளப்பட்டன என்பதே பொருந்தும். இப்போ புரிகிறது. அது கிணற்றுக்குள் வாழ்ந்த காலம் என்று. இங்கே இந்த பரந்த மனங்களுள்ளே பிரதமரும் பிச்சைகாரனும் பிரசைதான்.

போகுமிடங்களில் எல்லாம் 'இலங்கையில் இருந்து வந்தவன்' என்ற பார்வையையே கொண்டிருந்தனர். இயக்கத்தில இருந்து வந்தவன் என்ற பார்வை எங்கேயும் கிடைக்கவில்லை அல்லது குறைந்தபட்சம் என் முன்னே கிடைக்கவில்லை. பயம் காரணமாக இருக்காது. பண்பே காரணமாக இருக்கும் அது எனக்கும் சுகமாக இருந்தது.

தனிமையில் உள்ளபோது பழையவற்றை நினைப்பது உண்டு. அப்போதைய சாகசங்கள் எல்லாம் இப்போது கொடுமைகளாக தெரிகின்றன. அப்போது என்னிடம் எந்தவித கொள்கை பிடிப்போ அல்லது அரசியல் ஞானமோ இருந்திருக்கவில்லை. இருந்ததெல்லாம் தலைமை விசுவாசம் ஒன்றே. அந்த ஒன்றே என்னையும் வளர்த்து என் இயக்கத்தையும் வளர்க்க உதவியது. மக்களுள் வேர் ஊன்ற 'கடும்' தண்டனைகளே போதுமானதாகி இருந்தது தண்டித்தேன் வளர்ந்தேன்.

சிறிய கள்வர்கட்கே பெரிய தண்டனை. அப்படியாயின் பெரிய கள்வர்க்கு.... நினைக்கவே பிடிக்கவில்லை. களத்திற்கு போவதைவிட அங்கு வீழ்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கையே மிக முக்கியம். கூடுதலாக வீழத்தியவனே அன்றை தினத்தின் பெருமைக்குரியவன் ஆவன். நான் பல நாட்கள் பெருமைக்குரியவன் ஆகியுள்ளேன் பெருமையின் மிதப்பில் உறக்கமே வருவதில்லை.

இவற்றையெல்லாம் விட எனது முக்கிய தொழில் 'பொட்டு வைப்பு' இதில் எனது நாமம் சிறந்து விளங்கியிருந்தது. நெற்றி பொட்டு வைத்தில் வெறுமனே நெற்றி பொட்டு வைத்ததுடன் நின்றுவிடாது. பொட்டு வைக்கப்படப் போகிறவரை தேடிப்பிடித்து வேண்டியளவில் விசாரணை செய்து சாதகமான காரணிகள் தேடியெடுத்து பின் அவற்றை ஒப்புக்கு விளக்கமாக கொடுத்தே பொட்டு வைக்கப்பட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும். அப்படியாயின் மட்டுமே நாமம் நிலைக்கும்.

சம்பந்தப்பட்டவர்களை பிடிக்கப்போகும் போது மரண பயத்தில் ஓடுவார்கள். பொதுவாக தப்பியோட முடிவதில்லை. அகப்பட்டபின் அழுவார்கள் குளறுவார்கள், கால்களில் வீழ்ந்து கெஞ்சுவார்கள். மரணபயம் அவர்களின் முகத்தில் தெரியும். சிலர் தம்மையறியாமலேயே தம்மை ஈரமாக்குவார்கள். எப்படியாயினும் அவர்கட்கு முடிவு பொதுவாக ஒன்றுதான்.

சம்பந்தப்பட்டவர்களை விட கொடுமைப்படுவோர் அவர்களின் உறவுகள். குறிப்பாக தாய் மனைவி போன்றோர். இறுதியில் அவர்களே வந்து உடலை மின்கம்பத்தில் இருந்து கழற்றி செல்வார்கள். சிலர் முகாமில் வந்து கேட்டு விட்டே கழற்றி செல்வார்கள்.

இவையெல்லாம் அப்போது முன்னெடுப்புகள். ஆனால் இப்போது இவை கனவுகள் கனவுகளில் நடந்த சம்பவங்கள்.

பழசையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கிவிட்டு இன்றைய விருந்திற்கு புறப்பட ஆயத்தமானேன் நண்பன் ஒருவன் வந்து அழைத்து போவதாக கூறியிருந்தான். வேறு மூன்று நபர்களுடன் இவனும் ஒருவனாக மொத்தம் நான்கு பேர் அங்கு குடியிருக்கிறார்கள். எனது நண்பனுக்கு அதிகம் சமைக்க தெரியாது. ஆனால் அவனுடன் இருக்கும் ஒருவர் தலைசிறந்த சமையல் காரராம்.

குறிப்பிட்டபடி எனது நண்பன் வந்து என்னை அழைத்தான். வெளியே போவதென்றால் எனக்கு ஒரே குதூகலம். ஷெல்லடி கெலியடி பொம்பர் பங்கர் என்று இருந்த எனக்கு இது ஒரு சுவர்க்கம்தான் அவனின் பின்னே அவனின் வீட்டுள் நுளைந்தேன்.

ஒரே கணத்தில் உடல் விறைத்தது. அங்கு சமையல் காரனாக வரவேற்றவர் வேறு யாருமல்ல.. இவரின் தம்பி எனது நண்பன். அப்போது இருவரும் ஒன்றாக ஒரே வகுப்பில் படித்தோம். போராட்டம் ஆரம்பமானது. படிப்பு பொதுவாக குழம்பியது. அவன் தொடர்ந்தும் படித்தான் எந்த வித குழப்பமும் இன்றி. நான் அவனை கேட்டேன். நான் எல்லா இயக்கங்களில் சேர முற்றாக மறுத்துவிட்டான். நான் எல்லா இயக்கங்கட்கும் எனது பெயரைக் கொடுத்தேன். அதே வேளை தொடர்ந்தும் எனது நண்பனை வற்புறுத்தினேன். இறுதியில் அவனும் சம்மதித்தான். அதை தொடர்ந்து அவனும் எல்லா இயக்கங்கட்கும் தனது பெயரைக் கொடுத்தான். உறுப்பினர் ஆவதற்குமுன் எமக்கு எந்த இயக்கத்தின் இயல்புகள் பற்றியும் தெரிந்திருக்கவில்லை உண்மையில் மக்களுக்கே தெரிந்திருக்கவில்லை. வரிசையாக 39 தான்தோன்றி இயக்கங்கள் இறுதியில் அவன் ஒன்றுக்கும் நான் வேறு ஒன்றுக்கும் போனோம்.

காலம் கடந்தது நான் சுக்கு ஆனேன். ஒரு நாள் எனக்கு அவனுக்கு பொட்டு வைக்கும்படி கட்டளை வந்தது. நானே போராட்டத்தில் ஈடுபடுத்தியவனை பொட்டுவைத்து கொல்வதா? இயக்கம், சமயம். தலைவர் கடவுள், கட்டளை கொள்கை என்றாகியது.

அவனை பிடிக்க சென்றபோது அவன் ஓடவில்லை. மிடுக்காக நின்றான் நண்பன் என்ற உறவையும் கொண்டாடவில்லை. முடிந்ததை செய் என்று நின்றான் ஆனால் ஏனையோர் அழுது குழறினர். தாயின் முகம் இப்போதும் நினைவிருக்கிறது அன்றுவரை அவள் இன்னொரு தாயாக இருந்திருந்தவள். ஆனால் அதுதான் கடைசிநாள். இரண்டு இயக்கத்திற்கும் சோறு போட்டவள் அதுவும் அன்றுடன் நின்றுவிட்டது.

நண்பனின் அண்ணன் என்பதையும் மறந்து இந்த நபரும் அழுதார். சில சமயங்களில் ஊர் முன்னிலையில் இவர் காலை பிடித்து கெஞ்சினார். மீண்டும் தலைவர் கடவுள் ஆனார். கட்டளை கொள்கையானது. நண்பனை இழுத்து வந்து..........

பின்னர் அவனின் வீட்டார் மின்கம்பத்தில் இருந்து அவனின் உடலை எடுத்து சென்றனர் ஆனால் நான் மேலும் ஒருபடி பொல்லாதவன் ஆனேன். அதுவே சுகமாக இருந்திருந்தது. கொலைகளைப் பற்றியோ அன்றி கொலைவகைகளைப் ற்றியோ நான் கவலைப்பட்டு இருந்திருக்கவில்லை. இப்போது அவற்றை நினைக்க விருப்பமில்லை.

எனக்கு இன்னொரு குடும்பமாக இருந்த அந்த நண்பனின் வீட்டார் பின்னர் என்னைப் பார்ப்பதும் இல்லை. சில நாட்களுக்குள் இந்த அண்ணன் வெளிநாடு வந்தது. அறிந்தேன் இன்று அவரிடமே விருந்தா? திரும்பி ஓடவேணும் போல இருந்தது. இன்றுவரை யாருமே கிளறாத எனது பழைய வாழ்வை இன்று சபைக்கு எடுக்கவா? ஏங்கியபடி நின்றேன்.

"என்னடாப்பா... புனிதன் எப்படி இருக்கிறாய்... இஞ்ச வா.. நான் சமைக்கிறன், உங்க வர இயலாது" என்றார் எனது 'சுக்கு' நாமத்தையே இரைமீட்காத நபர் என்னைப்பார்த்து புனிதன் (எனது உண்மை பெயர்) என்கிறார். பெயருக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?

நடுங்கியபடி உள்ளே செல்கிறேன் அவரின் முகத்தை பார்க்கவே பயமாக அல்லது வெட்கமாக இருந்தது. எனது பழைய நடவடிக்கைகளை எந்தவொரு செயல்பாடும் இரைமீட்க வைக்கக்கூடாது என்பதே எனது அந்தத் கண அவா. அருகில் சென்று நின்றேன்.

"நேற்றைக்கு நடந்ததைக்கூட நாங்கள் மாற்ற இயலாது. அப்படியிருக்க எப்பவோ நடந்ததுகளை ஏன் யோசிக்கிறாய். மற்றவைக்கு ஆள் காட்டாமல் இயல்பாய் இரு. இருந்து சாப்பிட்டிட்டு போ எனக்கு நீதான் வாறாய் எண்டு தெரியாமல் போச்சு. தெரிந்திருந்தால் இன்னும் விலாசமாய் சமைச்சிருப்பன் என்று தொடர்ந்தான். எனது கண்கள் குளமாகின.

"மிதிச்சுப்போடுவன்... ... அழாதையடா.. என்றார் அவர். அப்படி செய்தாலாவது கொஞ்சம் ஆறுதலாக இருக்கும் போல் இருந்தது.

"அண்ணை... நான் தான் அவனை கொன்றது. அவனின்ற சாவீட்டுக்கும் நான் வரேல்லை இப்ப நான் உங்கடை கையாலேயே சாப்பிட போறன் இதை நான் அவனுடைய திதி சோறாகவே நினைக்கிறன் உங்கடை வீட்டாருக்கும் இதை எழுதுங்கோ நெற்றியிலை பொட்டு வைச்சவன் இப்ப திதி சோறு சாப்பிட்டு போறான் எண்டு.

அவரும் கண்கள் கலங்குவதை பார்க்க பிடிக்காமல் வெளியே வந்தேன். அந்த உயர்ந்த மாடியில் இருந்து வெளியே பார்க்கிறேன். இது ஒரு பரந்த மனங்களின் பரந்த தேசம். எனது மண் ஒரு பாவங்களை செய்யுமிடமாகவே தென்பட்டது ஆனால் இந்த மண் பாவங்களை கழுவுமிடம். திதி சோறு சாப்பிட தயாரானேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்நாடகம்

தமிழில்: நேசன்

# கறை படிந்த கைகள்

## ஜீன் போல் சாத்ரே

(ஹிகோ ஆபிஸில் வேலை செய்து கொண்டு இருக்கின்றான், பின்னர் அருகில் உள்ள அடுப்பில் இருந்த கோப்பிப் பானையை எடுக்கின்றான்)

ஜெசீக்கா: அந்த கோப்பிப்பானையுடன் ஆபிஸில் என்ன செய்து கொண்டு இருக்கின்றாய்?

ஹிகோ: ஜெசீக்கா நீ ஆபீசுக்குள் வருவது தடைசெய்யப் பட்டிருக்கின்றது

ஜெசீக்கா: அந்த கோப்பிப் பானையுடன் என்ன செய்து கொண்டு இருக்கின்றாய்?

ஹிகோ: நீ இங்கு என்ன செய்து கொண்டு இருக்கின்றாய்?

ஜெசீக்கா: உன்னை நான் பார்க்க வந்தேன் என் அன்பே!

ஹிகோ: நல்லது, இப்போது பார்த்தாகி விட்டது அல்லவா ஹும் உடன் வெளியேறு.

ஜெசீக்கா: நீ என்னுடன் எப்போதும் இல்லாது இருப்பது சரியான கஷ்டமாக இருக்கின்றது என் குஞ்சே.

ஹிகோ: இப்ப உன்னுடன் விளையாட எனக்கு நேரமில்லை யசீக்கா

ஜெசீக்கா: (சுற்றிப் பார்த்தபடி) ஆபீசைப் பற்றி எனக்கு நீ ஒன்றும் சொல்லவில்லை. ஹும் நான் சின்னப் பெட்டையாக இருந்த காலத்தில் எனது தந்தையின் அறையில் இருந்து வரும் சுருட்டு வாடை இந்த ஆபீசிலும் இருக்கின்றது.

ஹிகோ: இங்க பார்

ஜெசீக்கா: கொஞ்சம் பொறு (தனது பொக்கட்டிற்குள் இருந்து ஒரு பொருளை எடுத்தபடி) இதைக்கொண்டு வந்தேன்

ஹிகோ: என்ன?

ஜெசீக்கா: (தனது பொக்கட்டுக்குள் இருந்து ரிவோல்வரை எடுத்து ஹிகோவின் கையில் கொடுக்கின்றாள்) இதை நீ மறந்து விட்டாய்

ஹிகோ: அதை நான் மறக்கவில்லை

ஜெசீக்கா: ஆமாம், நீ இதை எப்போதும் உன்னுடன் வைத்திருக்க வேண்டும்.

ஹிகோ: உனக்கு நான் சொல்வது இன்னும் விளங்கவில்லை. நீ இந்த ஆபிசில் கால் அடிவைப்பதை நான் முற்றாக தடை செய்திருக்கின்றேன். உனக்கு விளையாட வேண்டுமாயின் தோட்டத்திற்கு அல்லது summer house இற்குச் செல்லலாம்.

ஜெசீக்கா: ஹிகோ 6 வயது பிள்ளையுடன் கதைப்பதைப் போல் நீ என்னுடன் கதைக்கின்றாய்

ஹிகோ: அதில் என்ன பிழை இருக்கின்றது? நீ என்னைப் பார்க்கும்போதெல்லாம் எள்ளி நகையாடுவதை இனியும் என்னால் சகித்துக்கொண்டிருக்க முடியாது. எமக்கு 50 வயதாகும் போது இது சரியாகிவிடும் நான் இருவரும் சேர்ந்து பழகிய இந்த கூடாத பழக்கத்தில் இருந்து விடுபடவேண்டும். நான் சொல்வது உனக்கு விளங்குகின்றதா?

ஜெசீக்கா: நன்றாக விளங்குகின்றது.

ஹிகோ: நீ மாற முயற்சி செய்வாயா?

ஜெசீக்கா: ஆம்

ஹிகோ: நல்லது அப்படியானால் நீ எங்கிருந்து இந்தத் துவக்கை எடுத்தாயோ அங்கேயே அதைத் திருப்பி வைத்து விடு.

ஜெசீக்கா: முடியாது

ஹிகோ: ஜெசீக்கா

ஜெசீக்கா: அது உன்னுடையது. அதை நீ வைத்துக்கொள்

ஹிகோ: அதனால் எனக்கு ஒரு பிரயோசனமும் இல்லை என நான் உனக்குச் சொல்கின்றேன்

ஜெசீக்கா: அப்ப நான் அதை வைத்து என்ன செய்ய வேண்டும் என நீ விரும்புகின்றாய்

ஹிகோ: நீ என்ன செய்ய வேண்டும் என்பதில் எனக்கு அக்கறை இல்லை

ஜெசீக்கா: உன் மனுஷி துவக்கை பொக்கட்டுக்குள் வைத்தபடி ஊரெல்லாம் சுற்றுவதை நீ விரும்பமாட்டாய் என நினைக்கின்றேன்.

ஹிகோ: வீட்டுக்குப் போய் அதனை எனது சூட்கேசுக்குள் வை.

ஜெசீக்கா: ஆனால் நான் இப்ப அங்கு போக அவசியமில்லை நீ என்னுடன் மிச்சம் மோசமாக நடந்து கொள்கின்றாய்

ஹிகோ: முதல் நீ அதனை இங்கு கொண்டு வந்திருக்கவே தேவையில்லை

ஜெசீக்கா: அப்ப நீ அதை இங்கு கொண்டு வர மறந்திருக்க கூடாது?

ஹிகோ: நான் அதை மறக்கவில்லை என முதலே உனக்குச் சொன்னேன்.

ஜெசீக்கா: மறக்கவில்லையா? அப்படியானால் நீ ஹெடேடரை கொல்லும் திட்டத்தில் ஏதோ மாற்றங்களைச் கொண்டு வந்திருக்க வேண்டும்.

ஹிகோ: பெரிதாய் சத்தம் போடாதே.

ஜெசீக்கா: ஹிகோ எனது கண்களைப் பார்த்துச் சொல்லு, நீ திட்டங்களை மாற்றவில்லையா?

ஹிகோ: இல்லை மாற்றவில்லை

ஜெசீக்கா: ஆமோ, இல்லையோ நீ ஏதோ...

ஹிகோ: ஆமாம் ஆனால் அதை நான் இன்றைக்குச் செய்யப் போவதில்லை.

ஜெசீக்கா: ஓ ஹிகோ என் குஞ்சு ஹிகோ! ஏன் அவனை இன்றைக்கு கொல்லமுடியாது? எனக்கு bore அடிக்கின்றது. நீ தந்த எல்லா நாவல்களையும் வாசித்து விட்டேன் வேறு எதுவும் வேலையில்லாமல் கட்டிலில் ஒரே படுத்துக் கொண்டு இருந்தால் கொழுத்துப்போன துருக்கி அடிமைப்பெண்கள் போல தடித்துப்போவேன். எதற்காகக் காத்துக் கொண்டு இருக்கின்றாய்

ஹிகோ: ஜெசீக்கா நீ இன்னும் விளையாடிக் கொண்டு இருக்கின்றாய்?

ஜெசீக்கா: நீ தான் இப்ப விளையாடிக் கொண்டு இருக்கின்றாய். கடந்த 10 நாளாக அவனை கொல்வதாக நீ என்னிடம் பெருமை அடித்துக் கொண்டு இருந்தாய் ஆனால் அவன் இன்னும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றான். இது ஓர் விளையாட்டு என்றால் இது நீண்ட காலம் எடுக்கும் ஓர் விளையாட்டு. மற்றவர்கள் காதில் நாம் கதைப்பது கேட்டுவிடுமோ என்று பயத்தால் நீண்டகாலமாக நாம் இருவரும் காதுக்கும் இதைப்பற்றி குசுகுசுத்துக் கொண்டு இருக்கின்றோம், உன்னை ஓர் கர்ப்பிணிப் பெண்போல் நினைத்து உன் விளையாட்டு கனவுகளைக் கேட்டுக்கேட்டு அலுத்துப் போய்விட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஹிகோ: நீ தான் அந்தமாதிரி விளையாட்டுக்கெல்லாம் சரி நான் செய்யப்போவது ஓர் விளையாட்டான காரியம் அல்ல.

ஜெசீக்கா: (அலுப்புடன்) அப்படியானால் இது அதை விடமோசம் தான் செய்யத்திட்டமிட்ட வேலையை முடிக்க ஆற்றலில்லாதவர்களை பாத்து நான் எப்போதும் வெட்கித் தலைகுனிவேன் நான் உன்னில் நம்பிக்கை வைக்க வேண்டும் எனில் காரியத்தை முடிக்க வேண்டும்.

ஹிகோ: இன்று வசதியான நாளல்ல

ஜெசீக்கா: (தாழ்த்திய சாதாரண குரலுடன்) இப்ப பார்த்தாயா

ஹிகோ: நீ என்னைப் பைத்தியக்காரனுக்குகின்றாய் அவன் சில விருந்தினரை இன்று எதிர்பார்க்கின்றான்.

ஜெசீக்கா: எத்தனை பேர்?

ஹிகோ: இரண்டு

ஜெசிக்கா: அப்ப அவங்களையும் கொல்லு.

ஹிகோ: ஒருவர் விளையாட விருப்பமில்லாத போது அவனோடு விளையாட விரும்பும் ஒருவரை விட மிக தொந்தரவானவர் ஒருவரும் இருக்க முடியாது. நான் உன்னிடம் உதவி ஒன்றும் கேட்கவில்லை. நீ ஒன்றும் செய்யத் தேவையில்லை. எனக்கு கரைச்சல் தராமல் இருந்தாலே போதும்.

ஜெசிக்கா: அப்ப சரி, உனது வாழ்க்கையில் என்னை வெளியே வைத்திருக்க வேண்டுமானால் அப்படியே செய்து கொள். ஆனால் இந்த துவக்கை நீயே வைத்துக்கொள். ஏனென்றால் அதனையும் நான் எனது பொக்கட்டுக்குள் எப்போதும் வைத்திருந்தால் எனது பொக்கட் பாரத்தால் தொங்கத் தொடங்கி விடும்.

ஹிகோ: அதை நான் உன்னிடம் இருந்து பெற்றுக் கொண்டால் நீ ஆபீசை விட்டுப் போவாயா?

ஜெசிக்கா: முதலில் துவக்கை எடுத்துக் கொள். (ஹிகோ துப்பாக்கியை வாங்கிக் கொள்கிறான்)

ஹிகோ: இப்ப உனது காரியத்தை நடத்து.

ஜெசிக்கா: ஒரு நிமிசம். எனது கணவன் எப்படியான ஆபீசில் வேலை செய்கிறான் என்பதைப் பார்க்க எனக்கு உரிமை இருக்கின்றது. (அவள் ஹோடரரின் மேசையின் அருகே நின்று) இந்த மேசையருகே வேலை செய்வது யார்? நீயா? வேறு யாருமா?

ஹிகோ: (வெறுப்புடன்) அவன் தான். (அந்த மேசையைக் காட்டி) அதிலிருந்து தான் லே செய்கிறான்.

ஜெசிக்கா: (அவன் சொல்வதைச் செவிமடுக்காமல்) இது அவருடைய கையெழுத்தா? (அவள் மேசையிலிருந்த தாளை எடுக்கிறாள்)

ஹிகோ: ஆமாம்.

ஜெசிக்கா: (புத்துணர்வு பெற்றவளாக) ஆகா.. ஆகா

ஹிகோ: அதைக் கீழே போடு

ஜெசிக்கா: இந்த எழுத்துக்களை கவனித்தாயா? அவர் தனது எழுத்துக்களை ஒன்றுடன் ஒன்று தொடுக்காமல் எழுதியிருக்கிறார்

ஹிகோ: அதற்கு இப்ப என்ன?

ஜெசிக்கா: அதற்கு என்ன என்று கேட்கிறாயா? அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

ஹிகோ: யாருக்கு?

ஜெசிக்கா: அது அவனது குணத்தை அறிய உதவும். நீ கொல்லப் போகும் மனிதனின் குணம்சத்தை இதிலிருந்து அறியலாம். ஒவ்வொரு எழுத்துக்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைப் பார். ஒவ்வொரு எழுத்தும் ஒரு தீவைப் போல இருக்கின்றது. இவை நியாயமாக எதையோ காட்டுகின்றது.

ஹிகோ: எதனை?

ஜெசிக்கா: எனக்குத் தெரியாது. இது ஒருவரை மிகவும் தூண்டக் கூடிய கையெழுத்து. அவரது குழந்தைப் பருவ ஞாபகங்கள், அவர் அடைந்த பெண்கள், அவர் உறவு கொள்ளும் விதம், எல்லாமே இந்தக் கையெழுத்தைப் பார்த்தால் வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால் அதை எப்படி வாசிப்பது என்று தான் எனக்குத் தெரியவில்லை. ஹிகோ, எழுத்துக்களில் இருந்து ஒருவனின் குணம்சத்தை கற்றுக் கொள்வதற்கான ஒரு புத்தகத்தை நீ வாங்கித் தர வேண்டும். எனக்கு இது பற்றி கற்றுக் கொள்ளும் திறமை இருக்கின்றது போல் உணர்கிறேன்.

ஹிகோ: இங்கிருந்து நீ உடனே வெளியேறுவாயானால் அந்த புத்தகத்தை நான் வாங்கித் தருவேன்.

ஜெசிக்கா: இதைப் பார்த்தால் ஒரு பியானோ கதிரை மாதிரி இருக்கின்றது.

ஹிகோ: ஆம், அதே தான்.

ஜெசிக்கா: (அதில் இருந்து ஆடியபடி.) இது நல்ல சோக்காக இருக்கிறது. இதில் அவர் இருந்து புகை பிடித்து கதைத்து கதிரையில் முன்னும் பின்னும் ஆடுவார் போலும்.

ஹிகோ: ஆம்

ஜெசிக்கா: அவர் குடிப்பாரா?

ஹிகோ: மீனைப் போல

ஜெசிக்கா: வேலை செய்யும் போதிலுமா?

ஹிகோ: ஆம்

ஜெசிக்கா: ஆனால் அவர் வெறிக்கக் குடிப்பதில்லை?

ஹிகோ: இல்லை.

ஜெசிக்கா: அவர் தந்தாலும் நீ குடிக்க மாட்டாய் என்று நம்புகின்றேன். உனக்கு எப்படி கிளாசைப் பிடிப்பது என்று கூடத் தெரியாது.

ஹிகோ: பெரிய அக்கா மாதிரி எனக்கு நீ ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. எனக்கு குடியோ, புகைப்பழக்கமோ, சூடோ, குளிரோ, வெக்கையோ, வைக்கோல் மணமோ பிடிப்பதிலலை என்று எனக்குத் தெரியும். எனக்கு எதையுமே பிடிக்காது

ஜெசிக்கா: (மெதுவாக) இங்கே இவர் இருப்பார், கதைப்பார், புகைப்பார், குடிப்பார்

ஹிகோ: ஆம். ஆனால் நான்..

ஜெசிக்கா: (காஸ் அடுப்பை கூர்ந்து பார்த்தபடி) அது இங்கு என்ன செய்கின்றது? அவர் தனது சமையலைத் தானே செய்வாரா?

ஹிகோ: ஆமாம்.

ஜெசிக்கா: (வெடித்துச் சிரித்தபடி) எதற்காக? உனக்குச் சமைக்கும் இதே வேளை நான் அவருக்கும் சமைக்கலாம். அவரும் எங்களுடன் சேர்ந்து சாப்பிடலாம்.

ஹிகோ: அவர் மாதிரி உன்னால் சமைக்க முடியாது. எது எப்படியாயினும் தானே சமைப்பது அவரைப் பொறுத்த வரைக்கும் சந்தோசத்தை தருவது. காலையில் அவர் தானே எங்களுக்கு காப்பி கூட ஊத்தித் தருகின்றார். கள்ளச் சந்தையில் எடுத்த நல்ல காப்பித் தூள்.

ஜெசிக்கா: (காப்பிப் பானையைக் காட்டியபடி) அதிலா?

ஹிகோ: ஆம்.

ஜெசிக்கா: நான் வரும் போது நீ அந்த கோப்பிப் பானையைத்தானே கையில் வைத்திருந்தாய்? அதிலிருந்து என்ன தேடிக் கொண்டிருந்தாய்?

ஹிகோ: எனக்குத் தெரியாது. (மௌனம்) அவர் அதனை தொடும் போது அது உண்மையாகவே இருக்கின்றது. (அவன் பானையைத் தூக்குகின்றான்) அவர் எதைத் தொட்டாலும் அது நல்லா

25 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனக்கலவரங்கள் அரசியல் கரும்பா?

## 83 கலவரமும் அதன் பின் விளைவுகளும்.. (தொடர்ச்சி)

-நேசன்-

மாக்சிச, லெனினிச கருத்தியலின் அடிப்படை கட்சி விதிகளாகவும் வாய்க்கால்களாகவும் விளங்குவது 'விமர்சனம்' 'சுயவிமர்சனம்' என்பனவே. இவ்வடிப்படை விதிகள் மனித சிந்தனைப் போக்கினை விஞ்ஞான பூர்வமாக வளர்க்கும் என்பது மட்டுமன்றி, அது கட்சி ஆரோக்கியத்திற்கும் அவசியமானது என வாதிடப்பட்டு ஏற்கப்பட்டது. இதற்கு முரணாக இராணுவக் கருத்தியலில் விமர்சனம், சுயவிமர்சனம் என்பன அடிப்படையில் ஏற்கப்படக் கூடாது ஒன்று. அதன் அடிப்படை விதி யாதெனின் 'கீழ்ப்படிவு' என்பதே. உத்தரவு, கட்டளை, கீழ்ப்படிவு என்பன அதன் ஒழுக்கங்கள். கூட்டணியின் மேடைகளில் எழுபதுகளில் எழுப்பப்பட்ட கோஷம் 'செய் அல்லது செத்து மடி' என்பது மேற்படி ஒழுக்கங்களை விளக்கி நிற்கும் ஒரு வித கோசமே.

இனக்கலவரத்தில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இருவித பயன்கள் ஏற்பட்டன. முதலாவது இனக்கரவரங்கள் அவர்களது அரசியல் அதிகாரத்தை நிலை நிறுத்தவும் பலப்படுத்தவும் உதவியது . இரண்டாவது இனக்கலவரம் அரசியல் ரீதியாக வேறுபட்டு இருந்த தமிழ் மக்களை கண்மூடித்தனமாக ஒரு அரசியல் அபிலாசை அல்லது அவலத்திற்குப் பின்னால் ஒன்றுதிரட்ட முனைந்தது. இதனை வேறு விதத்தில் கூறுவதானால் இனக்கலவரம் என்பது ஒரு இராணுவக்கலாச்சாரத்தை நோக்கி வளரும் சமூகத்திற்கு தமது வளர்ச்சிப்போக்கினை நியாயப் படுத்தும் சாதகமான சம்பவமாகப் பாவிக்கப்பட்டது. இலங்கையில் ஏற்பட்ட முதலாவது இனக்கலவரம் 1883ம் ஆண்டு கொட்டாஞ்சேனையில் சிங்களவருக்கும், முஸ்லீம் களுக்குமிடையே இடம் பெற்றது. 83ம் ஆண்டு மாபெரும் இனக்கலவரம் 100 வருடங்களுக்குப் பின்னால் ஏற்பட்டது. இந்த 100 வருட இடைவெளியில் இலங்கைத் தமிழ் சமுதாயம், சிங்கள அரசாங்கமும் ஓர் இராணுவ சமூக முறையை நோக்கி தவிர்க்கமுடியாதபடி சென்று கொண்டிருக்கின்றது எனவும் கூறலாம்.

இப்போது இனக் கலவரத்திற்கும் இராணுவ முஸ்தீபுச் சிந்தனைக்கும் உள்ள தொடர்பைப்பற்றி விளக்கம் காண முயல்வோம். எந்த ஓர் நாட்டிலும் இனக்கலவரம் ஒன்று சமநிலை அற்ற நிலையில் உள்ள இனங்க ளுக்கிடையில் அதாவது பெரும் பான்மையினரின் வெறித்தனத்திற்கு சிறுபான்மையினர் ஈடு கொடுக்காதபடி வெடிக்கும்போது அதன் முதன் விளைவு எதுவெனின் அவ்வாறுன ஓர் இனக்கலவரம் சிறுபான்மையினரின் எதிர்காலம் பற்றி ஓர் கலவர மனோநிலையை ஏற்படுத்துவதே. அதாவது அவர்கள் தமக்கு எதிர்காலமே இல்லை என எண்ணும்போது ஓர் மனோபாவத்தை வளர்த்து விடுகின்றது. இதன்விளைவும் எந்த ஓர் சிறுபான்மைச் சமூகமும் உடனடியாக சுயபாதுகாப்பு என்ற பொது எண்ணத்திற்குள் உட்பட்டு விடுகின்றனர். மனித சரித்திரத்தில் இராணுவ கலாச்சாரத்தின் அடிப்படையும், அதன் ஒவ்வொறு அங்குலத்தையும் நியாயப்படுத்தும் தர்க்க மந்திரச்சொல்லாக விளங்குவது "சுயபாதுகாப்பு" என்பதே.

1983 கலவரத்தின் பின்பு கொழும்பில் இருந்து அகதிகளாக கப்பலேறி யாழ்ப்பாணம் திரும்பிக்கொண்டிருந்த மக்கள் மத்தியில் கப்பலில் எழுந்த சம்பாஷணையில் அடிக்கடி அடிபட்ட வாக்கியம்என்னவெனில் "எங்களுக்கு என்று இனி ஒரு பாதுகாப்பு வேண்டும்" என்பதே. கப்பலேறிய பல தமிழ் இளைஞர்கள் அடிப்பட்ட அல்லது அடிபட்டவர்களை பார்த்த அதே வேகத்தில் சுயபாதுகாப்புப்பற்றி சிந்தித்ததில் எந்தவித தர்க்க முரண்பாடும் இருக்கப்போவதில்லை. நாம் அப்போது நினைத்ததெல்லாம் எமக்குரிய பாதுகாப்பு என்பதே. அதை நாம் எமது மண்ணில் அடையலாம் என்பதே. நாம் எமக்கு ஓர் தனி நாடுவேண்டும் எனக் கூறியதில் சிலவேலைகளில் பிழையும் இருக்கமுடியாது. ஆனால் இந்த இனக்கலவரம்தான் எமது தனிநாட்டு ஆர்வத்தையும் அதற்கான வழிமுறைகளையும் ஊக்குவித்ததா அல்லது தனி நாட்டு ஆர்வத்தையும் அதன் வழிமுறைகளையும் இந்த இனக்கலவரம் நியாயப்படுத்த உதவியதா என்ற கேள்விகளை நாம் எம்முன் கேட்டுக்கொள்ள முயலலாம். இதற்கான விடைகளை வாசகர்களாகிய உங்களிடம் விட்டு விடுகின்றேன்.

எது எவ்வாறுயினும் கலவரத்தின் பின் அக்கலவரத்தின் விளைவுகளை தமிழீழக்கோரிக்கையை நியாயப்படுத்தும் சாதனமாக கூட்டணியினராலும் அவர்களை எதிர்த்தவர்களாலும் "தமிழர்களுக்கெதிரான சிங்கள தேசிய இனத்தின் இனக் கொலை" என்ற பிரசாரம் உலகெங்கும் முடுக்கி விடப்பட்டது.

இப்பிரச்சார இயந்திரம் சர்வதேசரீதியில் தமிழர்களின் மீதான அனுதாபத்தையும் அதேவேளை உலகெங்கும் உள்ள தமிழர்கள் ஈழப் போராட்டத்திற்கான ஆயுத கொள்வனவுக்கான பணத்தைச் சேர்க்கவும் உதவியது. அதே வேளை கூட்டணியின் அகிம்சைவழி போராட்டம் எனக் கூறப்பட்ட ஏதோ ஒன்றும் உலகெங்கும் ஈழத்தமிழர்களால் பரிகாசத்திற்கு உட்படுத்தப்பட்டது.

இதன் தாற்பரியத்தை நாம் வேறு ஒரு முறையில் விளங்கிக்கொள்ளவதானால் சிங்கள இனவாதிகளின் இராணுவச் சிந்தனைப் போக்கும் அதன் தருக்கமும் அதனால் விளைந்த கலவரமும் தமிழ் தேசிய இனப் போராளிகளின் தற்பாதுகாப்பு இராணுவச்சிந்தனை முறையை உலகெங்கும் நியாயப்படுத்த உதவியது என்பது மட்டுமன்றி அதற்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயுதக்கொள்வனவு ஆயுதப்பயிற்சி என்பனவற்றிற்கும் உதவியது. ஆனால் ஈழத்தமிழரின் அரசியல் போக்கில் இடம்பெற்ற இந்த பாரிய அரசியல் முறை மாற்றம் புதிய அரசியல் போராட்ட வடிவம் என பல்வேறு தமிழ் அரசியல் இலக்கியங்களிலும் கூறப்பெற்று கவர்ச்சிகரமாக நியாயப்படுத்தப்பட்டது. ஆயினும் இராணுவ கலாச்சாரம் என்ற ஒன்றுக்கு தனிப்பட்ட ஓர் தருக்கமும், கருத்தியலும் உண்டு. அதற்கென திட்டமான நியமப்படி முறைகள் இருந்தன. சுய பாதுகாப்பு அல்லது தேசிய நெருக்கடி அதன் முதல் பொறிப்படியாக இருந்தது. சரித்திரத்தில் இப்படியில் நிதானமாக கால் வைக்க முடியாதவர்கள் படிச்சறுக்கலுக்கு உட்பட்டு இறுதியில் தமது சமூகத்தை ஓர் இராணுவ சமூகமாக, தனிமனித, கொலையை ஓர் கலாச்சாரமாக கொண்ட ஓர் சமுகமாக இட்டுச் செல்வதுண்டு. 1920 களின் இறுதியில் ஜேர்மனிய தேசிய வாதத்தை மீண்டும் கட்டியெழுப்பிய ஹிட்லர் தனது மிலேச்சத்தனமான இராணுவ இயந்திரத்தைக் கட்டியெழுப்ப அயல் நாடுகளுக்கும் உலகத்திற்கும் கொடுத்த நியாயமெல்லாம் 'தற்பாதுகாப்பு' என்பதே.

கலவரத்தால் பாதிக்கப்பெற்ற வஞ்சகமற்ற தமிழ் இளைஞர்கள் பல்வேறு இயக்கங்களின் பால் கலவரப்பட்டபோது அவர்களது மனமும் எண்ணங்களும் நேர்மையாகவே தமிழ்தேசிய இனத்தின் பாதுகாப்பு என்ற விஷயத்தில் குவிந்து இருந்தது. அவர்களை நமது இயக்கத்தில் சேர்ந்து போராடும்படி கூறிய இயக்கத் தலைவர்களும் அவ்வாறே தம்மை நினைத்துக் கொண்டன. எமது போராட்ட அர்ப்பணமும் புனிதமானது என்று நாம் நினைத்ததில் தப்பில்லை. 1983இன் பிற்கால் தமிழ் இளைஞர்கள் இராணுவப் போராட்டத்தில் சேர்ப்பதற்கான மாபெரும் அறுவடையாக இருந்தது. நேர்மையான தமிழ் இளைஞர்கள் பல்வேறு கிராமங்களிலிருந்தும் இயக்கங்களில் சேர்ந்தார்கள். போராட்டத்தில் நேர்மையுடன் குதித்த இதே வேகத்தில் எம்முடைன் எம் தலைக்குள் இராணுவக் கருத்தியலையும் எடுத்துக் கொண்டோம் என்பதை நாம் கவனிக்கத் தவறி விட்டோம்.

இராணுவ முதலாளித்துவக் கொள்கையில், ஆயுத விற்பனை பணத்தை குவிக்கவல்லது. ஆதலால் உலகெங்கும் போர்களையும் புரட்சிகளையும் முடக்கி விடவும் அதனால் லாபம் பெறவும் ஆயுதச் சந்தை பாரிய முயற்சிகளை எப்போதும் முடுக்கி விட்டுக் கொண்டிருக்கிறது. உதாரணமாக ஈராக்கிய யுத்தத்தில் முன்னர் ரஷ்யா ஈராக்கிற்கு முப்பது கோடி டொலர் பெறுமதியான ஆயுதங்களை விற்பனை செய்தது. அவ்வாறே அமெரிக்கா ஏனைய உலக நாடுகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆயுத விற்பனை செய்து வருகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை இலங்கை அரசும் போராளிகள் குழுவும் இச்சந்தையில் நுகர்வோராக மாறினர். கொழும்பு உயர் அதிகாரிகள் இந்த ஆயுத இறக்குமதி வியாபாரத்தில் பெரும் பங்கும் பெற்றனர். இவ்வாறான ஒரு சிக்கலில் ராஜீவ் காந்தியும் கூட போபர்ஸ் ஊழலில் இலஞ்சம் பெற்றதாக குற்றச்சாட்டுக்கள் கொண்டு வரப்பட்டன. இலங்கை உயர் இராணுவ அதிகாரிகள் யுத்தத்தில் லாபம் பெற்றதால் யுத்தத்தை நீடித்து வைத்திருக்க விரும்பினரே தவிர முடிக்க விரும்பவில்லை. அதேவேளை ஐ.தே.க அரசியல்வாதிகளும் இந்த யுத்தத்தால் பல்வேறு அரசியல் லாபமும் பெற்றமையால் அவர்களும் யுத்தத்தை நீடிக்க விரும்பினர். தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏனைய ஆயுதக் குழுக்களும் இவர்களுக்கு இந்த விதத்தில் எதிரிகள் மட்டுமன்றி நண்பர்களாவும் இராணுவ முதலாளித்துவத்தில் சகபங்குதாரர்களாகவும் மறைமுகமாக மாறினர். இதனை இன்னுமோர் முறையில் கூறுவோமாயின் அவர்களை இராணுவக் கருத்தியல் மறைமுகமாக விழுங்கியது. அதே வேளை சிங்களக் கிராமப் புறங்களில் வாழ்ந்த ஏழைத்தாய்மார்கள் தமது புத்திரர்களை பௌத்த பிக்குகளின் ஆசியுடன் மரண களத்திற்கு தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

*1983 கலவரமும் அதன் பின் வந்த ஒவ்வொரு தாக்குதல்களிலும் சிங்களப் படையினரால் தமிழ் கிராமங்களில் செய்த அட்டூழியமும் இராணுவத் தர்க்க அடிப்படையில் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும் ஆட்சேர்ப்பை அதிகரிக்கவும் தமக்கு எதிரான கருத்துக் கொண்டவர்களை உளவியல், உடல்ரீதியாக அழிக்கவும் உதவியது. தமிழ் மக்கள் மத்தியில் புலிகளின் அபிமானம் பலமும் பெறுவதற்கு சிங்கள இராணுவமும் இந்திய இராணுவமும் செய்த அட்டூழியங்கள் அத்திவாரமாக அமைந்தன. இதனை இன்னுமோர் வழியில் சொல்வதாயின் எவ்வாறு தமிழ் போராளிகளின் போராட்டம் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் உயர் இராணுவ அதிகாரிகளுக்கும் எல்லையற்ற அதிகாரங்களையும் சொகுசு வாழ்க்கையையும் அளித்து அனுசரணையாக இருந்ததோ அவ்வாறே இவர்களின் தமிழர்களுக்கு எதிரான அட்டூழியங்களும் புலிகளின் இருப்புக்கு ஒரு நியாயத்தை வழங்கியது. அதாவது போரில் ஈடுபட்ட இரு குழுக்களுக்கு இடையில் ஒரு குழுவின் இராணுவத் தர்க்கத்தில் மற்றக் குழு தங்கி வாழ வேண்டியிருந்தது. இராணுவ சிந்தனையில் இவர்கள் ஒருவரை ஒருவர் வெறுத்தாலும் மறைமுகப் பங்குதாரர்களானார்கள். இதனால் போலும் இலங்கை இராணுவமும் விடுதலைப் புலிகளும் தமது தேன்நிலவுக்காலத்தில் ஒருவரின் வீரத்தை மற்றவர்கள் புகழ்ந்தனர்.*

இப்போது இந்த இராணுவக் கருத்தியல் எப்படி தமிழ் போராளிகளை முடக்கியது என்று பார்ப்போம். புனிதப் போராட்டத்தில் நேர்மையுடன் இறங்கிய இளைஞர்கள் ஆரம்பத்தில் மண்ணிற்காகவும் இனத்திற்காகவும் போராடுவதாகவே மாக்ஸிசம் கலந்தோ, கலக்காமலோ நம்ப வைக்கப்பட்டனர். ஆனால் குறுகிய காலத்தில் புனித இலட்சியங்களும் அரசியல் தத்துவங்களும் இராணுவ மனோபாவத்தில் மூழ்கின. இராணுவக் கருத்தியலின் மேன்மை எப்போதும் நாட்டின் சுயபாதுகாப்பு என்ற கோஷத்துடன் சரித்திரத்தில் ஆரம்பிக்கிறது. பின்னர் இனத்திற்காகவும், கட்சிக்காகவும், இயக்கத்திற்காகவும், பின்னர் இயக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உட்குழுக்களுக்காகவும் பின்னர் தனிமனிதனின் பாதுகாப்பிற்காகவும் அது இட்டுச் செல்வது வழக்கம். ஹிட்லர், முசோலினி, இடி அமின் ஆகியோர் இவ்வாறான தர்க்கப் படிமுறையிலேயே வளர்ந்து சென்றனர். இறுதியாக இது தனிமனித வழிபாட்டை வளர்த்துச் செல்லும். ரஷ்யப் புரட்சியின் ஒரு காலகட்டத்தில் ஸ்டாலின் வழிபாடும் இத்தர்க்கத்தில் தான் சறுக்கிச் சென்றது. இக்கால கட்டத்தில் லெனினின் ஒரு சமகால நண்பரைத் தவிர ஏனைய ஆறு நண்பர்கள் மர்மமாகக் கொல்லப்பட்டனர். செஞ்சேனையை வழிநடத்திய ட்ரொஸ்கியும் பின்காலத்தில் மெக்சிக்கோவில் வைத்து சக தோழர் என நம்பப்பட்ட ஒருவரால் கொல்லப்பட்டார்.

தமிழ் போராளிகள் இயக்கத்திலும் பல்வேறு உட்கொலைகள் இடம் பெற்றன. புளொட் இயக்கத்தில் பலர் கொல்லப் பட்டனர் எனக் கூறப்பட்டது. கூடவே இயக்க மோதல்களிலும் நூற்றுக் கணக்கானோர் இறந்தனர்.

மாக்சிச, லெனினிச கருத்தியலின் அடிப்படை கட்சி விதிகளாகவும் வாய்க்கால்களாகவும் விளங்குவது 'விமர்சனம்' 'சுயவிமர்சனம்' என்பனவே. இவ்வடிப்படை விதிகள் மனித சிந்தனைப் போக்கினை விஞ்ஞான பூர்வமாக வளர்க்கும் என்பது மட்டுமன்றி, அது கட்சி ஆரோக்கியத்திற்கும் அவசியமானது என வாதிடப்பட்டு ஏற்கப்பட்டது. இதற்கு முரணாக இராணுவக் கருத்தியலில் விமர்சனம், சுயவிமர்சனம் என்பன அடிப்படையில் ஏற்கப்படக் கூடாது ஒன்று. அதன் அடிப்படை விதி யாதெனின் 'கீழ்ப்படிவு' என்பதே. உத்தரவு, கட்டளை, கீழ்ப்படிவு என்பன அதன் ஒழுக்கங்கள். கூட்டணியின் மேடைகளில் எழுபதுகளில் எழுப்பப்பட்ட கோஷம் 'செய் அல்லது செத்து மடி' என்பது மேற்படி ஒழுக்கங்களை விளக்கி நிற்கும் ஒரு வித கோசமே.

தமிழீழப் போராட்டத்தில் பல்வேறு போராளி இயக்கங்களுள் இராணுவ ஒழுக்கத்துடன் அதன் கருத்தியலுடன், அதன் சிந்தனை உளவியலுடன் கட்டியெழுப்பப்பட்ட ஒரேயொரு இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள். இராணுவக் கருத்தியலை முழுவீச்சுடன் பாவிப்பவர்கள் அவர்ளே. சயனைட் குளிசையின் மீது செய்யப்படும் இராணுவச் சத்தியப் பிரமாணம் அவ்வியக்கத்தின் இறுக்கமான இராணுவப் போக்கை காட்டுகின்றது. சரித்திரத்தில் ஏனைய நாடுகளில் காணப்பட்ட சகல இராணுவ கருத்தியலின் குணம்சங்களும் அவர்களது அரசியல் இலக்கியங்களிலும் பிரசார கருவிகளில், கலை வடிவங்களில், சிறுவர் பாடசாலை பாடவிதானங்களில் புகுத்தப்பட்டன. கீழ்ப்படிவு என்பதும் கட்டளையை நிறைவேற்றுவதும் என்பதும் தாரக மந்திரமாக இருந்தது.

ஏனைய இயக்கங்களுடன் ஒப்பிடுகையில் 1983 கலவரத்திற்கு தெரிந்தோ தெரியாமலோ அவர்கள் பக்க விசையாக இருந்தாலும் அக்கலவரத்தின் விளைவுகளால் பாதிக்கப்பட்ட வஞ்சகமற்ற இளைஞர்களை தமது இயக்கத்தின்பால் கவர்வதிலும், அதன் மூலம் வளர்ப்பதிலும் அவர்கள் பெருவெற்றியீட்டினர். 'செய் அல்லது செத்து மடி' என்ற கூட்டணிக் கோஷம் இவர்களிடம் அடிநாதமாகக் காணப்பட்டது.

இவர்கள் தமது இராணுவத்தை கட்டியெழுப்ப பல இராணுவ உபாயங்களை கையாண்டனர். ஆரம்ப காலங்களில் இராணுவத் தொடர்களை தாக்குவதற்கு கிராமப்புறப் பாலங்களை குறி வைத்தனர். தாக்கப்பட்ட ராணுவம் கிராமங்களை அழித்து மக்களைக் கொன்று பெண்களைக் கற்பழித்து விட்டுச் சென்ற போது, இவர்கள் மீண்டும் கிராமங்களுக்குச் சென்று இராணுவத்தின் மீது சினம் கொண்டிருந்த இளைஞர்களை தம்பால் கவர்ந்து அறுவடை செய்தனர். விடுதலைப் புலிகளில் பெரும்பாலோர் சிறுவயதில் தம் குடும்பத்தில் யாரையோ இழந்தவராகவே இருந்தனர்.

இராணுவச் சிந்தனை முறையில் இதை விளங்கிக் கொள்வதாயின் 'மக்கள் எந்த உந்துவிசை இல்லாமல் ஆயுதம் தாங்க மாட்டார்கள். ஆதலால் அவர்களின் பாதுகாப்பிற்கு செயற்கையாக அல்லது இயற்கையாக புறச்சூழ்நிலையில் இருந்து ஓர் தாக்கம் கொடுக்கப்பட வேண்டும். மக்கள் கலக்கமடைந்து கலவரப்படும் போது இராணுவ அணிக்கு இளைஞர்களைத் திரட்ட இது உதவும்'

இரண்டாம் உலக யுத்த ஆரம்ப காலத்தில் ஜேர்மானிய மக்களை தனது இராணுவக் கனவுகளுக்கு உட்படுத்தி அதனை அவர்கள் அவர்கள் ஏற்றுக் கொள்ள ஹிட்லர் 'நமக்கு மற்றவர்களால் பாரிய அபாயங்கள் ஏற்படப்போகின்றன' என்று பிரசாரம் செய்தது மட்டுமன்றி பல இரகசிய தாக்குதல்களையும் அயல் நாடுகளில் செய்து அவர்களைச் சீண்டி விடச் செய்தார். அவர்கள் அதற்கு மறுதாக்குதல் செய்தவுடன் 'தான் அவர்களைப் பற்றி சொன்னது சரி' எனவும் ஆதலால் அவர்கள் மீது போர் தொடுக்க வேண்டியது அவசியம் என்றும் நியாயப்படுத்தி ஜேர்மானியர்களை இராணுவத் தந்திரங்களால் மூளைச் சலவை செய்து போரில் ஈடுபடுத்தினான். அவனை விமர்சனம் செய்த யாவரும் வதை முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

1983 கலவரமும் அதன் பின் வந்த ஒவ்வொரு தாக்குதல்களிலும் சிங்களப் படையினரால் தமிழ் கிராமங்களில் செய்த அட்டூழியமும் இராணுவத் தர்க்க அடிப்படையில் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும் ஆட்சேர்ப்பை அதிகரிக்கவும் தமக்கு எதிரான கருத்துக்கொண்டவர்களை உளவியல், உடல்ரீதியாக அழிக்கவும் உதவியது. தமிழ் மக்கள் மத்தியில் புலிகளின் அபிமானம் பலமும் பெறுவதற்கு சிங்கள இராணுவமும் இந்திய இராணுவமும் செய்த அட்டூழியங்கள் அத்திவாரமாக அமைந்தன. இதனை இன்னுமோர் வழியில் சொல்வதாயின் எவ்வாறு தமிழ் போராளிகளின் போராட்டம் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் உயர் இராணுவ அதிகாரிகளுக்கும் எல்லையற்ற அதிகாரங்களையும் சொகுசு வாழ்க்கையையும் அளித்து அனுசரணையாக இருந்ததோ அவ்வாறே இவர்களின் தமிழர்களுக்கு எதிரான அட்டூழியங்களும் புலிகளின் இருப்புக்கு ஒரு நியாயத்தை வழங்கியது. அதாவது போரில் ஈடுபட்ட இரு குழுக்களுக்கு இடையில் ஒரு குழுவின் இராணுவத் தர்க்கத்தில் மற்றக் குழு தங்கி வாழ வேண்டியிருந்தது. இராணுவ சிந்தனையில் இவர்கள் ஒருவரை ஒருவர் வெறுத்தாலும் மறைமுகப் பங்குதாரர்களானார்கள். இதனால் போலும் இலங்கை இராணுவமும் விடுதலைப் புலிகளும் தமது தேன்நிலவுக்காலத்தில் ஒருவரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீரத்தை மற்றவர்கள் புகழ்ந்தனர். உதாரணமாக கிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்த போது கப்டன் கொத்தலாவலையை சிறந்த இராணுவ வீரன் எனவும் அவ்வாறே கொத்தலாவலையும் அவரை மாபெரும் வீரன் எனவும் புகழ்ந்து கொண்டனர். இந்திய உயர் அதிகாரிகள் பிற்காலத்தில் புலிகளைப் புகழ்ந்ததை இங்கு கூற வேண்டியதில்லை.

இவையாவும் 83 கலவரத்தில் வேகத்தில் ஏற்பட்ட தாக்கங்கள், விளைவுகள். இவற்றின் பின்விளைவுகள் 'தற்கொலைப்படைகள்' என்ற தலைப்பில் படைகளை உருவாக்கி தமிழ் இனச்சிறுர்களை மூளைச்சலவை செய்து 12 வயதில் இன்று களத்திற்கு அனுப்ப உதவின. 'எந்த ஒரு சமூகத்தில் ஒரு 14 வயதுக் குழந்தை துப்பாக்கியைக் கையில் ஏந்த ஊக்குவிக்கப்படுகிறதோ, அந்த சமூகம் தனது கடைசிக்காலில் நிற்கிறது' என்று அறிஞர் ஒருவர் சொன்னுர். எமது சமூகத்தின் இன்றைய நிலையும் இதுதான்.

சிங்களச் சிப்பாய்கள் கிராமங்களை அழிக்கும் போது அதனை தடுக்கும் இராணுவ வல்லமை இல்லாத போது, தமிழ் சிப்பாய்கள் சிங்களக் கிராமங்களிலும் முஸ்லிம் பள்ளி வாசல்களிலும் சென்று அப்பாவி மக்களைக் கொன்று குவித்தனர். இந்தியச் சிப்பாய்களினால் கற்பழிக்கப்பட்டவர் என்றுகூறப்படும் ஒரு பெண்ணின் மன உணர்வுகளைத் தமக்கு சாதகமாக்கி இந்தியப் பிரதமரைக் கொல்ல முடிந்தது. இதில் சரி பிழை ஒருபுறமிருக்க, உலக அரங்கில் தமிழ் இராணுவத்தினர் செய்த மனித உரிமை மீறல்களையும் அட்டூழியங்களையும் வைத்து இலங்கைத் தமிழர்கள் பயங்கரவாதிகளாக எடை போடுவதற்கு உதவியது. 1983 கலவரத்தின் பின்னர் ஈழத்தமிழர்களுக்கு இருந்த உலக ஆதரவு இன்று இல்லை.

தமிழ் சமூகத்தில் வாழ்ந்த நல்ல பல மனிதர்கள், தியாகமுள்ள இளைஞர்கள் இன்று உளவியல் ரீதியாகவும் உடலியல் ரீதியாகவும் அழிக்கப்பட்டுள்ளனர். 1983 இன் பின் எழுந்த, நியாயப்படுத்தப்பட்ட தமிழீழ இராணுவ இயந்திரம் 1983ல் மக்கள் பட்ட அவலங்களை இன்றும் தனக்கு சாதகமாக பயன்படுத்தி வருகிறது. இன்று உலகெங்கும் ஈழத்தமிழர் அரசியல் கலாசார அனாதைகளாக வாழ உந்தியது.

ஒருபுறத்தில் 1983ல் ஈழத்தமிழர்களுக்கு நடத்தப்பட்ட அட்டூழியங்களை யாரும் மறப்பதற்கில்லை. அதன் பின்னர் மடிந்த தமிழ் மக்களும் போராளிகளும் அதை விட ஏராளம். அவர்களின் அர்ப்பணமும் தியாகமும் அளப்பரியது. மதிக்கப்பட வேண்டியது. மறுபுறத்தில் 1983 கலவரம் ஈழத்தமிழர் வாழ்வில் ஒரு திருப்பு முனை. அது எமது சமூகத்தை இராணுவக் கலாசாரத்தை வளர்த்துச் செல்லும் ஓர் பின்விளைவுக்கு இட்டுச் சென்றது. இதற்கு சிங்கள இனவாத இராணுவ இயந்திரம் மட்டுமே பொறுப்பல்ல. எமது தமிழ் இராணுவக் கலாசாரமும் தமிழ் போராளிகளும் தங்கள் பங்கை அதற்கு தாராளமாக வழங்கினர். எவ்வாறு 1956 கலவரம் தமிழரசுக் கட்சியின் இருப்பிற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்ததோ அவ்வாறே 1983ம் ஆண்டுக் கலவரம் தமிழர் மத்தியில் துப்பாக்கிக் கலாசாரத்திற்கும் இராணுவ சமூக எழுச்சிக்கும் அதன் பயனாக முன்னெப்போதுமில்லாத அடக்குமுறைக்கு தமிழர் உள்ளாகவும் காரணமாயிற்று.

## கறை..

இருக்கின்றது. அவர் கோப்பியை கப்பில் ஊற்றுவார். நான் குடிப்பேன். அவர் குடிப்பதையும் பார்ப்பேன். அவரது வாயில் இருக்கும் கோப்பியின் சுவையை நான் உணர்வேன். (மௌனம்) அந்தக் கோப்பியின் சுவையை நான் உணர்வேன். (மௌனம்) அந்தக் கோப்பித் தூளின் மணம் உண்மையானதே. வெதுவெதுப்பான சூடும் இவை யாவும் விரைவில் மறையப் போகின்றது. இந்த கோப்பிப் பானை வெறுமனே மிஞ்சப் போகின்றது.

ஜெசிக்கா: இதைப் போலவா?

ஹிகோ: (முழு அறையையும் தனது கையால் சுட்டிக் காட்டியபடி) இவை யாவுமே இங்கு நடக்கும். (கோப்பிப் பானையை கீழே வைக்கிறுன்) நான் ஓர் நாடக மேடையைப் போல வாழ்கின்றேன். (சிந்தனையில் மூழ்குகின்றுன்)

ஜெசிக்கா: ஹிகோ

ஹிகோ: என்ன?

ஜெசிக்கா: அவன் இறந்தபிறகு இந்த அறையில் உள்ள சுருட்டு மணம் போய் விடும். (எதிர்பாராத வகையில்) அவனைக் கொல்ல வேண்டாம்.

ஹிகோ: ஆ, அப்ப நான் அவனைக் கொல்லப் போகின்றேன் என்பதை நீ இப்போது நம்புகின்றுய் அல்லவா? இப்ப சொல்லு? நீ நம்புகிறுய் தானே?

ஜெசிக்கா: எனக்குத் தெரியாது. இங்கு அமைதியாக இருக்கிறது. இது எனது குழந்தை காலத்தை நினைவூட்டுகிறது. ஒன்றும் நடக்காது. ஒன்றும் நடக்க முடியாது. நீ என்னைப் பகிடி பண்ணுகிறுய்.. என்ன?

ஹிகோ: அதோ அவரே வருகின்றுர். (அவளை அவசரமாக வெளியேறுமாறு கூறுகின்றுன்)

தொடரும்


உ

# சோதிடம்

★ ஜாதகக் குறிப்பு எழுதுதல் Raphael's Astronomical Ephemeries இன் அடிப்படையில் பாவ, கிரகஸ்புடகங்கள் தயாரிக்கப்படும். வேறு நாடுகளில் பிறந்தவர்களுக்கும் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பிறந்தவர்களுக்கும் ஜாதகக் குறிப்பு எழுதப்படும்.

★ ஜாதகங்கள் பரிசீலிக்கப்பட்டு பலன் கூறப்படும்.

★ அதிட்ட விஞ்ஞான அடிப்படையில் பெயரிடுதல்

★ சுபமுகூர்த்தம் நிச்சயித்தல்

★ பாவஸ்புடக ரீதியாக கிரகபாவம் கணிக்கப்பட்டு அங்காரகதோச பரிகாரம் பற்றிய கருத்துக்கமைவாக விவாகப் பொருத்தம் பார்த்தல்

உங்கள் பிரச்சனை எதுவானாலும் சோதிட ஆலோசனை பெற நாடுங்கள்.

## சி.சிதம்பரப்பிள்ளை

இளைப்பாறிய ஆசிரியர் (சாவகச்சேரி)
அனுபவமிக்க சோதிடர்
தொடர்புகளுக்கு:
90 Digby Cresent (Brimley/Steeles)
Markham, Ont, L3R 7G7
**(905) 513-9840**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

சமூகப் புரட்சி என்பது ஒரு சிறு தொகையினரின் செயல் அல்ல. அது ஒரு கட்சியின் அல்லது குழுவின் செயலும் அல்ல. ஆதலால் ஒரு சதி மூலம் அல்லது ஒது குழு அதிகாரத்தைக் கைப்பற்றுவது புரட்சி அல்ல. புரட்சி என்பது சனத் தொகையின் மிகப் பெரும் தொகையினர் உச்சகட்ட செயல்களில் இறங்குவதும், போராட்டத்தில் பல்வேறு முறைகளில் உசிதமான முறைகள் செயல்படுத்தப்படுவதுமான பரந்துபட்ட மக்கள் எழுச்சியாகும்.

சமூகப் புரட்சி என்பது வர்க்க சமுதாய அபிவிருத்தியின் இயற்கையானதும் அத்தியாவசியமானதுமான விளைவாகும். உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்திக் காரணிகளுக்கும் இடையேயான போராட்டத்தில் பொருளாதார சமூக அபிவிருத்தியின் அவசியங்கள் முதிர்ச்சி அடைவதன் பெறுபேறும். மாற்றத்தை ஏற்படுத்த அவசியமான புறநிலைக் காரணிகளுக்கும் சமுதாயத்தில் அவ்வாறான மாற்றம் ஒன்றை ஏற்படுத்த போராடுகின்ற வர்க்கங்களின் திடசங்கற்பமும் செயற்பாடுகளுக்கும் இடையேயான இணைப்பின் அதாவது அகநிலை புறநிலைக் காரணிகளுக்கிடையேயான இணைப்பு முதிர்ச்சி அடைவதன் பெறுபேறே சமூகப்புரட்சியாகும்.

இன்னும் ஒரு விதத்தில் விளங்கப்படுத்துவதாயின் சமூகப் புரட்சி என்பது மனித விருப்புக்கு புறம்பாக பொருளாதாரத்திலும் அரசியலும் ஏற்படுகின்ற மாற்றங்களால் தோற்றுவிக்கப படுகின்ற புறநிலைக் காரணிகளும் மனித நடவடிக்கைகளால் அறிவுபூர்வமாக உருவாக்கப்படுகின்ற அக நிலைக் காரணிகளும் முதிர்ச்சி பெறுவதன் விளைவாகும். ஆனால் ஜேவிபியிடம் காணப்பட்ட கருத்தின்படி புரட்சிக்கு புறநிலை அகநிலைக் காரணிகள் முதிர்ச்சி அடைய வேண்டிய அவசியமில்லை. இதனை விசேடமாக 1971இல் நன்றாக காணக் கூடியதாகவிருந்தது. இக் கிளர்ச்சிகளை நோக்கும்போது, நன்றாக ஸ்தாபனமயப்பட்ட ஆயுத குழு ஒன்று அரசு அதிகாரத்தின் மர்மஸ்தானங்களைத் தாக்கி அதிகாரத்தை கைப்பற்ற முடியுமாயின் புரட்சி செய்யலாம் என ஜேவிபி எண்ணியதாகவே தெரிகிறது. அவ்வாறு இல்லாவிடில் அது பலாத்காரத்தைப் பாவித்து மக்களைப் போராட்டத்திற்கு இழுக்க செயல்பட்டிருக்க மாட்டாது. மக்கள் புரட்சியில் பங்கு பற்றுவது எவரும் பலவந்தப்படுத்துவதால் அல்ல, தமது விருப்பத்தின் பேரிலேயாகும். இன்னும் ஒரு கணம் கூட நிலவும் சமுதாய அமைப்பு முறையுள் வாழ முடியாது என்னும் சிந்தனை கூட்டு மனோபாவமாக மாறி அது பரந்த ஸ்தாபன வடிவம் பெறும்போது மட்டுமே மக்கள் புரட்சியை நோக்கி வருவர்.

லெனின் மிகவும் தெளிவாகக் காட்டியவாறு புறநிலை அகநிலைக் காரணிகளை சுருக்கமாக பின்வருமாறு கூறலாம். முதிர்ச்சியடைந்த புறநிலைக் காரணியின் இலட்சணங்கள் மூன்றாகும். அவை,

1. ஆளும்வர்க்கங்கள் தமது ஆட்சியில் ஏதோ ஒரு மாற்றத்தை ஏற்படுத்தாமல் நிலவுவது கடினமாகி அவர்கள் மத்தியில் ஏதோ ஒருவித நெருக்கடி, ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் மத்தியில் வெடித்துக்கிளம்ப தயார் நிலையில் உள்ள வெறுப்பும் கோபத்தாலும் ஆளும் வர்க்கத்தவரின் கொள்கைகளிலே நெருக்கடி, கீழ்மட்ட வர்க்கங்களுக்கு மட்டுமன்றி மேல் மட்ட வர்க்கங்களுக்கு பழைய முறையிலே வாழ முடியாத நிலைமை என்பன புரட்சி தோன்றுவதற்கு அவசியமாகும்.

2. ஒடுக்கப்பட்டவர்க்கங்களின் ஒடுக்கு முறையும் தேவையும் சாதாரண நிலமையை விட கூர்மையான முறையில் அதிகரித்திருப்பது, ஆதலால் பழைய முறையில் தொடர்ந்தும் வாழமுடியாத நிலமை தோன்றுதல் அவசியமாகும்.

3. மேலே காண்பிக்கப்பட்ட காரணங்களின் விளைவாக மக்களது செயற்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தல் அவசியமாகும் இவ்வாறாக முதிர்ச்சி அடைந்த புறநிலைக் காரணி ஆளும் வர்க்கத்தவர் மத்தியிலே நிலவும் ஆட்சியை தொடர்ந்தும் தக்க வைக்க முடியாததால் கூர்மையான பிளவை ஏற்படுத்துகின்ற பாரிய நெருக்கடியும், ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் ஒழுக்கு முறைகளையும் தேவைகளையும் நிலவும் ஆட்சியின் கீழ் எவ்விதத்திலும் தேற்றிக்கொள்ள முடியாத மட்டத்தில் மிகவும் அதிகரித்திருப்பதும் இவற்றின் பெறுபேறாக பரந்துபட்ட பொதுமக்கள் எவரது பலவந்தமும் இன்றி தமது விருப்பத்தின்பேரில் பரந்தரீதியில் செயல்படும் நிலமையில் இருப்பதுமே இதன் அறிகுறியாகும். முதிர்ச்சி அடைந்த அக நிலைக் காரணியின் இலட்சணங்கள் மூன்று அவையாவன

1. உழைக்கும் மக்கள் மத்தியிலே புரட்சிகர எழுச்சி, போராட்டத்தை இறுதிவரை நடாத்துவதற்கான அவ் வர்க்கத்தின் தயார்நிலையும் திடசற்பமும் உயர்மட்டத்தில் அதிகரித்திருப்பது அவசியமாகும்

2. புரட்சியின் சகல சக்திகளையும் ஒருங்கிணைக்கின்ற உழைக்கும் மக்களின் ஸ்தாபனம் அதாவது போராட்டத்தில்போதிய அனுபவமும் புடம் போடப்பட்டதும் தவறற்ற மூல உபாயங்களையும் தந்திரோபாயங்களையும் விருத்தி செய்யக்கூடியதும் செயல்படுத்துவதும், அவ்வப்

வசந்த திசாநாயக, பற்றிக் பெர்னன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்: செ.லோகநாதன்

www.tamilarangam.net

போதைய நிலமைகள் தொடர்பாக பதட்டமின்றி தவறற்ற ஆய்வு செய்து சந்தர்ப்பத்திற்கேற்ப செயல்படக் கூடிய வேலைத்திட்டத்தையும் செயல்முறைகளையும் கொண்ட புரட்சிகர ஸ்தாபனம் (அல்லது புரட்சிகர சக்திகளின் பரந்த ஐக்கிய முன்னணி) இருக்கவேண்டியது அவசியமாகும்.

3. அவ்வாறான ஒரு ஸ்தாபனத்தால், முன்னணியில் மக்களுக்கு வழங்கும் மனோதிடத்துடன் கூடிய தலைமை புறநிலைக் காரணிகள் உச்ச மட்டத்திற்கு , விருத்தி பெற்றிருந்தாலும் அகநிலைக் காரணிகள் அவசியமான அளவு வளர்ச்சி பெறாவிடில் புரட்சி தோல்வியைத் தழுவுவது நிச்சயம். லெனின் இவ்வாறு கூறினார். "சமூக பொருளாதார அபிவிருத்தியின் இயல்பினால் பூரணமாக முதிர்ச்சியடையச் செய்யும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் புரட்சிகர வர்க்கங்கள் புரட்சி செய்வது நிச்சயமாக பலம்வாய்ந்தது என எண்ணுவது தவறாகும். மானிட சமுதாயமானது அவ்வளது தூரம் தர்க்க ரீதியாக அல்லது அவ்வளவு தூரம் யோக்கியமானதாக முற்போக்கு நிலைமைகளுக்காக அமைந்திருக்க வில்லை புரட்சி முதிர்ச்சி அடைந்திருக்கலாம் ஆனால் புரட்சியை நிர்மாணிப்பவர்களின் பேரியக்கங்கள் அதனை முன்னெடுத்துச் செல்ல போதாதவை என நிருபிக்க முடியும்" (லெனின் கொடுத்த கட்டுரை 19 ம் பாகம் 223ம் பக்கம்)

**ஜேவிபி யினரால் பெரும் பற்றுடனும் உத்வேகத்துடனும் மதிக்கப் பெற்ற சேகுவேரா பிற்காலத்தில் கூறிய "சமாதான முறையினால் ஆட்சியை மாற்றுவதற்கான வாய்ப்பு தொடர்பான எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் நிலவும்வரை புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் வெற்றி அடையப் போவதில்லை" என்னும் முக்கிய விடயத்தைக் கூட ஜேவிபி கவனத்தில் கொள்ளவில்லை.**

புறநிலைக் காரணிகளும் அகநிலைக் காரணிகளும் தனித்தனியே விருத்தி பெறுபவை அல்ல. அவை ஒன்றில் ஒன்று தங்கி செயல்படுபவை மட்டும் அன்றி வளர்ச்சியின் போதும் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் தாக்கத்தை ஏற்படுத்தும். இவ் இரு காரணிகளின் விருத்தி பரஸ்பரம் முதிர்ச்சி பெறும் போதே புரட்சி தோன்றும்.

சமூகப் புரட்சி என்பது ஒரு சிறு தொகையினரின் செயல் அல்ல. அது ஒரு கட்சியின் அல்லது குழுவின் செயலும் அல்ல. ஆதலால் ஒரு சதி மூலம் அல்லது ஒது குழு அதிகாரத்தைக் கைப்பற்றுவது புரட்சி அல்ல. புரட்சி என்பது சனத் தொகையின் மிகப் பெரும் தொகையினர் உச்சகட்ட செயல்களில் இறங்குவதும், போராட்டத்தில பல்வேறு முறைகளில் உசிதமான முறைகள் செயல்படுத்தப்படுவதுமான பரந்துபட்ட மக்கள் எழுச்சியாகும். பத்தாயிரக்கணக்கான, பல இலட்சக் காணக்கான, பெரும் தொகையான மக்களைக் கொண்ட நாடுகளில் கோடிக்கணக்கான மக்கள் ஒன்றாக தமது விருப்புடன் எழுச்சி பெறுவதாகும். புரட்சி என்பது கோடிக்கணக்கான ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான பலாத்காரம் அல்ல அது பலாத்காரமாக விருப்பது வீழ்த்தப்படுகின்ற சிறிய தொகையினரான பிற்போக்கு வர்க்கத்தவர்களுக்கும் சக்திக்கு மேயாகும்.

ஆயுதம் தாங்கிய, நன்றாக ஸ்தாபனமயப்பட்ட அமைப்பு ஒன்றினால் நாடு பூராவும் உள்ள பொலீஸ் நிலையங்களையும் இராணுவ முகாம்களையும் தாக்கி அதிகாரத்தைக் கைப்பற்றுதலே புரட்சி என 1971க்கு முன்னர் ஜேவிபி எண்ணியது 1953 ஜூலை 26ம் திகதி கியூபாவில் மொங்காடா முகாமுக்கு பிடலக ாஸ்ட்ரோவை பிரதானமாகக் கொண்ட ஆயுதம் தாங்கிய புரட்சி வாதிகள் தொடுத்த தாக்குதல் தோல்வி அடையாதிருந்திருந்தால் அன்று கியூபாவின் வரலாறு மாற்றம் பெற்றிருக்கும் எனக் கூறும் அளவுக்கு புரட்சி பற்றிய கருத்து சுருக்கப்பட்டது. புரட்சி பற்றிய ஜேவிபியின் மிகவும் பிழையான கருத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்திய தீர்க்கமான காரணி கியூபா புரட்சியின் அனுபவங்களை தவறாக எடுத்துக் காட்டிய றெஜிஸ் டெப்ரே அவர்களுடைய "புரட்சியில் புரட்சி" என்னும் நூலை கைநூலாகக் கொண்டதேயாகும். புரட்சிக்காக தொழிலாளர் விவசாயிகள் உட்பட ஒடுக்கப்பட்ட மக்கள் தயாராக விருந்தாலும் இல்லாவிடினும் ஸ்தாபனமயப்பட்ட கெரில்லா குழுவால் அதிகாரத்தை கைப்பற்ற முடியுமாயின் புரட்சியை வெற்றியடையச் செய்யலாம் என்றே அந்நூலில் காட்டப்பட்டுள்ளது. ஆனால் பொலீவியாவில் சேகுவேர தோல்வியைத் தழுவிய பின்னர் அனுபவங்களை தொகுத்த றெஜிஸ் டெபரே, பின்னர் தனது கருத்து தவறு என சுயவிமர்சனரீதியாக ஏற்றுக் கொண்டார்.

புரட்சி தொடர்பாக ஜேவிபி கொண்டிருந்த மேலே கூறப்பட்ட கருத்துக்கான தாக்கத்தை ஏற்படுத்திய இன்னொரு காரணி சன்சிபார் நாட்டில் கருமே என்பவர் உட்பட்ட குழு அங்குள்ள பொலீஸ் நிலையங்களைத் தாக்கி அதிகாரத்தைக் கைப்பற்றியதாகும். கருமே என்பவர் விஜேவீரவுடன் மொஸ்கோ லுமும்பா பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றவர். அத்தோடு சன்சிபாரில் பொலீஸ்படை மட்டுமே இருந்தது. இவ்வாறாக புரட்சி என்பது ஆயுதம் தாங்கிய குழுவினரால் அல்லது ஸ்தாபனத்தினரால் இரகசியமாக இராணுவ முகாம்கள் பொலீஸ் நிலையங்கள் மீது தாக்குதல் தொடுத்து அதிகாரத்தைக் கைப்பற்றுதலே எனக் கொண்டு புரட்சிக்காக புறநிலை அகநிலைக்காரணிகளின் வளர்ச்சி பூரணத்துவம் அடையவேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளாமல் விட்டனர்.

ஜேவிபி யினரால் பெரும் பற்றுடனும் உத்வேகத்துடனும் மதிக்கப் பெற்ற சேகுவேரா பிற்காலத்தில் கூறிய "சமாதான முறையினால் ஆட்சியை மாற்றுவதற்கான வாய்ப்பு தொடர்பான எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் நிலவும்வரை புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் வெற்றி அடையப் போவதில்லை" என்னும் முக்கிய விடயத்தைக் கூட ஜேவிபி கவனத்தில் கொள்ளவில்லை.

தொடரும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**
**755 8550 -CALL MIKE or RAJAN**





**Car Certification**
**29.99**


Exhaust, starter, Shocks, Altenater, Clutch
Radio, Transmission, Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

**Fuel Injections, Electronic and Electric**
திருத்துவதில்பலவருடம்
அனுபவம்உள்ளவர்கள்

**We use Quaker State Oil**




ஓம் ஸ்ரீசாயிராம்

# HEALTH FOODS HERBAL CLINIC

## ஆரோக்கிய உணவு மூலிகை மருத்துவ நிலையம்

எங்களிடம் இறக்குமதி செய்யப்பட்ட
கீழ்க்கண்ட எண்ணெய் வகைகள் கிடைக்கும்;

- கூந்தல் வளர்ச்சித் தைலம்
- பொடுகுத் தைலம்
- பீனிசத் தைலம்
- கிரந்தி எண்ணெய்
- சருமத் தைலம்
- வாத நோவெண்ணெய்
- கடுக்காய்க் குளிகை
- முக்கூட்டுக் குளிகை
- கஸ்தூரி கோரோசனை மாத்திரை
- பேறுகால சரக்குத்தூள்

நாட்பட்ட சகல
நோய்களுக்கும்,
இயற்கை முறை
மருத்துவ ஆலோசனை
வழங்கப்படும்.

**மகப்பேறு இல்லாத
தம்பதிகளுக்கு
விசேடமான மூலிகை
முறைகள் உண்டு.**

### கம்பியூட்டர் ஜாதகம்

கம்பியூட்டர் முறையில் தமிழில் ஜாதகம்
பத்தே நிமிடங்களுக்குள்,
கணித முறையிலோ வாக்கிய முறையிலோ
கணித்துக் கொடுக்கப்படும்

- ★ எண்கணிதம்
- ★ திருமணப் பொருத்தம்
- ★ ஜோதிடம்
- ★ பெயரிடுதல்
- ★ கைரேகை
- ★ பெயர்மாற்றம்
- ★ கிரகதோஷ பரிகாரம்

முதலிய பிரச்சனைகளுக்கு பெண்டுல
சுழற்சியின் மூலம் துல்லியமான
அச்சொட்டான பலாபலன்கள் ஆராய்ந்து
கூறப்படும்.

**Director & Counsellor**
**Prof.Dr.(ms) A.Ganesaal**
12 St.Dennis Drive # 627
Don Mills. Ontario M3C 1G2
Tel: (416) 467 6393
FaX (416) 467–7270

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏ.ஆர்.கே மார்க்கட்

**31-35 St. Dennis Dr**
**(Don Mills/Eglinton)**

**அனைத்தும்**
**மலிவு விலையில்**

★ இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
★ பால் பழங்கள்,
உடன் மரக்கறி வகைகள்,
★ இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
★ கனடிய உணவுப் பொருட்கள்

★ தமிழ், ஹிந்தி
வீடியோப் படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை
வாடகைக்கும்
விற்பனைக்கும்
பெறலாம்
★ CD, Audio மலிவு
விலையில்

# A.R.K MARKET

**(416) 421 3429**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நல்ல பத்திரிகை

தி.ஜ.ர

எது நல்ல பத்திரிகை?
பணம் சம்பாதிப்பதிலா? பிரதி விற்பதிலா? யாரிடம் எத்தகைய செல்வாக்கில்? யாருக்கு? சமூகத்தில் என்ன பயன் விளைவிப்பதில்? எது நல்ல பத்திரிகை என்ற கேள்வியைக் கேட்கிறோமோ அந்த நோக்கைக் கொண்டே பதில் அளிக்க முடியும்.
என்னைக் கேட்டால் எது எழுத்தாளர்களின் அபிப்பிராய உரிமையைக் காப்பாற்றுகிறதோ, எது எழுத்துக்கலையை திட்டமிட்டு வளர்க்கிறதோ, மக்களிடம் அறிவைப் பரப்புகிறதோ, பண்பாட்டை உயர்த்துகிறதோ, தூய முறையில் உற்சாகம் கொடுக்கிறதோ, எது நல்லது செய்யா விட்டாலும் சமூகத்திற்கு கேடு செய்யாதிருக்கின்றதோ, அதுவே நல்ல பத்திரிகை. குடிசைக் கைத்தொழில் ரீதியான பத்திரிகையே நல்ல பத்திரிகையாக இருக்க முடியும்.

இதனால் சகலமான ஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால்.. என்று பறையறிவிக்கும் வழக்கம் எந்த நாட்டில் எப்போது ஏற்பட்டதோ, எனக்குத் தெரியாது. சரித்திர நிபுணர்களைக் கேட்டால் தெரியலாம். ஆனால் நம் நாட்டில் இது வெகுகாலமாய் இருந்து வருவதாகவே தோன்றுகின்றது. சின்ன வயதில் பாட்டி சொன்ன பல கதைகளில் இந்த தமுக்குக்காரன் வருவான். இந்த பறையறிவிக்கும் வழக்கம் என்றைக்குத் தோன்றியதோ அன்றைக்கே பத்திரிகைத் தொழிலுக்கு ஒருவித அஸ்திவாரம் போட்டாயிற்று என்று சொல்லலாம்.

அச்சு, தபால், தந்தி, ரெயில், விமானம், போட்டோ புளொக் செய்தல், கல்வி, அரசியல் சூழ்நிலை எல்லாம் சேர்ந்து பத்திரிகைத் தொழிலை இன்று வெகுதூரம் வளர்த்திருக்கின்றன. வளர்த்தனவோ, அமுக்கினவோ, வெகுதூரம் வீங்கச் செய்து விட்டன. பலவிதமான பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. பல தரமான நிலைகளில் நடக்கின்றன. இப்படிப்பட்ட எண்ணற்ற வகையான பத்திரிகைகளில் எது நல்லது எது கெட்டது என்று எப்படிச் சொல்ல முடியும். விஞ்ஞானத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் கூட சாதாரண மக்களுக்கு எல்லாம் புரியக் கூடிய அம்சங்களை மட்டும் விவரித்து விஞ்ஞானப் புதுமைகளை சொல்லும் அழகான பத்திரிகைகள் முதல் நிபுணர்களுக்கே புரியும் நுட்பமான சிக்கலான செய்திகளை தாங்கிய திட்டமான பத்திரிகைகள் வரையில் பலபடியில் பல ரகங்கள் இருக்கின்றன. இன்று இவை தமிழில் இல்லைத்தான் என்றாலும் பொதுவாக உள்ள நிலைமையைச் சொல்லுகிறேன்.

பத்திரிகைத் தொழில் முறையிலும் நிலையிலுமோ, பிரமாதமான பிரமாண்டமான மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. ஒருபுறம் குடிசைக் கைத்தொழில் மாதிரி பல பத்திரிகைகள் நடக்கின்றன. குடிசைக்கைத்தொழில் ரகப் பத்திரிகைகளில் அசோகா பாக்கையும் நஞ்சன் கூடு பற்பொடியையும் போல பேரளவில் வளர்ந்து விட்டவை உண்டு. பெருந்தொழிலாய் தொடங்கி நடக்கும் பத்திரிகைகள் உள்ளுக்குள்ளேயே உளுத்துப் போய் ஆட்டம் எடுத்தவை உண்டு.

பத்திரிகை நடத்த காகிதம் வேண்டும் என்பது மற்றவர்கள் கருத்து. காகிதம் விற்கப் பத்திரிகை விற்க வேண்டும் என்பது ஒரு சிலரின் கருத்து. வெள்ளைக்காகிதமாக நியூஸ் பிரிண்டை ஆயிரமாயிரம்டன் விகிதம் நாள் தோறும் தொடர்ச்சியாக விற்க முடியாது. அந்தக் காகிதத்தை வாங்கி அதிலே கொஞ்சம் மசியைத் தடவி கறுப்பாக்கி, ஊருக்குள்ளே, நாட்டுககுள்ளே நாலு திசையிலும் விட்டால், ஜனங்கள் எனக்கு உனக்கு என்று அள்ளிக் கொண்டு போகிறார்கள். இந்த வியாபாரத்தை நாள் தவறாமல் முடிந்தால் காலையிலும் மாலையிலும் ஒரே சீராக தொடர்ச்சியாக ஏறி இறங்காதபடி நிர்ப்பயமாக, நிச்சயமாக நடத்தலாம். அசுர அச்சுக்கூடமும் எழுத்துக்கூலிகளான ஆசிரியர்களும் இதற்கு தேவையான அவசியத் தீமைகள். இவ்வளவு தான் விசயம், மிகப் பெரும் பத்திரிகைகளின் இன்றைய நிலை, மர்மம் இதுவே.

பெரிய பத்திரிகைகள் நடத்தும் தொழில் இப்போது ஓர் இண்டஸ்றி ஆகி விட்டது. அதை நடத்த லட்சம் லட்சம் முதலும் போடுகின்றார்கள்.

நம் நாட்டில் முப்பது வருடங்களுக்கு முன் பத்திரிகைத் தொழில் நிலை இப்படி இல்லை. அன்றைய சூழ்நிலை வேறாயிருந்தது. என் கடன் பணி செய்து கிடப்பதே என்று வி.க தமது பத்திரிகைத் தலைப்பில் (தேச பக்தனிலோ, நவசக்தியிலோ) குறிக்கோள் பொறுத்தாரே என்றால், பணி செய்ய உண்மையிலேயே தன் வாழ்வை அர்ப்பணித்தார். அவர் என்ன? சுதேச மித்திரன், இந்தியா, ஸ்வராஜ்யா, தேசபக்தன், நியூ இந்தியா, லோகோபகாரி, ஊழியன், குமரன், சுதந்திரச் சங்கு, காந்தி, மணிக்கொடி, சக்தி.. இப்படி எண்ணற்ற மிகப் பெரிய பத்திரிகைகளை ஆரம்பித்தவர்கள் பிண செய்வதையே தமது நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். இன்று மிகப் பெரிய பத்திரிகைகள் பணி, துணி, மணி, கிணி என்றெல்லாம் பேசுவதைப் போன்ற அபத்தம் அல்லது ஏமாற்றமோ வேறில்லை. முப்பது வருடங்களுக்கு முன்பே காந்தியின் யங் இந்தியா, அதற்குப் பின் ஹரிஜன், லாலா லஜபதியின் பீப்பிள், திலகரின் கேஸரி, ராமனந்த சட்டர்ஜியின் மாடர்ன் ரெவ்யூ, பெஸண்டின் நியூ இநதியா, நடராஜனின் சோஷல் றிபோர்மர் போன்ற பத்திரிகைகள் சேவையே குறிக்கோளாக அன்று தொடங்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடந்தன. எண்ணற்ற வேறு பத்திரிகைகளுக்கு இவையே ஆதர்ஷ மாதிரிகளாகவும் விளங்கின. இன்று பத்திரிகை உலகம் அப்படி இல்லை.


ஆனால் குடிசைக்கைத்தொழில் மாதிரி சில பத்திரிகைகள் நடப்பதைச் சொன்னேன் அல்லவா? அவை இதற்கு விதிவிலக்காகும். என்றாலும் அவற்றை நடத்த வரும் சிலர் தப்பான அபிப்பிராயத்தை மனதில் கொண்டு பத்திரிகையை தொடங்கி விடுகிறார்கள். இதனாலேயே அவை வாழ முடியாமல் தத்தளிக்கின்றன. பெரும் செலவில் தயாராகும் பெரிய பத்திரிகைகளுக்கு தங்களுக்கு மாதிரியாகக் கொண்டு அவற்றில் வருவதைப் போன்ற அம்சத்தையெல்லாம் தங்கள் பத்திரிகையிலும் போட்டால் தான் விற்க முடியும் என்று எண்ணி விடுகிறார்கள். எழுத்தும் பலமும் தெளிவான அச்சுமே தங்கள் உயிர்நாடி என்று கொள்வதை விட்டு, இப்படி அவர்கள் நினைப்பதே அவர்கள் செய்யும் அடிப்படைத் தவறு. இதனால் தான் தத்தளிப்பும் தவிப்பும் ஏற்படுகிறது.

எது நல்ல பத்திரிகை?

பணம் சம்பாதிப்பதிலா? பிரதி விற்பதிலா? யாரிடம் எத்தகைய செல்வாக்கில்? யாருக்கு? சமூகத்தில் என்ன பயன் விளைவிப்பதில்? எது நல்ல பத்திரிகை என்ற கேள்வியைக் கேட்கிறோமோ அந்த நோக்கைக் கொண்டே பதில் அளிக்க முடியும்.

என்னைக் கேட்டால் எது எழுத்தாளர்களின் அபிப்பிராய உரிமையைக் காப்பாற்றுகிறதோ, எது எழுத்துக்கலையை திட்டமிட்டு வளர்க்கிறதோ, மக்களிடம் அறிவைப் பரப்புகிறதோ, பண்பாட்டை உயர்த்துகிறதோ, தூய முறையில் உற்சாகம் கொடுக்கிறதோ, எது நல்லது செய்யா விட்டாலும் சமுகத்திற்கு கேடு செய்யாதிருக்கின்றதோ, அதுவே நல்ல பத்திரிகை. குடிசைக் கைத்தொழில் ரீதியான பத்திரிகையே நல்ல பத்திரிகையாக இருக்க முடியும். (1958 தை சரஸ்வதி நான்காம் ஆண்டு மலரில் இடம் பெற்ற இக்கட்டுரை பாரிஸில் வெளிவரும் மௌனம் இதழில் மறுபிரசுரமாகியிருந்தது)

# தொடர்ந்தால் தொடரும்



**பாலசுந்தரன்**

கடந்த சில நாட்களாகவே மனதுக்கு சுகமின்றி இருந்தது. வெளியே ஒரு நண்பனாகவும் மனதுக்குள்ளே ஒரு காதலன் என்ற உருவகிப்புடனும் மேரியுடன் பழகுவது ஒரு சலிப்பை கொடுத்தது. மேரியின் உண்மை நிலை புரியாமையாலும் அவள் இதைப்பற்றி எதுவும் கதைக்க விரும்பாமையாலும் ஒரு துலக்கத்தை அடைய முடியவில்லை. வேலையிடத்திலும் படிப்பிடத்திலும் ஒரு பட்டும் படாமையுமான உறவே தொடர்ந்தது.

வழமைபோலவே இன்றும் வீடு வரும்போது தபால் பெட்டியை திறந்தேன் விளம்பர பிரசுரங்களால் நிரம்பியிருந்தது. அதனால் அவசியமான கடிதங்களை தேடி எடுக்கவேண்டும் தேடினேன். ஒன்று Bell Canada இன் Bill. மற்றையது ஊர் கடிதம். ஒரே சந்தோஷம் கடிதம் எழுதுவதைவிட வரும் கடிதத்தை வாசிப்பதில் இருக்கும் சுகமே சுகம். உண்மையில் கடிதமும் இன்னொரு மனம் அறிய பயன்படும் ஊடகம்தான்.

வீட்டுக்குள் நுழைந்து அவசர அவசரமாக ஊர் கடிதத்தை பிரித்தேன் அம்மா எழுதியிருந்தா. தொடர்ந்து வாசித்தேன்.

அன்புள்ளா சுதாவுக்கு,

நாங்கள் நல்ல சுகம் உங்கள் சுகத்திற்கு வல்லிபுர ஆழ்வாரை வேண்டுகிறேன் உங்கள் கடிதத்தை நீண்ட நாட்கள் காணவில்லை. இங்கு கடிதங்கள் தொலைவதுமுண்டு.

இங்கு நிலைமை வழமைபோலவே உள்ளது ஆனால் என்ன நேரமும் எதுவும் நடக்கலாம் இரண்டு தரப்பும் ஆயத்தங்கள் செய்யிது....

...நான் முன்னர் சொன்ன தமிழ் வாத்தியார் உனது தங்கையை கட்ட விருப்பம் தெரிவித்துள்ளார். சீதனம் எதுவும் வேண்டாமாம். மிகவும் நல்லவராம் சோலிசுரட்டு இல்லை தங்கச்சிக்கும் விருப்பம் நல்ல குடும்பம் ஆனால் அவர் தனது உழைப்பு எல்லாம் தனது தங்கைக்காகத்தானும். தனக்கு ஒரு முடிவு செய்யமுன்ன தனது தங்கைக்கு ஒரு முடிவு செய்யவேண்டியது தனது கடமையாம். தம்பி, நீ அவற்றை தங்கையை கட்டினால், தான் உன்ரை தங்கையை கட்டிறனும். தம்பி இப்ப தங்கைக்கும் வயசு 27 ஆகிப்போச்சு இது பொம்பிளைப்பிள்ளையளுக்கு மிகவும் அதிகம். எல்லாத்தையும் யோசிச்சு செய் உனது பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். எங்களுக்கும் வயது போட்டுதுதானே.

இப்படிக்கு அம்மா

இந்த பணயம் வைப்பு இன்னுமோர் தலையிடியாகவே அமைந்தது. எனக்கு நடப்பவற்றை யெல்லாம் யாரிடமாவது சொல்லி அழவேணும் போலிருந்தது. தமிழையும் அவரின் தங்கையையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நன்கு தெரியும். நீண்டகால குடும்ப நண்பர்கள் அவர் இப்படிப்பட்டவராக இருப்பார் என்று நான் நினைத்திருக்கவில்லை உறவுகளை பணயம் வைக்கிறார்.

அவரின் தங்கை தமிழ்செல்வி மிகவும் அழகுதான். நான் அறிய பலர் பின்னாலே சுற்றியிருக்கிறார்கள் ஆனால் அவள் ஒரு மிடுக்கானவள் படிப்பும் சுமாராக இருந்தது. அவளை மணம் முடிப்பதால் நான் அடையபோகும் நலன்கள் மிகமிக அதிகம். ஒரே பெண் சொத்துக்களும் அதிகம். நிச்சயமாக எனது புறச்சுகங்கட்கு குறை விருக்கப்போவதில்லை. ஆனால் அவளை நான் விரும்பவில்லை அவளை எனது வாழ்க்கை துணைவியாக கருதக்கூட முடியவில்லை என்றால் அது முடியாது. எனது கனவெல்லாம் மேரிதான்.

தொலைபேசி அழைத்தது அவ்வப்போது எடுத்து 'அறுக்கும்' எனது நண்பனே எடுத்திருந்தான். இன்றும் அறுக்கும் பாணியிலேயே கதைக்க ஆரம்பித்தான் எனது சோகங்களை கொட்டித் தீர்க்கக்கூடியவன் அல்ல இவன். இவனுடன் சுமாராக பேசுவேன் அவன் ஏதேவெல்லாம் சொன்னான். நான் அவனை என் வழிக்கு இழுத்தேன்.

"நீ மட்டும் ஏன் வீடும் வேலையும் என்று இருக்கிறாய்" என்றான்

"மற்றவர்கள் படுகிற கஷ்டத்தை பார்க்க நான் இப்படியே இருக்கலாம் என்று தோணுது" என்று சொன்னேன். அவ்வளவுதான். அவன் துளைக்க ஆரம்பித்தான் நான் எனது கதையையே எனது நண்பன் கதையாக மாற்றி சொன்னேன் முறாக கேட்டான்.

"டேய் தம்பி, உனது நண்பன் ஒரு முட்டாளடா. இதிலை என்னடா யோசிக்கக்கிடக்கு சும்மா கம்மெண்டு ஊரிலை உள்ளவளை கட்டுறது தானே. நீயே சொல்லுறாய் அவள் குணமான சொத்துக்காற பெட்டை எண்டு. உதை நாலுபேருக்கு சொன்னால் சிரிப்பினம் முடவன் கைத்தடியை தேடாமல் கண்ணாடியையே தேடுவான்" என்று தொடர்ந்தான்.

எனக்கு அவனின் முடிவு நடைமுறை சாத்தியம் அற்றதாகவே தென்பட்டது. என்றால் அதை எனது வாழ்வில் அமுல்படுத்த முடியவில்லை எனக்கு வேண்டும் மேரி.

உடனே அவளிடம் கதைக்கவேண்டும் போலிருந்தது. தொடர்பு கொண்டேன் ஆனால் கூறுவதற்கு காரணம் எதுவும் இருந்திருக்கவில்லை.

"ஹலோ" என்றாள்.

"ஹாய் மேரி இது சுதா" என்றேன்.

"ஹாய் நீ எப்படி சுகம்? அங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்" என்றாள்.

"நான் இங்கு வீட்டு பாடங்கள் செய்துகொண்டிருக்கிறேன். என்றால் செய்ய முடியவில்லை உன்னிடம் உதவி கேட்கத்தான் எடுத்தேன்" என்றேன். அவசரத்திற்கு ஒரு காரணம் கிடைத்தது பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த மகத்துவம்

"நானும் முயற்சித்தேன் முடியவில்லை. உன்னைத்தான் நம்பியுள்ளேன்" என்றாள். அவளே தொடர்ந்தாள் "நீ இப்போ ஓய்வாக இருந்தால் நான் உங்கு வருகிறேன் நாம் சேர்ந்து செய்தால், செய்து முடிக்கலாம்" என்றாள்.

அவள் வீட்டுக்கு வருவதில் சந்தோசம். முன்னரும் அவ்வப்போது வந்துள்ளாள் வீட்டை சற்று சுத்தமாக்கினேன். படிப்பைவிட அவளின் நெருக்கம் தேவைப்பட்டது. ஆனால் அந்த நெருக்கம் படிப்புக்கும் பயன்பட்டால் அதில் வெறுப்பேது? அவள் இன்னமும் எனக்கு உதவுவதும் என்னை மதித்து நடப்பதும் ஒரு சுகத்தை கொடுத்தது. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தை கொடுப்பதை விரும்புவர்கள் அல்லவா.

கீழே அழைப்புமணி அடித்தது கதவை திறந்து விட்டேன். உள்ளே வந்தாள். அவருடன் இன்னுமொருவன் வந்தான் இதுவரை காணாதவன்.

"இது சுதா, இது எனது நண்பன்....." என்று தொடர்ந்தாள் தலை சுற்றியது இது ஒரு புதுக்கதை யார் இவன் வெறும் நண்பனா அல்லது.... நினைக்கவே பிடிக்கவில்லை தலைகால் புரியவில்லை. படிக்கும் மனநிலையும் இல்லை அப்போது அவன் "பிறகு வந்து கூட்டி செல்கிறேன்" என்று திரும்பினான்" மேரி மன்னிக்க வேண்டும் எனக்கு இன்று காலை ஒரு கடிதம் வந்திருக்கு அது விடயமாக உனக்கு தொடர்பு கொண்டேன் நீ அதற்குள் வெளிக்கிட்டுவிட்டாள்" என்றேன் அவளை உடனே திருப்பிவிட முடிவு.

"பரவாயில்லை பின்னர் செய்வோம்" என்று சிரித்துவிட்டு அவள் அவனுடன் போய்விட்டாள்.

தொடரும்

## அம்மணா..

ஐயோ என் இனிய தேசமே!
உன்னை விளிப்பதற்கு
விழித்தெழு
தரித்து இடம் பிடியார்
உள்ளவரை நீ
தரித்திரம் பிடித்த தேசம்தான்
சரித்திரம் சிதைந்த தேசம்தான்.

சிதம்பரம் வடிவேலனார்.

## காலம் பதிய மறந்த மனிதர்கள்

என்ன செய்வேன்?
என் மனைவியே- உன்னை
முத்தமிட, உன் தலையினைக்கோதிவிட
இன்னும் என்னென்னவோ எல்லாம்
விரும்புகிறேன்- ஆனால்
உன் தலையில் எழுதியதை மாற்ற
முடியுமா?
என் இனிய மனைவியே-நான்
என்ன செய்வேன்??
உன்னை விரும்புகின்றேன்
ஆழமாய் விரும்புகின்றேன்-ஆனால்
தவிர்க்க முடியாது விழுந்து விட்ட
வன்முறையை
விரட்ட வேண்டியிருக்கின்றதே
அந்த விரட்டலில்...
இதோ...
தெருவில் பிணமாய் கிடக்கின்றேன்

கடல் புத்திரன்

## போன துடக்கு, போகாத பெருமை

குலம் கோத்திரம் பார்த்து
பெண் எடுத்தாச்சு
வீட்டுக்கு வீடு சொல்லி
விருந்து வைச்சாச்சு
பேர் சொல்ல
ஓர் பிள்ளை பெத்தெடுத்தாச்சு
மார்க்கண்டன் வந்து
மயிர் எடுத்துப் போனாச்சு


சுகன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> 'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள்.
> எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'



# கியூறியஸின் பட மர்மம்!

# சிரசாசனம் செய்ய ஒரே வழி

அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜீ

சரிநிகர் இதழில் 'அலை' யேசுராசாவின் கவிதை இதழ் பற்றி சூர்யா எழுதியிருந்தது பற்றி அறுத்திருந்தேனா! 'யாழ்ப்பயணம் சென்று யேசுராசாவை நேரடியாகச் சந்தித்தவர் இதை வாசிப்பது நல்லது என்றும் எழுதியிருந்தேன். அந்தக் கருத்துக்களை மறுக்கும் விதத்தில் அந்த 'இங்கே சிலர்' அக்கவிதை இதழின் சில கவிதைகளை ம.பி செய்து யேசுராசாவுக்கு வக்காலத்து வாங்கியிருக்கின்றனர். யேசுராசா முன்பு புதுவை, முருகையன் போன்றோரை வரட்டு வாதிகள் என்றதையும் இப்போது புலிகளுக்கு வால் பிடிக்கிறார்கள் என்பதையும் சூர்யா சுட்டிக் காட்டியிருந்தார். இதை மறந்து தற்போது புலிகளுக்கு வக்காலத்து வாங்குகிறார் என்ற காரணத்துக்காக யேசுராசாவுக்கு வக்காலத்து வாங்கி, 'போர்ச்சூழலில் இருந்து கொண்டு கவிதை எழுதுகிற நிஜங்களை' கொச்சைப்படுத்தக்கூடாது என்கிறார். இவர் யாழ்ப்பாணம் சென்று பார்த்த நிஜம் என்ன என்பது உங்களுக்குத் தெரிந்ததே.

புலிகளின் மனித உரிமை மீறல்களை விமர்சிப்பதையும் தேடகத்துடன் இணைந்து செயற்படுவதையும் மட்டும் வைத்து இலக்கியத்தை அளவிட்டு 'விமர்சனம்' எழுதுகின்றவர்கள் இப்போது யேசுராசாவுக்கு..!

★ ★ ★

இதே யேசுராசா எழுதிய கவிதை ஒன்று இம்முறை தேடலில் வந்திருக்கிறது..

**நிச்சயமின்மை**

நேற்று
அங்கும் இங்கும் பலர்
கொண்டு செல்லப்பட்டனர்:
உனக்கும் எனக்குங் கூட
இது போல் நிகழலாம்.
திரும்பி வருவோமா?
மறுபடி நாளை
சூரியனைக் காண்போமா?
ஒன்றும் நிச்சயமில்லை.
எமதிருப்பு
'அவர்களின்' விருப்பில்.

தங்களுக்கு இது சமர்ப்பணம். மனப்பாதிப்புகளிலும் மனநெருக்கடிகளிலும் உண்மைக் கலை வேர் கொள்கிறது என்று யேசுராசா சொல்வது இதைத் தானே? ஆமா.. உங்களுக்குத் தான் 'இதைப் பார்க்க முடியாது' என்பது போக, கேள்விப்பட்ட தகவல்கள் ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்குமே.. ஏன் புலிகள் வதை முகாம் வைத்திருந்தால் உங்களைக் கூட்டிக் கொண்டு போய் காட்டுவார்கள் என்ற எதிர்பார்ப்பு வேறு இருந்ததோ?

★ ★ ★

போர்க்காலச் சூழலில் எத்தனை குழப்பங்கள்.. ஒரு புறத்தில் விடுதலைப் போராட்டம், கொச்சைப்படுத்தக் கூடாது என்கிறார்கள். மறுபுறத்தில் 'சனியன் பிடிச்ச சண்டை நிக்காதா?' என்கிறார்கள். விடுதலைப்போராட்டம் என்பது வெறும் 'சனியன் பிடிச்ச சண்டை தானா?'. அல்லது NIMBY தானா? அதாவது Not In My Back Yard.. எனது கொல்லைப்புறத்தில் நடக்காதவரைக்கும் எனக்கு பிரச்சனை இல்லை என்பதா? எனக்கென்றால் ஒன்றுமே புரியவில்லை. உலகம் அரியாலைக்குள் மட்டும் இல்லை. கொஞ்சம் விரிந்தது! There are a lot of things beyond the "Cadjan Curtain".

★ ★ ★

'கவிதை'யில் ஒரு கவிதை..

அவதானமாய் மிகக் கவனமாய் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைப்போம். இது வரலாறு செல்லும் வழி. இந்தப் பாதையை நாம் மறுபடியும் கடக்க முடியாது.

இந்தக் கவிதையைப் பார்த்தால்ஏதோ ஞாபகம்வரலை? நாம் கடக்க வேண்டியது நெருப்பாறு என்பது எங்களுக்குத் தெரியும்.. ஆனால் மக்கள் என்ற கவசம்.. ஏன் வம்பு? ★ ★ ★

சரிநிகரில் வந்தது பற்றி மனம் குமுறுபவர்கள் கொஞ்சக் காலத்திற்கு முன்னர் செந்தாமரையில் வந்த கவிதைகளின் தொகுப்பு ஒன்றைப் படிக்கவில்லையோ? இம்முறை தேடலில் ஒரு கவிதை மறுபிரசுரமாயிருக்கிறது.

... சாவுகளைக் கூட
வீரம் என்றும்
கோழை என்றும்
தரம் பிரித்தவனே..
மனிதனை விட
மண்ணே உனக்குப் பெரிதென்றால்
இப்போதே நீ
மரணித்துப் போய் விடு!...
உன் இறப்பால்
இரக்கமுள்ள எந்த
மனிதனும் அழக் கூடும்
ஆயினும்
நான் சிரிப்பேன்.

இந்தக் கவிஞரின் கவிதைகள் செந்தாமரையில் 'கவிஞரின் கருத்துக்கள் செந்தாமரையின் கருத்துக்கள் அல்ல' என்ற குறிப்பு இல்லாமலே வெளிவந்தது. 'மண்ணை விட்டு அகன்று போர்க்காலச் சூழல் பற்றி' சொல்கின்ற இக்கவிதைகள் பற்றி மௌனம் ஏனோ? ஒருவேளை கருத்துச் சுதந்திரத்திற்கு அளிக்கின்ற மதிப்போ?

★ ★ ★

புலிகள் தன்னிடம் பணம் வாங்கவில்லை என்று தலையில் அடித்துச் சத்தியம் செய்தவர் ஒரு புறமிருக்க... இங்கே இருந்து சென்ற பல புலி ஆதரவாளர்கள் லட்சக் கணக்கில் கொடுத்துவிட்டு மெல்லவும் முடியாமல் விழுங்க முடியாமல் இருக்கின்றனர். இவர்களில் முக்கிய இடங்களைச் சேர்ந்த பலரும் அடக்கம். போதாக்குறைக்கு கனடாவில் கொடுத்தோம் என்று சொல்லி 'அங்க குடுத்தது பற்றி எங்களுக்குக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவலையில்லை, முதலிலே இங்க குடு என்று மிரட்டப்பட்டவர்களும் உண்டு.

இன்னொரு குடும்பத்தினர் கொடுத்த பவுணில் ஒரு மஞ்சாடி குறைந்தது என்பதற்காக அனுமதி மறுத்த கதையும் உண்டு. தீக்கோழி போல மண்ணுக்குள் தலையைப் புதைக்காதீங்கப்பா!

★ ★ ★

கனடாவில் சீர்கெட்டுக் கிடக்கின்ற தமிழச்சாதியை தலைநிமிர்த்த புதிய பாரதி ஒருவர் தோன்றியிருக்கிறார். சொன்னால் சிரிக்கக்கூடாது. 'இங்கே சிலருக்கு தமிழ் மக்களுக்கு தங்கள் எழுத்து மூலம் வழிகாட்டாவிட்டால் நித்திரையே வராது.. அதாவது புலிகளை ஆதரிக்கும்படி.. தாங்கள் இல்லாவிட்டால் தமிழினம் தறிகெட்டுவிடுமே என்ற எண்ணம் எப்போதும்.

புதிதாக ஒரு பத்திரிகை.. லண்டன் பத்திரிகையின் மறுபிரசுரம். . வழமை போல் ஆர்வம் காரணமாக ஆசிரியர் யார் என்று பார்த்தால்.. புதிய பாரதி என்று இருந்தது. யாரப்பா இந்த 'சுத்து' ஆனந்த பாரதி என்று பார்த்தால்... ஆசிரிய தலையங்கத்தில் பூடகமாக இருந்தது. உள்ளே நடிகர் ஒருவரின் வாழ்த்துச் செய்தியில் போட்டு உடைத்து விட்டார். யார்? கவிராயலிங்கனார். ('பொங்கலுக்கு வாழ்த்துச் சொல்ல எப்படி மறக்கலாம்' புகழ்)

முன்பு ஈழமுரசில் உதவி ஆசிரியர்.. பின்பு ஈழமுரசு 'சூரியனைக் கண்ட 'பனி' போல மறைந்து விட்டது. பிறகு இந்தப் புதிய முயற்சி. . சொந்தப் பெயரைப் பாவிப்பதில் அப்படி என்ன தான் பயமோ? சரி, புனைபெயரைத் தான் பாவிக்கிறோம்.. அதை கொஞ்சம் வித்தியாசமாக.. ஊகூம்.. அதுவும் சரி தான். பத்திரிகை உலகுக்கும் கதாநாயகர்கள், வில்லன்கள் (கியூறியஸ் மாதிரி) போல கோமாளிகளும் தேவை தான். கவுண்டமணி– காந்திமதி (?) மாதிரி.

★ ★ ★

சென்றவாரம் புலி ஆதரவாளர் ஒருவர் பிறந்த நாள் விழா ஒன்றில் புழுகிக் கொண்டிருக்க.. சூழ இருந்த சில விஸ்கோத்துக்கள் மெய் சிலிர்க்க கேட்டுக் கொண்ட விடயம் ஒன்று.. அங்க புலியள் ஹைவே போடுறாங்கள், எயர்போட் கட்டுறாங்கள் என்று விளாசிக் கொண்டிருந்தார். விசயம் தெரியாமல் 'மெய்யோ?' என்று கேட்கப் போக.. ஏன் உலகத்தமிழர் வாசிக்கேலையோ என்று நக்கல் பார்வை வேறு..

உலகத்தமிழரைப் பார்த்தால்.. புலிகளின் தமிழீழக் கட்டுமானம் பற்றி ஒரு கட்டுரை.. ஒரு உத்தேசத்திட்டம். அவ்வளவு தான். அதற்குள் கட்டி முடிந்து நேரே ரொறன்ரோவிலிருந்து புறப்பட்டு பலாலியில் இறங்கி பலாலி ஹைவேயில் லிமோவில் போய் ஊருக்கு சப்வேயில் போகிற கதை.

உத்தேச திட்டப்படி வடதமிழீழத்திலிருந்து தென் தமிழீழம் வரை (அது தான் யாழ்ப்பாணத்திலிருந்து அம்பாறை வரை) புகையிரதப் பாதை, ஹைவே கட்டப்படும். யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பில் சர்வதேச விமானநிலையங்கள், மன்னார், மண்டைதீவு, மாங்குளம் போன்ற இடங்களில் உள்ளூர் விமான நிலையங்கள்.. துறைமுகங்கள் என்று திட்டம் அந்த மாதிரிப் போகிறது.

திட்டம் நல்லது. முதலில் கொஞ்சம் யதார்த்தமாகச் சிந்திப்போம்.. விமான நிலையங்கள், துறைமுகங்கள், பெருந்தெருக்கள் பொருளாதாரம் உச்சநிலையடையும் போது சில நேரங்களில் அவசியப்படலாம். சிறிய நாட்டுக்கு மூன்று சர்வதேச விமான நிலையங்களா? ஒரு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப போக்குவரத்து நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என்பது உண்மை. ஆனால் தேவைக்கு அதிகமான செயற்பாடுகள் யானையைக் கட்டித்தீனி போடும் விளையாட்டுக்கள். ஆங்கிலக் கால்வாய்க்கு கீழாக பாதை போடுகிறார்கள். காரணம் ஐரோப்பாவிற்கும் இங்கிலாந்துக்குமான வர்த்தகப் போக்குவரத்து அப்படி. அதைப் பார்த்து விட்டு 'சேதுவை மேடுறுத்தி வீதி சமைக்கப் போவது' வெள்ளை யானை விவகாரம் தான்.

அதுசரி.. இப்போதைய பிரச்சனை கட்டி எழுப்புவதா? இருப்பதைக் காப்பாற்றிக் கொள்வதா? இருக்கின்ற கட்டமைப்பே திட்டமிட்ட மாதிரி இரண்டு தரப்பினராலும் சிதைக்கப்படுகிறது. தற்போதைய பிரச்சனை அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது.. முதலில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் வீதிகளைப் பராமரித்து போக்குவரத்துக்கு உகந்ததாக்க வேண்டும். அதன் பின்பு ஹைவேக்கள் பற்றி சிந்திக்கலாம்.

இவ்வாறான திட்டங்கள் ஒருவேளை புலி ஆதரவாளர்களை மெய் சிலிர்த்து பரவசப்படுத்தி பணம் சேர்க்க உதவலாம். வேறொன்றுமில்லை.

இங்குள்ள ஒரு தமிழ் பெண் பத்திரிகையாளர் 'தலைப்பாகை கட்டிக் கொள்ளுமுன் கோவணத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்' என்று சொன்னது இதைத் தானோ?

★ ★ ★

அனாமதேய துண்டுப்பிரசுரங்கள் மலிந்து விட்டன. அதுவும் தமிழ் எழுத்து, பாக்ஸ்! போதுமே.. பொட்டம்மானே! மாத்தையா அண்ணையை விடுதலை செய்! என்று ஒன்று. பொட்டம்மானின் சதியே இது என்றும் தலைவருக்கு இது தெரியும், தகுந்த விதத்தில் பொட்டம்மானைக் கவனிப்பார் என்றும் மாத்தயாவை விடுதலை செய்யாவிட்டால் போராட்டத்திற்கு பண உதவி செய்ய மாட்டோம் என்றும் 'மாத்தயா அண்ணையின் நண்பர்கள்' வெளியிட்டிருக்கிறார்கள். 'மாத்தயா அண்ணையின்' தம்பிகளா? நண்பர்களா?

எனக்கென்னவோ, ரஜனி இங்கு வந்த போது வெளிவந்த நோட்டீஸிற்கும் இந்த நோட்டீஸிற்கும் சம்பந்தம் இருக்கும் போல் படுகிறது. (எதற்கும் வேறு font, lay out களை முயற்சி பண்ணிப் பாருங்க!)

★ ★ ★

இன்னொன்று.. புலிகளின் களத்தில் சஞ்சிகையைக் கிண்டலடிக்க 'குளத்தில்' என்ற பெயருடன் லண்டனில் இருந்து... களத்தின் கயிறுகளைக் கத்தரிக்க வந்துள்ள தா(வா)ள் என்று கோஷத்துடன்.

83 ஆடி கலவரத்தை நினைவுகூரும் மாபெரும் எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு 'களத்தில்' அன்புடன் வேண்டிக் கொண்டுள்ளது. 'வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த தமிழ் விசாரணைக்கைதிகளை துடிக்கத் துடிக்க வெட்டியும் கண்களைத் தோண்டியும் வதை செய்தமை 1983 ஆடி இன அழிப்பின் அங்கமே' என்று களத்தில் கூறியுள்ளதாம். 'படுகொலைகள் பற்றி பேசும் இதே புலிகள் 86 சித்திரையில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களை தெருவீதிகளில், மக்கள் முன்னிலையில் உயிரோடு எரித்ததை, 87 பங்குனியில் அறை ஒன்றில் பூட்டி வைக்கப்பட்டிருந்த 53 பேரை துடிக்க துடிக்க சுட்டுக் கொன்றதை மறுக்க முடியுமா?' என்று 'குளத்தில்' கேள்வி எழுப்பியுள்ளது.

ஆடி 25 ல் ஒற்றையாட்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியலமைப்புக்கு எதிராகப் பேசுவது குற்றம் என சிறிலங்கா பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டமானது, தமிழ் மக்களின் அடிப்படைச் சுதந்திரங்களான பேச்சுச்சுதந்திரம், அரசியல் உரிமை என்பவற்றை மறுத்ததாகும் என களத்தில் கூறியுள்ளதாம்.

பதிலாக 'அரசியல் உரிமை பற்றி பேசும் இதே புலிகளால் பலர் கோரமாகக் கொல்லப்பட்டார்கள், பலர் வதைமுகாம்களில் இன்றும் வாடுகிருர்கள். அடிப்படைச் சுதந்திரங்களை மட்டுமல்ல, நடமாடும் சுதந்திரத்தையும் தமிழ் மக்கள் இழந்து குடாநாட்டில் சிறைக்கைதிகள் போல் உள்ளார்கள். தமிழ் மக்களுக்கு இந்த அடிப்படைச் சுதந்திரங்களை மறுப்பவர்கள் யாருமல்ல, எமது விடுதலைக்காகப் போராடும் புலிகள் தான்' என்கிறது குளத்தில்.

'உலகின் மனச்சாட்சி உள்ள மனிதர்களும் சர்வதேச சமூக அரசியல் தலைவர்களும் இந்த உண்மையை உணர வைக்கவென வைக்கப்படும் எழுச்சிப் பேரணிகளில், கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டியது, கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் ஒவ்வொரு தமிழரதும் தேசக் கடமையாகும்' என்று களத்தில் சொல்லியுள்ளதாம்.

புலிகள் தான் தமிழர்களில் கட்சி பேதம் இல்லை, ஆக இருப்பது தியாகிகள், துரோகிகள் பேதம் தான் என்கிருர்கள். இப்போது அந்த பேதங்களை மறக்கும்படி கேட்கிருர்களே!

★ ★ ★

கொஞ்ச நாளாய் ஒரு மாற்றம் இங்கே அவதானிக்கப்படுகிறது. முன்பு மற்ற இயக்கங்கள், கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அஞ்சலி செலுத்துவது கூட ஒரு காலத்தில் முடியாததாயிருந்தது. தாயகம் தான் அவற்றையும் பிரசுரித்து வந்தது. இப்போது பகிரங்கமாக கடைகளில் மாற்றியக்க அஞ்சலி நோட்டீஸ்களைக் காணக் கூடியதாக இருக்கிறது. கண்ணாடிகளில் ஒட்டப்பட்டிருக்கிறது. பத்திரிகைகள் அஞ்சலிகளை வெளியிடுகின்றன. (ஆண்டு வித்தியாசம் பாராமல்.. 87க்கு பிந்தியா? முந்தியா? என்று) இப்போது கண்ணாடிகள் உடைக்கபபடுவதும் இல்லை. பத்திரிகைகள் தடை செய்யப்படுவதுமில்லை.

ஐரோப்பாவில் பல பிரசுரங்கள் துணிச்சலாக வெளிவருகின்றன. இது எதைக்குறிக்கிறதோ?

★ ★ ★

மாத்தயா என்றதும் ஞாபகம் வருகிறது. ஜுலை 20, 1944ல் ஹிட்லரைக் கொல்ல முயற்சி நடைபெற்றது. ஹிட்லரின் படைகளின் பிரதம அதிகாரியான ஸ்ரவுபன்பேர்க் ஹிட்லர் முழு ஜேர்மனியையும் தன் போர்வெறிக்கு இரையாக்குமுன்னர் நிறுத்த வேண்டும் என்பதற்காக மற்றும் சிலருடன் சேர்ந்து ஹிட்லரைக் கொல்ல சதி செய்தார். அவருடன் சேர்ந்தவர்கள் இன்னொரு முன்னாள் பிரதம அதிகாரியான ஜெனரல் லுட்விக் பெக், மற்றும் சில இராணுவ அதிகாரிகள், லீப்சிக்கின் முன்னாள் மேயர் (சதி வெற்றி பெற்ருல் இவர் நாட்டுத்தலைவராக பொறுப்பேற்பதாக இருந்தது) போன்ருேர் இந்த முயற்சியில் இறங்கினர். ஹிட்லர் மாநாடு நடத்திய இடத்தில் பிரீப்கேஸ் ஒன்றில் குண்டை வைத்து விட்டு ஸ்ரவுபன்பேர்க் சென்று விட்டார். குண்டு வெடித்தது. நால்வர் கொல்லப்பட்டனர். ஆனால் அந்த பலமான மேசை வெடிப்பை தாங்கிக் கொண்டது. ஹிட்லருக்கு காதுச்சவ்வு வெடித்து விட்டது. அவ்வளவு தான். தனது முயற்சி தோல்வி கண்டதை அடுத்து அவர் பேர்லினுக்கு சென்று புரட்சிச் சதி நடத்த முன்னர் சுற்றி வளைக்கப்பட்டு அவரும் மற்றும் ஐவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஆனால் ஹிட்லரை மக்கள் பூரணமாக நம்பியதால், இவர்களை துரோகிகள் என்றே கணித்திருந்தனர். ஆனால் தற்போது இவர்கள் மாவீரர்களாக அடையாளம் காணப்படுகிருர்கள். 'ஜேர்மன் வரலாற்றின் இருண்ட பகுதியில் இது ஒரு வெளிச்சம், அந்த நேரத்து இராணுவத் தலைவர்கள் கொடுங்கோலனைக் கொல்ல முயற்சித்தார்கள் என்பது பற்றி இராணுவம் பெருமைப்படுகிறது' என்கிருர் தற்போதைய இராணுவ பிரதம அதிகாரி. இந்த புரட்சி வெற்றி பெற்றிருந்தால், இரண்டாம் உலக யுத்தத்தில் இறந்தவர்களில் பாதிப்பேர் உயிர் தப்பியிருப்பார்கள் என்கிருர்கள்.

'கட்டுப்பாடின்றி இருப்பது இராணுவ பாரம்பரியம் என்று நாங்கள் இராணுவத்தினருக்கு சொல்வதில்லை. ஆனால் முன்பு பல தத்துவஞானிகள் ஆண்டாண்டாக சொல்லி வந்தது போல, அரசாங்கத்திற்கான விசுவாசம், தலைவருக்கான விசுவாசம் என்பதற்கும் அப்பால் பல கடமைகள் இருக்கின்றன என்பதை கற்பிகிறோம். அது மனிதத்திற்குரிய கடமை, மனித உரிமைகளுக்குரிய கடமை' என்கிருர் ஜேர்மன் இராணுவ பிரதம அதிகாரி. ஹிட்லர் மீதான வெறும் விசுவாசம் எவ்வளவு அழிவைக் கொண்டு வந்தது...? வெறும் தலைமைக்கான விசுவாசம் என்பதை விட, மனிதத்திற்கான கடமை என்பதை மாத்தயா உணர்ந்திருந்தாரோ என்னவோ? ஒரு வேளை இன்னும் ஒரு ஐம்பது ஆண்டு கழித்து மாத்தயாவும் இவ்வாறு புகழப்படக் கூடும். யார் கண்டது?

★ ★ ★

ஹிட்லருக்கு குண்டு வைத்தது பற்றியதும் ஞாபகம் வருகிறது.. சமீபத்தில் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த வாசகர் கடிதம் ஒன்றில்... நிக்கரகுவாவின் சாண்டினிஸ்டாக்களுக்கு எதிராக போராடிய கமாண்டர் ஸீரோ எனப்பட்ட ஏடன் பாஸ்டோரா தன் நாட்டை விட்டுக் கொடுக்காமல் போராடினார் என்று பிரபாகரனுடன் ஒப்பிடப்பட்டிருந்தது. (அதுசரி, எழுதியவரை நான் ஐரோப்பிய நாடொன்றில் சந்தித்திருப்பேனு? சுமார் எட்டாண்டுகளுக்கு முன்னர் புலிகள் நடத்திய கூட்டம் ஒன்றில் நடந்த காரசாரமான விவாதம் ஒன்றில் கியூறியஸ் கலந்து கொண்ட போது, ஒருவருடன் நடந்த உரையாடலில் இருவருமே பாஸ்டோரா பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். ஒருவேளை அவர் தான் இவரோ?)

பாஸ்டோரா சாண்டினிஸ்டுகளுக்கு எதிரான போராட்டத்தில் 'எந்த யுத்தத்திலும் வெற்றி பெறவில்லை' என்பதால் தான் அவருக்கு 'கமாண்டர் ஸீரோ' என்ற பட்டப் பெயர் வந்தது. பின்னர் சி.ஐ.ஏ மற்றக் குழுக்களுடன் சேர்ந்து இயங்குமாறு கேட்டுக் கொண்ட போது, இவர் மறுத்தார். இதனுல், தனது மறைவிடத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடொன்றில் கலந்து கொண்ட போது குண்டு வெடித்து காயங்களுக்குள்ளானுர். தூக்கிச் செல்லும் போதும் 'வெற்றி' என்று விரல்களைக் காட்டிச் சென்றவர், பின்னர் ஒதுங்கிக் கொண்டு விட்டார். பின்னர் தேர்தல் வந்து சமாரோ போட்டியிட்ட போது தான் மீண்டும் நாடு திரும்பினுர். இவர் போராடியது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாருக்கோ எதிராக! பதவியில் அமர்ந்தது வேறுயாரோ! இருந்தாலும் தான் தலைவனாக வேண்டும் என்பதற்காக எல்லாவற்றையும் குழப்பியடிக்கவும் இல்லை. ஒதுங்கிக் கொண்டு விட்டார். எனவே பிராந்திய, சர்வதேச நிலைகளைக் கணக்கில் எடுக்காது 'முடிந்த முடிவுதான்' என்று போராடினால் முடிவு வேறு விதமாகும் என்றும் கொள்ளலாமே! ஒப்பீடுகள் நல்லது தான்! ஆனால் நிபந்தனைகளும் கணக்கிலெடுத்தால் நன்று!

★ ★ ★

தொழிலதிபர் என்றால் சினிமா நடிகையைத் திருமணம் செய்பவர் என்று குமுதம் டாவி டிக்ஸில் போட்டிருந்தது. இப்போ என்ன வென்றால், என் மாஜிக் கனவுக்கன்னி பானுப்பிரியா தொழிலதிபர் ஒருவரைத் திருமணம் செய்யப் போகிறாராம். அதற்கு பானுப்பிரியா வின் சகோதரன் தான் மாப்பிள்ளை தேடினாராம். கியூறியஸின் ராசி அப்படி. மாஜிக் காதலிகளின் அண்ணன்மார் தான் வில்லன்கள். கியூறியஸ் காதல் கொண்டிருக்கும் போதே எப்படியாவது திருமணம் செய்து வைத்து விடுவார்கள்.

விசயம் தெரியாமல் கடைக்காரர்களையும் கிண்டல் பண்ணியாச்சு. இல்லாவிட்டால், ஒரு வீடியோ கடையைப் போட்டு தொழிலதிபராகி, இந்திய நட்சத்திரங்களைக் கூப்பிட்டு கலைநிகழ்ச்சி நடத்தி... எங்கிருந்தாலும் உன்னை நான் அறிவேன். உன்னை என்னையல்லால் வேறு யாரறிவார்?

★ ★ ★

முருங்கைக்காய் மான்மியம் பாக்கியராஜின் படத்தைப் பார்த்து ஆரம்பித்தது. முன்பு முருங்கைக்காய் மான்மியம் பற்றி வீட்டில் தந்தையாரும் பேரனும் பேசிக் கொண்ட போது காதை எறிந்துவிட்டு போர்வைக்குள் பதுங்கி தூங்குவது போல பாசாங்கு செய்ததுண்டு. பின்னர் படம் பார்த்துத்தான் விசயமே பிடிபட்டது. ஆனால் உண்மையில் முருங்கைக்காய் மாலைக்கண் நோய்க்கு நல்ல மருந்து. விட்டமின் ஏ அதிகம் கொண்டதால் இந்த பயன். இதன் காய் மட்டுமன்றி பூவும் தான். வழமையில் வாதம், விசகடி போன்றவற்றுக்கும் பயன்பட்டது. காயங்களுக்கு முருங்கைக்காயை அரைத்து கட்டுப் போட்டால் மாறுமாம். இப்போது இந்தியாவில் காட்டு ஆய்வு, கல்விக்கான இந்திய நிறுவனம் முருங்கைக்காய் பற்றி ஆராய்ச்சி செய்து வருடம் பூராவும் காய்க்கக் கூடிய முருங்கை மரங்களை உற்பத்தி செய்திருக்கிறது. புதிதாக ஐந்து மர வகைகள் இந்த நிறுவனத்தினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முருங்கைக்காய் சாப்பிட்டு பயனடையுங்கள். ரிஷி அஜமாமிச லேகியம் மாதிரி... ஆண்மைக் குறைவா.. இளமையில் செய்த தவறுகளால் வருந்துகிறீர்களா.. உடனே முருங்கைக்காய்! யாழ்ப்பாணத்திலிருந்து நேரடியாக விசேடமாகத்தருவிக்கப்பட்ட பிறெஷ் முருங்கைக்காய் எங்கும் கிடைக்கும். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்!

★ ★ ★

பலஸ்தீனத்தில் ஓரளவுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சி.. யசீர் அரபாத்தின் தலைமையில் நிர்வாகம்.. அங்கேயும் பத்திரிகைகளுக்கு சிக்கல்கள்.. இரண்டு பத்திரிகைகளை அரபாத்தின் நிர்வாகம் தடை செய்திருக்கிறது. ஒன்று ஜோர்தானை ஆதரிப்பது, மற்றது அரபாத்தின் சமாதான ஒப்பந்தத்தை கண்டிப்பது.. பத்திரிகைச் சுதந்திரத்தின் மீதான இந்த அடியை பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட பெண்மணி (பெயர் ஞாபகமில்லை, டி.வியில் பார்த்திருப்பீர்கள்.. ஹனன் அஸ்ரவி?) 'மனித உரிமை மீறல்' என்று கண்டித்திருக்கிறார். வானொலியும் விசயம் தெரியாமல் இன்னொரு தீவிரவாதத் தலைவரான அகமட் ஜாப்ரிலின் வானொலி ஒலிபரப்பாகும் அலை வரிசையில் ஒலிபரப்பப் போக, ஜப்ரிலில் கொதிக்க, ஜகா வாங்கிக் கொண்டனர். தொலைக்காட்சியும் இதே பிரச்சனை தான். திரை முழுவதும் அரபாத்தின் புகழ் பாடல் தான்.

மொத்தத்தில் அதிகாரம் கையில் கிடைத்ததும் தங்கள் சுயரூபத்தைக் காட்டுகின்றனர். ஈழம் கிடைக்காமலே இந்த நிலை நம் நாட்டில் என்றால்.... மமா மியா!

★ ★ ★

கியூறியஸ் போட்ட படத்தைப் பார்த்து மண்டையை உடைத்துக் கொண்டிருப்பீர்கள். பலருக்கு இன்னமும் விசயம் பிடிபடவில்லை. சுவரில் படத்தை ஒட்டி விட்டு, தலைகீழாய் நின்று பார்க்கவும். விசயம் பிடிபடா விட்டாலும், மூளைக்கு கொஞ்சம் இரத்தமாவது போகட்டுமே. (ஜெயந்திலன் கதையை வாசியுங்கள்)

*This newspaper is published by Georgicka communications.*
*A member of Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
Georgicka communications
*P.O.Box 1031, Station "F",*
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216*
*@Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


இலங்கை, இந்திய, கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்! மலிவு விலைகளில்!!

# அன்ரனி பிறதர்ஸ்

★ உடன் மீன், இறைச்சி, மரக்கறி, பழவகைகள்

★ போட்டோக்கொப்பி, ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள வீடியோக்கள் வாடகைக்குப் பெறலாம்

★ லேசர் இசைத்தட்டுக்கள் மலிவு விலையில்


★ தமிழக, இலங்கை வாரப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்தும் உடனுக்குடன்

★முத்திரை, சிகரெட், TTC Tickets, Lottery Tickets

## ANTONY BROTHERS

வாரத்தில் 7 நாட்களும்
காலை 9 மணி முதல்
இரவு 11 மணி வரை

**1472 Queen St West (Queen/Lansdowne)**
**Toronto, Ont. M6K 1M4**
**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




## ANTONY BROTHERS FASHION HOUSE

1484 QUEEN ST WEST
**Tel:(416) 588 0310**

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான உடைகள்,

சுவாமிப் படங்கள், பரிசுப் பொருட்கள், பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாக்கள்

**அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள**

www.tamilarangam.net

SIVA'S TRADING CO LTD

# ஸ்காபரோ நகரின் தன்னிகரற்ற தமிழ் வியாபார நிலையம்

# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

SIVA'S TRADING CO LTD
321-2739

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

**அனைத்துப் பொருட்களும் மலிவுவிலையில்**

3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)
TEL:(416) 321 2739

# P.S.T.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின்
மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ், இந்தி,
மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்

5210 FINCH AVE EAST #23
(FINCH/MIDDLEFIELD)
TEL:609-0141

VIDEO TRANSFER
(ANY SYSTEM)
$8.99

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்